CONNEMARA PUBLIC LIBRARY
3 -JAN 1963
MADRAS

# திருக்கோயில்


"என்கடன் பணி செய்து கிடப்பதே"



திருவில்லிபுத்தூர்
ஆண்டாள்

மாலை 5] சுபகிருது - மார்கழி [மணி 4
ஜனவரி 1963

சென்னை அரசாங்க அறநிலையப்



திருநெல்வேலி மாவட்டக் கோயில்கள் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில்,
அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் அவர்கள் உரை நிகழ்த்துதல்

# சிறப்பு மலர்

## 1963 ஜனவரி

## பொருள் அடக்கம்


1. திருப்பாவைச் சிறப்புரைகள்
2. திருவிரையாக்கலி
3. சிவஞானபோதம்
4. கோதைச் சிரிப்பு
5. பலபொருள் உருவகப் பாசுரம்
6. இதோ இமயம்
7. வழிபாடு
8. திருவருட்பயன்
9. இராசராசேச்சரக் கல்வெட்டு
10. சேக்கிழார் சொல்லாதவை
11. காஞ்சிக் கல்வெட்டுகள்
12. திருஞானசர்பந்தர் திருமுறை
13. திருவேற்காடு
14. சந்திரசூடேசுவரர்
15. இலக்கியங்களில் இமயம்
16. திருவாதிரைச் சிறப்பு
17. வைஷ்ணவ குருபரம்பரை
18. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்




ஆண்டுச் சந்தா ரூ. 10/- ✶ தனி இதழ் விலை ரூ. ஒன்று


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

சந்தாப்பணம் நிலுவையுள்ள சந்தாதாரர்கள், நிலுவைச் சந்தாப் பணத்தையும் 1962—63 புதிய ஆண்டுக்கான சந்தாப் பணத்தையும், விரைவில் அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர் அலுவலகங்களில், செலுத்திவிடுமாறு நினைவுறுத்திக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

—ஆசிரியர்.

CONNEMARA PUBLIC LIBRARY
8 - AUG 1965



ஸ்ரீரங்கம் மூலவர்

CONNEMARA PUBLIC LIBRARY

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 5] சுபகிருது மார்கழி-ஜனவரி 1963 [மணி 4

# திருப்பாவைச் சிறப்புரைகள்



**முன்னுரை**

சைவம், வைஷ்ணவம் என்னும் இரு பெருஞ் சமயங்களும் தமிழ் நாட்டிற்கு இரண்டு கண்களைப் போன்றவை. திருவெம்பாவை, திருப்பாவை என்னும் இரண்டும் அச்சமயங்கள் ஆகிய கண்ணிற் கருமணியுள் ஆடும் **பாவைகளைப்** போன்ற சிறப்புடையவை. "என் இரு கண்ணே கண்ணிற் கருமணியே மணி ஆடுபாவாய்" என்றாற்போல வரும் பெரியோர் திருமொழிகள் ஈண்டுக் கருதியுணரற் பாலன.

**பாவை நோன்பு**

மார்கழி மாதத்தில் வைகறையில் துயில் எழுந்து நீர்நிலைக்குச்சென்று நீராடி, மணலால் ஸ்ரீகாத்யாயநீ தேவியின் திருவுருவம் (பாவை) சமைத்துச் சந்தனம் மலர் தூபம் தளிர் பழம் ஆகியவற்றாலும், மற்றும் பல சிறந்த நைவேத்தியங்களாலும் வழிபட்டு, உலக நலங்கருதி மழை பொழிதற் பொருட்டும், தம் நலம் கருதித் தமக்கு ஏற்ற இனிய கணவர் வாய்த்தற் பொருட்டும், இளம் மகளிர் ஆகிய பாவையர் தேவியை வேண்டிக் கொள்வர்.

> **"நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள்"**
> **"நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்"**
> **"பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் புக்கார்"**

என வரும் ஆண்டாள் திருப்பாவைத் தொடர்களில், 'பாவை' என்பது தேவியின் திருவுருவத்தைக் குறித்து நிற்றல் காணலாம். எனவே இதனைப் **'பாவை நோன்பு'**

என வழங்குவர். 'பாவை' என்பது 'கொல்லிப் பாவை' என் புழிப் போல, ஈண்டுப் பெண் தெய்வத்தின் பிரதிமை யாகிய திருவுருவத்தைக் குறிக்கும். பாவையைக் குறித்துச் செய்யப்படும் நோன்பு (வழிபாடு) 'பாவை நோன்பு' எனப் பெயர் பெற்றது.

## பாவைப் பாட்டு

பாவை நோன்பு பற்றிய பாடல்கள் ஆதல் பற்றியே, திருவெம்பாவை திருப்பாவை என்னும் பெயர்கள் ஏற்பட்டன. பெயருக்கு ஏற்ப இந்நூல்களின் ஒவ்வொரு பாடலும் "எம்பாவாய்" என்னும் தொடரினை சுற்றிற்கொண்டு முடிகின்றது. ஆதலின் இன்னோரனைய பாடல்களைப்'பாவைப் பாட்டு' என்று முன்னோர்கள் வழங்கியுள்ளனர். சைவ வைஷ்ணவ சமய மக்களால் மட்டுமே யன்றி, ஜைன பௌத்த சமயங்களைச் சேர்ந்த மக்களாலும் "பாவைப் பாட்டு" நூல்கள் இயற்றப் பெற்றுப் போற்றப்பட்டமை யாப் பருங்கல விருத்தியுரையால் புலனுகின்றது. பிற்காலத்தில் தத்துவராய சுவாமிகள் பாடிய 'பாடு துறை' என்னும் நூலின்கண் "சொரூபானந்தர் திருவெம்பாவைகள்" வேதாந்த பரமாகக் காணப்படுகின்றன. மேலும் கடல் கடந்த பிற நாடுகளிலும் கூட இந் நூல்கள் பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப் பட்டு வரும் செய்திகள் அறியப்படு கின்றன.

## திருப்பாவையின் சிறப்பு

பாவைப் பாட்டு நூல்களுள் திருப்பாவையின் சிறப்பு மிகவும் பெரிது. எம்பெருமானுரை "ஓருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச்செய்யவேணும்" என்ன, அவர் "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது" என்று அருளிச் செய்தார் எனத் திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை கூறுகின்றது.

பெரியாழ்வார் வயிற்றிற் பிறக்கையாலும், தானான தன்மையாலும், ஞான பக்திகள்க்ஷணந்தோறும்பெருகப்பெற்றுப் பிறங்கிய ஸ்ரீஆண்டாளின் திருப்பாவைக்குக் கருத்து : "மார்கழி நீராடுதல் என்ற ஒரு வ்யாஜத்தாலே எம்பெருமான் பக்கலிலே சென்று உனக்குச் சேஷமாய் இருக்கிற இந்த ஆத்மா அநர்த்தப்படாதபடி பண்ணி இதுக்கு ஸ்வரூபமான கைங்கரியங்களையும் கொடுத்து அது தானும் யாவ தாத்ம பாவியாம்படி பண்ணியருள வேணும்" என்று அபேட்சித்தல் ஆகும்.

## ஸ்ரீ ஆண்டாள் சிறப்பு

திருப்பாவையை அருளிச் செய்த ஆண்டாளின் அளப்பரும் சிறப்புக்களை 'வியாக்யான கர்த்தாக்கள்' பல வகையிற் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

"திருத்துழாய் பரிமளத்தோடே கூட முளைக்குமாபோலே, ஆண்டாளும் பால்ய யௌவநாவஸ்தைகள் தோறும் வளருகிற பர பக்தி பரஞான பரம பக்திகளை அதிகமாக உடையவள் ஆகையாலே, பகவத் விஷயப் பிராவண்யம், அல்லாத ஆழ்வாரைக் காட்டில் இவளுக்கு மிகவும் அதிசயித்திருக்கும்."

"பத்து ஆழ்வார்களுடைய ஸார பூதையாகத் திகழ்பவள் ஆண்டாள். பதின்மருடைய ஞானமும் ஸ்த்ரீதனமாக இவள் பக்கலிலே யிறே குடிகொண்டது. பத்துப் பேர்க்கு ஒரு பெண்பிள்ளையிறே."

"ஆழ்வார்களுக்கும் எம்பெருமான் மயர்வற மதிநலம் அருள வேண்டிற்று. எம்பெருமானை எழுப்பித் தன் குறையை எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்கையால், இவள் தான் எம்பெருமானுக்கு மயர்வற மதிநலம் அருளினாள்."

"இளையபெருமாள் படி ஆழ்வார்களது. ஸ்ரீ பரதாழ்வான்படி பெரியாழ்வாரது. ஸ்ரீசத்ருக்நாழ்வான்படி அவர் திருமகளது. ஆழ்வார்களும் இளையபெருமாளும் பகவத் அநுபவத்தை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீபரதாழ்வானும்பெரியாழ்வாரும் பகவத் ஸம்ருத்தியை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீசத்ருக் நாழ்வானும் ஆண்டாள் நாச்சியாரும், பாகவத சேஷத்வத்திலே நின்றார்கள்."

"தேகாத்மாபிமாநிகளுக்கும் ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணு வோட்டை வாசி போரும்; ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும். பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி போரும்."

"அவர்களில் இவளுக்கு வாசி என்? என்னில்; "அநாதிமாயயா" என்கிற

படியே, ஸம்ஸாரத்திலே யுறங்குகிறவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள். இவள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே, அவர்களைக் காட்டிலும் இவள் மேலானவள் ஆவாள்."

"அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கு என்றே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே"

என்கிறபடியே, பிறந்ததன் தொடக்கமே பிடித்து ஆண்டாள் பகவத் குணங்களிலே ஈடுபட்டுப் போந்தாள். மேலும் புருஷன் புருஷனைக்கண்டு ஸ்நேகிப்பதனைக் காட்டிலும் ஸ்திரி புருஷனைக்கண்டு ஸ்நேகிக்கை பள்ளமடை யாகையாலே, ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரம பக்தி யுடையவள் ஆண்டாள்."

அஞ்சு குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப்
—பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பத்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே மகிழ்ந்து.

மேலும் இவள் தான் பிராம்மணியாய் இருந்து வைத்தும், யாகத்திலே விரதத்தை மேற்கொண்டவர்கள் தேவதத்தாதி நாமங்களைத் தவிர்த்து, யாகம் முடியும் அளவும் 'யஜமானன்' என்றும் 'அத்வர்யு' என்றும் 'ஹோதா' என்றும் இத்யாதி நாமங்களே யாகிறுப் போலே, இவளும் ஸ்ரீ வில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வட பெருங்கோயிலே ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கிருஷ்ணனாகவும் அநுசந்தித்து, தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப் பாடியிலே குடிபோய், பாவநாப்ரகர்ஷத்தாலே அநுகாரம் முற்றி அவை தானேயாய், இடை நடையும், இடைமுடியும், இடைப் பேச்சும், முடை நாற்றமுமாய் மாறி நின்று, ஸ்ரீ ஆண்டாள் இந் நூலை அருளிச் செய்கின்றாள்.

## உரைத் தொகுப்புச் சுருக்கம்

இவ் வரும் பெரும் நூலுக்குப் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்த வியாக்யானங்கள் பல விரிந்து பரந்துள்ளன. அவை "மொழிக்கு மொழி தித்திப்பாக" அமைந்துள்ளன. அவ்வரிய பெரிய உரை நுட்பங்களில் யாவரும் அறிந்துணர்ந்து மகிழத் தகுந்தனவும், நினைவிற் பதித்துக்கொண்டு என்றும் சுவைத்துஇன்புறத்தக்கனவுமாக உள்ள ஒரு சிலவற்றை மட்டும் உரைத் தொகுப்புச் சுருக்கமாக ஈண்டு நாம் இயன்ற அளவு காண்போம்:

## 1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்

**மார்கழித் திங்கள்:** மிகு வெப்பமோ மிகு குளிர்ச்சியோ இல்லாதது. நாளுக்கு வைகறையைப் போல, ஆண்டுக்கு மிகவும் சிறந்தது. 'மாதங்களில் நான் மார்கழியாகிறேன்' என்று அவன் தானே அருளிச் செய்கையால் வைஷ்ணவமான மாஸம். மற்றவர்களைக் காட்டிலும் பெருமாளுக்கு உள்ள முதன்மைபோல மாதங்கள் எல்லாவற்றுக்கும் முதலான மாதம்.

**மதிநிறைந்த:** மாதம் நேர்ப்பட்டாற்போலப் பக்கமும் நேர்ப்பட்டது. ஒருவரை ஒருவர் முகம் கண்டு அநுபவிக்கைக்கும், எல்லாரும் கூடிச் சென்று கிருஷ்ணனை எழுப்புகைக்குமாக, நிலா உண்டாகப் பெற்றது.

**நன்னாளால்:** பகவத் பிரஸாதத்துக்கு இலக்காகப் பெற்ற நாள் அன்றோ, ஆத்மாவுக்கு நன்னாள் ஆகிறது.

**நீராட:** கிருஷ்ணனின் மேற் காதலால் பிறந்த வெப்பம் ஆறும்படி போய்க் குளிக்க. தமிழரும் கலவியைச்'சுனையாடல்' என்பர்.

**போதுவீர் போதுமினோ:** இச்சையே அதிகாரம். 'போதுவீர்' என்று பிரதி கூலரையும் சேர்த்துக் கூறும் காரணம், அவர்களைத் திருத்துகைக்கு. பிராட்டியைப் போல இவர்களும் கடகர் ஆகையாலே, திருத்துகை இவர்களுக்கு இயல்பு.

'வம்மின்' என்னுமல் 'போதுமினோ' என்றது, அவர்கள் முன்னே போகத் தாங்களும் வாழும்படி அவர்கள் நடையழகு கண்டு பின்னே போவதைக் குறிக்க.

**நேரிழையீர்:** விலக்ஷணமான ஆபரணத்தை யுடையீர்! 1. கலவிக்குப்

போகிற த்வராதிசயத்தால் அவயவங்களை மாருடி ஆபரணங்கள் பூணுவதால் வரும் புதுக்கணிப்பு; 2. அவன் எப்போது வந்து மேல்விழும் என்று அறியாதபடியாலே, எப்போதும் அலங்கரித்தபடி யிருத்தல்; 3. முன்பு கிருஷ்ணனோடு கலந்த கலவியாற் பிறந்த புகர் இப்போது தோற்றும்படி இருத்தல்.

**சீர்மல்கும் ஆய்ப்பாடி:** இவ்வூரில் ஐஸ்வரியம் வழிந்துபோய் வேற்றூர் ஊர்க்கு வெள்ளமிடப் போந்திருக்கை. அந்தகாரத்தில் தீபம்போலப் பிரகாசிக்கும் கிருஷ்ணனுடைய இங்குத்தை நீர்மை, பரமபதத்திலும் சென்று அலை எறியும்படியாய் இருக்கை. நாழிப்பால் நாழிநெய் போதருகை என்றுமாம்.

**ஆய்ப்பாடி:** பரமபதம் போலே தேவதாந்தர பரிக்ரஹம் பண்ணிச் சென்று அநுபவிக்கவேண்டாத ஊர்; இடக்கையும் வலக்கையும் அறியாத இடையர் வர்த்திக்கிற ஊர்; பெருமாள் குணங்கண்டு உவக்கும் ஊர் போல் அன்றியே கிருஷ்ணன் தீம்பு கண்டு உவக்கும் ஊர்.

**செல்வச் சிறுமீர்காள்:** இவ்வாத்மாவுக்கு நிலை பெற்ற செல்வமாவது, பகவத் ப்ரத்யாஸத்தி. கிருஷ்ணனோடு ஒத்த பருவமாய் இருக்கை. அந்ய சேஷத்வ ஸ்வ ஸ்வாதந்த்ர்யங்கள் இன்றி யிருக்கை.

**கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோபன்:** முன்பு பசும்புல் சாவ மிதியாதவர் பிள்ளைகள் பிறந்த பின்பு அவர்கள்மேல் உண்டான வாத்ஸல்யத்தால், 'அவர்களுக்கு என் வருகிறதோ' என்று அஞ்சி வேலைப் புகர் எழக்கடைந்து, தொட்டிற்கீழே எறும்பு புகினும் சிங்கத்தின் மேலே விழுமாப் போலச் சீற்றத்தின் மிகுதியால் உதிரக் கையராதல். நந்தகோபன்-பிள்ளையைக் கண்ட ப்ரீதியாலே ஆநந்தத்தை யுடையவன்.

**ஏரார்ந்த கண்ணி யசோதை:** பிள்ளையை மாறாதே பார்த்துக் கொண்டிருக்கையாலே அவ்வாசி யடையக் கண்ணிலே தோற்றும்படி யிருக்கை.

**இளஞ்சிங்கம்:** செருக்கும் மேனாணிப்பும் தோன்ற நிற்கும் நிலை; சிறுமியர்க்கு ஒத்த பருவமாய் இருக்கை.

**கார்மேனி:** நம்முடைய ஸகல தாபங்களும் ஆறும்படியான வடிவு. செங்கண் அத்திருமேனிக்குப் ப்ரபாகமான சிவப்பையுடைய திருக்கண்கள்.

**கதிர்மதியம் போல் முகத்தான்:** ப்ரதிகூலர்க்கு அநபிபவநீயனாய் அநுகூலர்க்குக் கிட்டி நின்று அநுபவிக்கலாம் படியிருக்கை. பிரதாபமும் குளிர்ச்சியும் உடையது; பிரகாசமும் கண்கவர் கவினும் உடையது. அவ்வளவிலும் உபமானம் நேர்நிற்க மாட்டாமையாலே உபமேயந் தன்னையே சொல்லுகிறது.

**நாராயணனே:** ஸர்வேசத்வம் பெண்களுக்கும் தெரியும்படியாயிறே இவ் அவதாரந்தான் இருப்பது. நோன்புக்கு அங்கமாக ஜபிக்கும் மந்த்ரமுமாம். வைகிறவனுக்கும் பேர் சொல்லி வையவேணும். இத்தனையிறே காகமும் சிசுபாலனும் செய்தது.

**நமக்கே:** அவனாலேதான் பேறு, வேறு ரக்ஷகராலே அல்ல என்று அநந்ய கதிகளாய் இருக்கிற நமக்கே: அகிஞ்சநராய் அவன் கை பார்த்திருக்கிற நமக்கே: அன்பில்லாத இழிந்த நமக்கும் என்றுமாம்.

**பறைதருவான்:** இத்தலை இசையாத அன்றும் தான் விடமாட்டாத வாத்ஸல்யம். நாட்டுக்குப் பறை என்று ஒரு வியாஜமாய், தங்களுக்கு அபிமதமான அடிமையினை யாய்த்து நினைக்கிறது.

தருவான்—ப்ராப்தி யுண்டானாலும், அவன் தரக்கொள்ள வேண்டும் என்பது.

**பாரோர் புகழ:** நாடு முழுவதும் மழையின்மை தீர்ந்து நீர் நிறைந்தது என்று கொண்டாட. படிந்து — இந் நோன்பிலே ஈடுபட்டு, "நீராடப் போதுவீர் போதுமினோ" என்று அந்வயம்.

**ஏலோர் எம்பாவாய்:** 'ஏல்' இப்படியாகில் என்றபடி. 'ஏல்' என்றது ஸம்போதனை. ஓர் புத்தி பண்ணு. 'எம்பாவாய்' என்றது எங்கள் சந்தஸ்ஸைப் பின்செல் என்றபடி. அன்றிக்கே செய்யுள் அடிக்குறைவுக்கு நிறைவு தரும் இடைச் சொற்களுமாம். 'பாவாய்' என்றது ரதியைச் சொல்லிற்றாகவுமாம். எங்கள் சந்தாநுவ்ருத்தியைப் பண்ணுக என்னவுமாம்.

## 2. வையத்து வாழ்வீர்காள்

**வையத்து வாழ்வீர்காள்:** ஸர்வேச்வரன் திருவாய்ப்பாடியிலே கிருஷ்ணனாய் வந்து திருவவதரித்துத் தன்னைத் தாழவிட்டுப் பரிமாறுகிற காலத்திலே வாழப் பிறந்த பாக்யவதிகாள்.

**வாழ்வீர்காள்:** கிருஷ்ணாவதாரத்துக்கு முன்னாதல் பின்னாதல் அன்றிக்கே ஸம காலத்திலே, வேறு இடங்களிலே யன்றி ஆயர்பாடியிலே, அவனுடைய கடாக்ஷத்துக்கு இலக்காகும்படி ஒத்த பருவமாகப் பிறந்திருக்கை. வர்த்தநம்என்றும் வாழ்ச்சி என்றும் இரண்டில்லாமல் அவன் நித்ய வாசம் பண்ணுமிடத்தில் வாழப் பெற்றவர்களே. இஃதொரு பாக்யாதிசயம் இருக்கும்படி என்!

சொல்லுகிற தங்களுக்கும் வாழ்ச்சி ஒத்திருக்க "வாழ்வீர்காள்" என்று பிறரைச் சொல்லுகிறது என் என்னில்; தாங்கள் தனியே அநுபவிக்கும் அநுபவம் ரஸாநுபவமாய்த் தோற்றாமையாலே, அத்தை ரஸமாக்கித் தருமவர்களைக் கொண்டாடுகின்றார்கள்.

**நாமும்:** நாராயணனே நமக்கேபறைதருவான் என்று உபாய அத்யவஸாயத்தை உடைய நாமும்; உபேய த்வரா விசிஷ்டராகிய நாமும்.

**நம்பாவைக்கு:** நம்முடைய நோன்புக்கு. பிறர் அழிதற்காகச் செய்யும் யாகம்போல் அன்றிக்கே, கிருஷ்ணனும் ததீயரும் வாழ்தற்குச் செய்யும் நோன்பு.

**செய்யும் கிரிசைகள்:** ஆரம்பித்துத் தவிருமவை யல்ல; பத்தும் பத்தாகச் செய்தற வேணும்; 'மடல்' போலக் காட்டி விடும் அதுவல்ல.

**கேளீரோ:** பகவத் விமுகர் கோலாஹலத்திலே கிருஷ்ணாநுபவத்துக்கு இத்தனை பேர் உண்டாவதே! என்ற மகிழ்ச்சியாற் கூறுதல்; சிரவணந்தானே பிரயோஜநமாய் இருக்கிறபடி. சொல்லுகிறவர்கள் தான் ஆசார்ய பதம் நிர்வஹிக்கைக்காகச் சொல்லுகிறார்கள் அல்லர்; கேட்கிறவர்கள் தங்கள் அஜ்ஞாதமாய்க் கேட்கிறார்கள் அல்லர்; இங்ஙனே யல்லது போது போகாமல் இருந்தபடி. நாங்களும் வாய் படைத்த லாபம் பெற்று நீங்களும் செவி படைத்த லாபம் பெற வேண்டாவோ? என்றுமாம்.

**பாற்கடலுள்:** பரமபதத்தினின்றும் ஆர்த்தரக்ஷணத்துக்காகத் திருப்பாற் கடலளவும் ஒருபயணம் எடுத்து விட்டு ஜகத் ரக்ஷண சிந்தையிலே அவகாஹிதனாய் ஆர்த்த த்வநிக்குச் செவி கொடுத்துக் கொண்டு கிடக்கிறபடி.

**பையத்துயின்ற பரமன்:** பிராட்டிமாரோடு போகத்துக்கு இடங்கொடாதே 'ஆராலே ஆருக்கு என்ன நலிவு வருகின்றதே? என்று அதிலே அவகாஹிதனாய்க் கொண்டு சாய்ந்தபடி.

கிருஷ்ணனை அநுபவிக்கப் புகுந்து க்ஷீராப்தி நாதனைச் சொல்லுகிறதென்? என்னில்; கிருஷ்ணனைச் சொல்லிப் பண்டே சங்கித்திருக்கிற இடையர், நமக்குத் தைவம் தந்த இச் சேர்த்தியை அழிக்கின்றார்களோ என்று பயப்பட்டு, கிருஷ்ணனுக்கு மூலமான க்ஷீராப்தி நாதனைச் சொல்லுகின்றார்கள்.

**அடிபாடி:** மஹிஷிகளோடு அல்லாதாரோடு வாசியறச் சேஷத்வம் ஸமாநமாய் இருக்கையாலே திருவடிகளைப் பாடி; அவனுடைய வடிவழகைப் ப்ரீதி ப்ரேரிதைகளாகக் கொண்டு பாடி. ஸ்தநந்தயப் ப்ரஜை முலையிலேயிறே வாய்வைப்பது. அதுபோல இவர்களும் திருவடியைப் பாடினார்கள்.

**நெய்யுண்ணோம் பாலுண்ணோம்:** "உண்ணுஞ் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்" என்றிறே இருப்பது. விரஹதசைக்கு அநுகுணமாக ப்ரணய ரோஷம் தோற்றச் சொல்லுகை. இடையர் பேச்சில் குடியோம் என்னாது உண்ணோம் என்கை. இவர்கள் உண்ணாதொழிந்தால் பட்டினி விடுவான் அவன் போலே காணும். ஆகையால் இவர்கள் இங்ஙனே சொல்லுகிறது.

**நாட்காலே நீராடி:** 1. அவன் போகார்த்தம் 2. அவனைப் பெறுகைக்குச் சாதனம் 3. விரகதாபம் மாறுகைக்கு. "ஓதி நாமம் குளித்து உச்சி தன்னால் ஒளிமா மலர்ப் பாதம் நாளும் பணிவோம் நமக்கே நலம் ஆதலில்" என்னும் த்வரை. விச்லேஷ தாபம் ஆறும்படி ஸ்ரீ பரதாழ்வானைப் போலே அபர ராத்ரியில் குளிக்கை.

**மையிட்டெழுதோம்:** இனி அஞ்சனம் இடுவதும் மங்களார்த்தமாகவிறே. இவர்கள் அஞ்சனம் எழுதப் புக்கால் குறையும் தலைக்கட்டுவான் அவனேயாவன்.

**மலர் இட்டு நாம் முடியோம்:** இனி, பூவுக்குத் தான் நாற்றங் கொடுக்கைக்காக ஆயிற்றுப் பூமுடிப்பது; அது செய்யக் கடவோமல்லோம் என்கை. அவன் தானே வந்து சூட்டில் செய்யலாவதில்லை.

**செய்யாதன செய்யோம்:** விதியுண்டாய் வசநஸித்தமே யாகிலும் பூர்வர்கள் ஆசரித்த அநுஷ்டானமே ஒழிய வேறு செய்யக் கடவோமல்லோம்; நம்மில் நாம் "நப்பின்னை நங்காய்" என்றும், "நாயகப் பெண் பிள்ளாய்" என்றும் "பேய்ப் பெண்ணே" என்றும் ஒருவர்க் கொருவர் இட்டீடு கொண்டு சொன்னவைகளைக் கிருஷ்ணன் செவிப்படுத்தக் கடவோம் அல்லோம்.

**ஐயமும் பிச்சையும்:** ஐயமாவது யோக்ய விஷயத்திலே குருவாக வ்யயிக்குமது; பிச்சையாகிறது பிரமசாரிகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் இடுமது. ஐயம் விபுவான கிருஷ்ணனை அநுபவிக்கை. பிச்சை அணுஸ்வரூபரான ததீயரை அநுபவிக்கை. ஐயம் ஈச்வரனுடைய ஸ்வரூப குண விஷய ஞானம். பிச்சை ஆத்ம ஸ்வரூப ஞானம்.

**ஆந்தனையும்:** அவர்கள் கொள்ள வல்லராகுந் தனையும்; அர்த்திகள் எல்லோருக்கும் கொடுத்து இனி அர்த்திகள் இல்லை என்னும் அளவுமாம்.

**கைகாட்டி:** ஸர்வத்தையும் கொடுத்தும்கூட, ஒன்றும் செய்யப் பெற்றிலோம் என்றிருக்கை.

**உய்யுமாறு எண்ணி:** பகவத் விஷயத்தில் உள்புக்க அன்றிறே இவன் உஜ்ஜீவித்தானுகிறது.

**எண்ணி உகந்து:** மநோரத வேளையே தொடங்கி ரஸிக்கிறபடி. "எண்ணியுகந்து செய்யுங் கிரிசைகள் கேளீரோ" என்று அந்வயம்.

## 3. ஓங்கி யுலகளந்த உத்தமன்

**ஓங்கி உலகு அளந்த:** பனிப்பட்டுச் சாய்ந்த மூங்கில் போலே யாய், அது ஆதித்ய கிரணம் பட்டுக் கிளம்புமா போலே, மகாபலி யாலே நோவுபட்ட தேவர்கள் ஆர்த்தத்வநி கேட்ட பின்ட போந்து வளர்ந்தபடி; பிறர் காரியம் செய்யப் பெறுகையாலே வளர்ந்தபடி என்னவுமாம்; இரப்புப் பெறுதற்கு முன்னே வாமநன் ஆனவன் இரப்பு வாய்த்த ப்ரீதியாலே வளர்ந்தபடி யாகவுமாம்.

வரையாமையும், அதிமாநுஷ்ய சேஷ்டிதங்களும், வடிவழகும் கிருஷ்ணவதாரத்தோடு ஒத்திருக்கையாலே, ஸ்ரீ வாமநாவதாரத்தை அநுபவிக்கிறார்கள்.

**உத்தமன்:** பிறரை ஹிம்ஸித்துத் தன் வயிற்றை வளர்க்க வேண்டும் என்றிருக்குமவன் அதமன்; பிறரும் ஜீவிக்க வேண்டும் நாமும் ஜீவிக்க வேண்டும் என்றிருக்குமவன் மத்யமன்; தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேண்டும் என்னுமவன் உத்தமன். இவர்களுக்கு ஓர் உபகாரம் பண்ணிற்கை அன்றிக்கே தன்பேறு நினைத்திருக்கிறபடி.

**பேர்பாடி:** இக்குணங்களுக்கு வாசகமான திருநாமங்களைப் ப்ரீதி பூர்வகமாகப் பாடி.

**நாங்கள்:** திருநாமத்தை வாயாலே சொல்லா விடில் தரிக்கமாட்டாத நாங்கள்.

**நம் பாவைக்கு:** ப்ராபகதயா அன்றிக்கே ப்ராப்யருசி இருந்த இடத்தில் இருக்க ஒட்டாமல் செய்கிற நோன்புக்கு.

**சாற்றி நீராடினல்:** நாட்டார்க்கு நோன்பு என்று ஒரு வியாஜத்தை இட்டு நம்முடைய விரகதாபம் போக நாம் குளித்தால்; கிருஷ்ண சம்ஸ்லேஷத்தைப் பண்ணினல்.

**தீங்கின்றி நாடெல்லாம்:** நாட்டில் வியாதி துர்ப்பிக்ஷாத் யமங்களங்க ளெல்லாம் போய் ஸம்ருத்தமாய் இவ்வூரே யன்றி இதனேடு ஸம்பந்தித்த நாடெல்லாம் மங்களமாகை.

**திங்கள் மும்மாரி பெய்து:** வெள்ளக்கேடும் வறட்கேடும் இன்றிக்கே ஊறெண்ணெய் விட்டாற் போலே விரும்பிய சமயங்களில் ஒன்பது நாள் வெயிலும் ஒரு நாள் மழையுமாய்ப் பெய்து.

**ஓங்கு பெருஞ்செந்நெல்:** திருவுலகளந்த ஸர்வேச்வரனேடு ஒத்திருக்கை. விடிவோறே நட்டு, ஞாயிறு பட்ட போது



ஓங்கி உலகளந்த உத்தமன்

வந்து பார்த்தால் கைகவித்துப் பார்க்க வேண்டும்படி யிருக்கை; ஆகாச அவகாசம் உள்ள அளவும் வளர்ந்திருக்கை.

**ஊடு கயல் உகள:** செருக்காலே யானைக் கன்று போல வளர்ந்த கயல் மீன்களானவை, செங்நெல்களின் உள்ளே புக்குப் போக இடம் பெருமையாலே துள்ளாநிற்கும். திருவுலகளந்தருளின சர்வேஸ்வரனைக் கண்ட அநுகூலர் பட்டது படாநிற்கும் ஆய்த்து இவை.

**பூங்குவளைப் போதில்:** பூத்தகுவளையிலே என்னுதல்; காலத்திலே என்னுதல்; தர்சநீயமான குவளைப்பூவிலே என்னுதல்.

**பொறிவண்டு கண்படுப்ப:** குவளைப் பூவிலே வண்டு மதுபானம் பண்ண என்று படிந்த தகையிலே கயல் ஊடேயுகளச் செந்நெல்லும் குவளையும் ஒக்க அசைந்து, தூங்கு மெத்தையிலே உறங்கும் ராஜபுத்ரர்களைப் போலே வாயில் மதுவோடே

வண்டுகள் கண்ணுறங்க. இது வயலில் ஸம்ருத்தி.

**தேங்காதே புக்கு:** திருவடி ஸமுத்ரம் கடக்க ஒருப்பட்டாற்போலே ஒருப்பட்டுக் கொண்டு இழிய வேண்டும்படி யாய்த்து இருப்பது, பசுவிற் பால் கறக்கப் புகுதல்.

**இருந்து:** பால் மாறிலிறே எழுந்திருக்கலாவது; ஆகையாலே ஸ்தாவரப் பிரதிஷ்டை போலேயிருந்து.

**சீர்த்த முலை பற்றி:** இரண்டு கையாலும் அணைத்துக் கறக்க வேண்டும்படி கனத்திருக்கை.

**வாங்கக்குடம் நிறைக்கும்:** மடியைப் பற்றிக் கைவாங்கத் தானேநின்று பால் சொரியும்; இட்ட குடங்கள் வாங்க வாங்க நிறைக்கும். குடம் இடாதார் இழக்கின்றது பசுவின் குற்றம் அன்றே. இச்சையுடையார் ஈச்வரனைப் பற்றிக் கிருதக்ருத்யர் ஆமாறு போலே யாய்த்து இவையும்.

**வள்ளற் பெரும்பசுக்கள்:** கிருஷ்ணன்படி இவற்றுக்கும் உண்டாயிருக்கை. சிறு குழந்தைகளுக்கும் கூடக் கட்டவும் அடிக்கவும் ஆகும்படி தன்னைக் கொடுத்துக் கொண்டு நிற்கை. புல்லும் தண்ணீரும் தாரகமாக வளர்ந்தவை யன்றிக் கிருஷ்ண ஸ்பரிஸமே தாரகமாக வளர்ந்தவை.

**நீங்காத செல்வம்:** தன்னைத் துன்புறுத்திய ராக்ஷஸிகள் மாட்டும் பரமகருணையுடையளாய் விளங்கிய பிராட்டியருளால் வந்த செல்வமாகையாலே, ஊற்றுடைத் தாய் நீங்காமல் இருக்கும்.

## 4. ஆழி மழைக் கண்ணா

**ஆழி மழைக் கண்ணா:** பர்ஜந்யனே என்னுமல் தொழிலே யிட்டுச் சொல்வதன் காரணம்: தேவதை அப்ரஸித்தமாகையாலும், தொழிலே யிட்டுச் சொல்வது ராஜகுலத்திலும் உலக வழக்கில் இருத்தலாலும், இவர்கள் பாலையாகையாலும் என்றபடி.

இவர்கள்தான் ஆரேனையும் அழைக்கையிலும் "கண்ணா" என்றொழிய அழையார்கள், கிருஷ்ணனோடுள்ள வாசனையாலே.

**ஒன்று நீ கைகரவேல்:** பாபமே பச்சையாக ரக்ஷிக்கும் எங்கள் படியைப் பார்த்து எங்கும் ஒக்க வர்ஷிக்க வேணும். தோஷ போக்யம் அல்லது பாபத்தையே உபகாரமாகக் கொள்வது எம்பெருமானுக்கும் பாகவதர்களுக்கும் உள்ள சிறந்த குணம்.

**ஆர்த்து:** இராமடம் ஊட்டுவாரைப் போலவும் முகந்தோற்றுமல் நின்று ரட்சிக்கும் ஈஸ்வரனைப் போலவும் ஆகலொண்ணாது; அசசரத்திலே தீக்ஷித்தமுதலிகள் அடையத் திருவடி வரவாலே ஸத்தை பெற்று ஸம்ப்ரமித்தாற் போலே, நாடடைய உங்களுடைய த்வநி கேட்டு வாழும்படி மின்னி முழங்கி வில்லிட்டுக் கொண்டு பெரிய ஸம்ப்ரமத்தோடே வந்து தோற்ற வேணும்.

**பாழியந்தோளுடைப் பற்பநாபன்:** பிள்ளைகளைத் தொட்டிலிலே வளர்த்திப் புறப்பாய் இட்டுப் பூரித்து ஆயுதம் கொண்டு நோக்கியிருப்பாரைப் போலே, திருநாபீகமலத்திலே வ்யஷ்டி சிருஷ்டிக்குக் காரண பூதனை பிரம்மாவைப் பெற்று வைத்துத் திருத்தோள்களாலே காத்துக் கொண்டிருக்கிறவன்.

**ஆழிபோல் மின்னி:** பிரம்மா உண்டான பின்பு ஸர்வேச்வரனுக்குப் பிறந்த ஹர்ஷத்துக்குப் போக்கு விட்டுக்கொண்டாடினுன் திருவாழியாழ்வான்; ஆகையாலே அவனை ஒப்பாகச் சொல்லுகிறது.

**வலம்புரிபோல் நின்றதிர்ந்து:** பாரத ஸமரத்தில் ஸ்ரீ பாஞ்சசன்யத் தொனிபோலே, அநுகூலர் வாழவும் பிரதிகூலர் முடியவும் முழங்கவேணும்.

**சார்ங்கம் உதைத்த சரமழை போல்:** அகம்படியர் கிளர்ந்தால் அரசனாலும் அடக்கப் போகாதிறே. இரைபெறாத பாம்புபோலே முன்பு விஷயம் இல்லாமையாலே அடங்கியிருந்த ஸ்ரீ சார்ங்கம், பெருமாள் கடைக்கணித்த பின்பு பெருமாளாலும் விலக்கவொண்ணாதபடி நூறுநூறாயிரம் சரவ்ருஷ்டியைத்தானே பண்ணவல்லதாய் இருக்கை.

**வாழ உலகினிற் பெய்திடாய்:** அநுகூலப் பிரதிகூல விபாகம் அன்றிக்கே லோகம் முழுதும் வாழவேணும்...

## 5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனை

**மாயனை:** கிருஷ்ணாவதாரத்திலே அநுபவித்து "எத்திறம்!" என்ற நம்வாழ்வாரைப் போலே, அங்குத்தை குணத்தை அநுஸந்தித்து "எத்திறம்!" என்கிறாள். ஒப்புயர் வில்லாத சர்வேஸ்வரன் கிருஷ்ணனாய் வந்து அவதரித்து இடையர்களுக்கும் பசுக்களுக்கும் தன்னை அணையலாம்படி நியமித்து நவநீத சௌர்ய ஈகர க்ஷோபாதிகளால் உண்டான ஆச்சர்யத்தை "எத்திறம்" என்கிறதாகவுமாம்.

**மன்னு வடமதுரை:** பகவத் ஸம்பந்தம் மாறுத தேசம்; பரமபதம் போலே போக்யதையால் பிரசித்தமான ஊர்.

**மைந்தனை:** பிறந்தபோதே ஸ்ரீ வசுதேவர் காலில் விலங்கு தானே விடும்படியான மிடுக்கு, பருவம் நிரம்புவதற்கு முன்னே கம்ஸனைக் கொன்ற மிடுக்கு ஆகியவற்றைச் சொல்லிற்று.

**தூயபெருநீர்:** கிருஷ்ணன் உதடுகளுக்குப் பவித்ரதையை உண்டாக்கும் இடைப்பெண்களுடைய அதர ஸ்பர்சத்தாலும், கிருஷ்ணனும் பெண்களும் மாறி மாறிக் கொப்பளிக்கையாலும் வந்த தூய்மை.

**யமுனைத் துறைவனை:** "முத்துப்படும் துறை" என்னுமாப் போலே கிருஷ்ணனுக்குப் பெண்கள் படும் துறை; குரவைக் கூத்தாடுதற்குப் பெண்கள் விரும்பிய துறை.

**ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்கை:** பரமபதத்தை விட இடைச் சேரியில் குணங்கள் பேரொளி வீசித் திகழ்கை; அந்தகாரத்தில் தீபம்போலே தயை கிருபை நீர்மை முதலியன இடைச்சேரியில் ஒளி விட்டுச் சிறக்கை.

**தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை:** "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்று நாட்டார் புகழ்ச்சியாலே பெற்றவயிற்றுக்குப் பட்டம்கட்டினவனை; வயிற்றில் கட்டின தழும்பாலே ஒருத்திக்கு ஒரு பிள்ளை கட்டலாம்படி பவ்யனுவதே என்று யசோதைப் பிராட்டியை விளங்கப் பண்ணினவனை.

**தூயோமாய் வந்து நாம்:** அங்குத்தைக்கு நாம் யோக்யரோ அயோக்யரோ என்று பாராதே இருந்தபடியே சுக்ரீவன் விபீஷணன் முதலியோர்போல வந்து; இருந்தபடியே வருகைக்கு மேற்படச் சுத்தி தேட வேண்டா. உபாயத்தில் துணிவு புறப்பட ஒட்டாதாப் போலே உபேயத்தில் த்வரை முறை பார்த்திருக்க ஒட்டாதிறே.

**தூமலர்:** மலருக்குத் தூய்மை, அநந்யப் பிரயோஜனமாய் எம்பெருமானுக்கே அர்ப்பணம் செய்யப் பெறுகை; பிரயோஜனத்தைக் கணிசியாது இட்ட மலர்.

**தூவி:** அடைவுகெடப் பரிமாறி; பிரேமம் அடைவு பார்க்க ஒட்டாதிறே.

**வாயினுற்பாடி மனத்தினுற் சிந்திக்க:** தனித் தனியே கரணங்கள் மேல்விழுந்தபடி சொல்லுகிறது.

**போய பிழையும்:** அநாதி காலம் புத்தி பூர்வகமாகப் பண்ணிப் போந்த வினைகளும்.

**புகுதருவான் நின்றனவும்:** பகவத்ஞானம் பிறந்தால் பிரகிருதி வாசனையாலே பிராமாதிகமாகப் பிறந்த வினைகளும்.

**தீயினில் தூசு ஆகும்:** பாலும் கண்டசர்க்கரையும் குடிக்கப் பித்தம் தன்னடையே போமாறு போலே, பகவதநுபவம் பண்ண நெருப்பில் இட்ட பஞ்சுக் குவை போல உருமாய்ந்து போம்.

## 6. புள்ளும் சிலம்பின காண்

**புள்ளும் சிலம்பின காண்:** காலம் உணர்த்த உணருமவை யன்றோ புட்கள். நாழிகை வட்டில் நீர்நிரம்பினவாறே கீழே விழுமாபோலே, இரையறுதியிலே புணரும் திர்யக்குகளும்கூட உணர்ந்தன.

**புள்ளரையன்:** இளைய பெருமாளை யிட்டுப் பெருமாளை நிரூபிக்குமா போலே, திருவடியை நிரூபகமாக உடையவன்; தாங்கள் இருந்த இடத்தே கொண்டுவருமவன் ஆகையாலே புள்ளரையன் என்றதாகவுமாம்.

**கோயில்:** திருவாய்ப் பாடியிலே கிருஷ்ணனைக் கொண்டாடுகைக்கு ஒரு திரு முற்றம் உண்டோ என்னில்; பெருமாள் பிராட்டியோடே கூடப் பெரிய

பெருமாளை உபாஸிப்பர் என்றதிறே. அப்படியிலே திருவாய்ப்பாடியிலும் ஒரு திருமுற்றம் உண்டு போலே.

**வெள்ளை விளி சங்கின் பேரரவம்:** சங்கினுடைய வெளுப்பு போது விடிவுக்கு உடல் அல்லாமையாலே வெள்ளைச் சங்கு என்றது வியர்த்த விசேஷணம்; சாமங்களிலே பணிக்குக் கடவாரை அழைக்கைக்கு உறுப்பு ஆகையாலே 'விளிசங்கு' என்றது அனைகாந்திகம்; எனக்கும் ஒக்கக் கேளாமையாலே 'பேரரவம்' என்றது அப்ரசித்தம்.

**கேட்டிலையோ:** இது கேட்கப் பாக்யமின்றிக்கே ஒழிவதே. **பிள்ளாய்;** பகவத் விஷயத்திலே புதியையிறே.

**பேய்முலை நஞ்சுண்டு:** இவள் பயப்பட்டுக் கடுக எழுந்திருக்கைக்காக இது சொல்லுகிறது. ஸர்வேச்வரனைத் துக்க நிவர்த்தகன் என்றிருப்பார் அல்லாதார் இறே; பெரியாழ்வார் ஸம்பந்திகள் "அங்குத்தைக்கு என் புகுருகிறதோ" என்று வயிறு பிடிக்குமவர்களிறே.

**துயில்:** ஜகத் ரக்ஷண சிந்தை; ஓர் ஆச்ரிதனுடைய ஹ்ருதயத்தைக் கணிசித்துக் கிடக்குமவன் என்னவுமாம்.

**வித்தினை:** திருவவதாரத்துக்கு நாற்றங்கால் போல்வது.

**மெள்ள எழுந்து:** கர்ப்பிணிகள் பிரஜைகளுக்கு நோவு வராமே எழுந்திருக்குமா போலே எழுந்து.

திருவாய்ப்பாடியிலே முநிவர்களும் யோகிகளும் உண்டோ என்னில்; கிருஷ்ணன் வந்து அவதரித்த பின்பு இடையருடைய பசுக் கொட்டில்களிலே வந்து அவர்கள் படுகாடு கிடப்பார்கள்.

'அரி' என்கையாவது பகவதநுபவ விரோதிகளைப் போக்கியருளவேணும் என்கை; கிருஷ்ணனுக்கு அசுரர்களாலே வருந்தீங்கைப் போக்கித் தந்தருளவேணும் என்று மங்களாசாஸநம் பண்ணுகை. அவனாலே பயங்கெட்டால், அத்தலைக்குப் பயப்பட்டுத் திருப்பல்லாண்டு பாடும் இத்தனையிறே.

பகவத் ஸம்பந்த ஞானம் பிறப்பதற்கு முன்பு இழவுபேறுகள் தன்னளவிலே யாயிருக்கும்; ஸம்பந்த ஞானம் பிறந்த பின்பு இழவு பேறுகள் அவனளவிலேயாய் இருக்கக் கடவதிறே.

**உள்ளம் புகுந்து குளிர்ந்து:** படுக்கைக்குக் கீழே வெள்ளங் கோத்தாற் போலே, திருநாமம் செவிவழியே புகுந்து உள்ளத்தை வவ்வலிட்டது.

## 7. கீசுகீசு என்றெங்கும் ஆனைச் சாத்தன்

**கீசுகீசு எனல்:** அநக்ஷர ரசமாய் இருக்கை. ஆனைச் சாத்தான்—வலியன் என்னும் பாரத்வாஜ பக்ஷிகள்.

**கலந்து பேசின பேச்சரவம்:** பிரிந்து போனால் பகல் எல்லாம் தரிக்கும்படி கலந்து, பிரியப் புகா நின்றோம் என்னும் தளர்ச்சி தோற்றப் பேசுகிற மிடற்றோசை. **பேய்ப் பெண்ணே:** பகவத் விஷயத்திலும் ததிய விஷயம் நன்றென்று அறிந்து வைத்தும் காற்கடைக் கொள்ளும் மதிகேடு என்கிறார்கள்.

**காசும் பிறப்பும்:** அச்சுத் தாலியும் ஆமைத்தாலியும். **நாயகப் பெண்பிள்ளாய்:** இப் பெண்களுக் கெல்லாம் நிர்வாஹகையானபடி இதுவோ என்கிறார்கள்; சொல்லிற்றுக் கெல்லாம் மறுமாற்றம் சொல்லிக் கிடக்கிறது உன்னுடைய ஐச்வர்யச் செருக்காலே என்னவுமாம்; "பேய்ப் பெண்ணே" என்றதோடு "நாயகப் பெண்பிள்ளாய்" என்றதோடு வாசியில்லையிறே, அகவாயில் பாவம் ஒன்றாகையாலே.

**நாராயணன்:** முகம் தோற்றாமே நின்று வாத்ஸல்யத்தாலே ரக்ஷிக்கக் கடவ ஸர்வேச்வரன். **மூர்த்தி:** தன்னுடைய ஸௌசீல்யத்தாலே பிறந்தது. **கேசவன்:** கண்ணுக்குத் தோற்ற நின்று நம் விரோதிகளைப் போக்குமவன். **பாடவும்:** இப்படி வாத்ஸல்யத்தையும் ஸௌசீல்யத்தையும் ஆச்ரித விரோதி நிரஸநத்தையும் பேசின இடத்திலும்... •

**தேச முடையாய் திற:** இவருக்குக் கிருஷ்ண விஜயாநுஸந்தானப் ப்ரீதியாலே வடிவிற் பிறந்த புகரைக் கண்டு கிண்ணகத்தை அணை செய்யாதே வெட்டிவிடாய் என்கிறார்கள் ஆகவுமாம்.

## 8. கீழ்வானம் வெள்ளென்று

**கீழ்வானம் வெள்ளென்று:** கிழக்கு வெளுத்தது காண் என்றார்கள். திங்கள் திருமுகத்துச் சேயிழையாரான உங்களுடைய முகஜ்யோதிஸ் கீழைத்திக்கிலே சென்று தட்டி உங்கள் முகத்திலே வந்து பிரதிபிம்பிக்கையாலே, கிழக்கு வெளுத்தது போலே தோற்றுகிற தித்தனை.

**எருமை சிறுமை வீடு மேய்வான் பரந்தன காண்:** உங்கள் முகத்தில் ஒளியைக் கண்டு இருள் திரண்டு போகிற தித்தனை.

**கோதுகலம் உடைய பாவாய்:** உன்னை முன்னிட்டுக் கொண்டு செல்ல, கிருஷ்ண விஷயீகாரம் உண்டென்னும்படி அவனாலே கொண்டாடப்படுமவளிறே. **பாவாய்:** நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தை யுடையவளுக்கு எங்கள் ஆற்றாமை தெரியாமை இல்லையிறே. பெண்ணின் வருத்தம் அறியாதவன்படியாகவோ நீயும். 'முலையெழுந்தார்படி மோவாய் எழுந்தார்க்குத் தெரியாதிறே'' என்று பட்டர்.

**பாடி:** அசுரப் பிரகிருதிகளான இரணியாதிகள் படை வீடுகள் போலே திருநாமம் சொல்லப் பொருத ஊரிலே வாயாரத் திருநாமத்தைப் பாடி. **பறைகொண்டு;** நாட்டார்க்கு நோன்பு; தங்களுக்கு ஸேவிக்கையே பலம்.

**ஆவா என்று ஆராய்ந்தருளும்:** "நம்மாலே பேறு'' என்று நாம் வரப்பார்த்திருக்குமவர்கள், "நாம் இருந்த இடத்தே வந்தது இவர்கள் செல்லாமை யிறே'' என்று நமக்கு முகந்தருங்காண். பிரணயித்வம் போனாலும் ஆர்த்த ரக்ஷணம் தவிருமோ? "இரக்கம் மேலான தருமம்'' என்று சொல்லி வைத்து அநுஷ்டியா தொழியுமோ?

## 9. தூமணி மாடத்துச் சுற்றும்

**தூமணி மாடத்து:** குற்றம் எடுத்துக் கழிக்க வேண்டாத நன்மையை யுடைய மணியாலே செய்த மாடம். ஸம்ஸார கந்த முண்டாய்க் கழிந்த முக்தர்க்கும் அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான நித்யருக்கும் உள்ள வாசி போந்திருக்கை.

**மாமான் மகளே:** ஸ்வாமிநியாயும் தோழியாயும் அநுபவித்த தொழிய, ப்ரகிருதி ஸம்பந்தத்தாலும் ஆண்டாள் அநுபவிக்கிறாள்; "மாமன் மகள்'' என்று இட்டுக் கொள்ளுகைக்கு விட ஒண்ணாத உறவு சொல்லுகின்றாள். திருவாய்ப்பாடியிலே ஒரு ப்ராக்ருத ஸம்பந்தம் தனக்கு உஜ்ஜீவநம் என்றிருக்கிறாள்.

**மணிக்கதவந் தாள் திறவாய்:** மாணிக்கங்களின் ஒளியாலே தாள் தெரிகிறதில்லை; நீயே திறவாய் என்கிறார்கள்.

**அனந்தலோ:** நெடும்போது கிருஷ்ணாநுபவம் பண்ணிப் படுக்கையிற் சாய்ந்தது இப்போதோ?

**ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ:** எழுந்திராமைக்குக்காவலிட்டாருண்டோ? நெடும்போது உறங்கும்படி மந்திர வாதம் பண்ணினாருண்டோ? "மையலேற்றி மயக்க உன்முகம் மாய மந்திரந்தான் கொலோ'' என்று அம்மான் பொடி தூவினார் உண்டோ? என்கை.

**மாமாயன்:** ஆச்சர்ய குண சேஷ்டிதங்களாலே அபலைகளான பெண்களை எழுதிக்கொண்டு, அவர்களுக்கு இஷ்ட விநியோகார்ஹமாம்படி பவ்யனாய் இருக்குமவன்.

**மாதவன்:** அதுக்கடியான ஸ்ரீய: பதி அந்த ஸௌலப்யத்துக்குக் குருகுலவாசம் பண்ணின இடம்.

**வைகுந்தன்:** ஸ்ரீய: பதித்வத்தாலே வந்த மேன்மைக்குத் தகுதியான தேச விசேஷத்தை யுடையவன்.

## 10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்

வைகினபின்பும் எழுந்திராமையாலே அம்மே! அழகிதாக நோற்றுச் சுகம் பெறக் கோலினாய்! என்று ஸ்தோபிக்கிறார்கள் என்று மாம்; நோற்க வேண்டாதபடி நோன்பின் பலம் கைபுகுந்தவளிறே என்றுமாம்.

**நோற்று:** ஸித்த ஸாதனையாகையாலே உபாயாம்சத்தில் நிர்ப்பரையாய் இருந்தாள். அவனுடைய ரக்ஷகத்வத்தையுணர்ந்தால் தனக்கு யத்நம் பண்ணப் ப்ராப்தியில்லை; தன் சேஷத்வத்தை யுணர்ந்தாலும் ப்ராப்தி யில்லையிறே.

யாவர் கிருஷ்ணனை உள்ளவாறே அறிகிறார்களோ அவர்களுக்கு எல்லா யக்ஞங்களும் சமாப்தம் ஆகின்றன என்றிறே இருப்பது.

எழுப்புகிறவர்களுக்கும் இதுவன்றோ ஸ்வரூபம் என்னில்; ஸித்தோபாய நிஷ்டர்க்கு விளம்பஹேது இல்லாமையாலே ப்ராப்யத்தில் த்வரையாலே பதறுகிறார்கள்; ஸித்தோபாய நிஷ்டர்க்கும் கர்மஜ்ஞாந பக்திகளுண்டு; இவர்களுடைய க்ரியா கலாபம் கைங்கர்யத்திலே அந்விதமாய் இருக்கும்; ஞானம் ஸ்வரூபத்திலே அந்விதம்; பக்தி ப்ராப்ய ருசியிலே அந்விதம்.

**சுவர்க்கம் புகுகின்ற:** சுகத்தை இடைவிடாதே அநுபவிக்கிற. இவர்களுக்குக் கிருஷ்ணாநுபவமிறே சுகம்.

**அம்மனாய்:** ரக்ஷகையானவளே, நீரக்ஷகையாக, நாங்கள் உனக்குக் குழைச்சரக்கானபடி அழகிதாயிருந்தது.

**மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்:** வாசல் செம்மினால் வாயும் செம்மவேணுமோ? ஐச்வர்யம் மிக்கால் பந்துக்களை ஏன் என்னலாகாதோ? உடம்பைக் கிருஷ்ணனுக்குக் கொடுத்தால் எங்களுக்குப் பேச்சாகிலும் தரலாகாதோ? கண்ணும் செவியும் ஒக்கப் பட்டினிவிடவேணுமோ?

**நாற்றத் துழாய்முடி:** அவன் ஒருகால் அணைத்து விட்டால் அவை அஞ்சாறு குளிக்குப் பரிமளம் நிற்குமே. நாராயணன்: உகவாதாரையும் விடாதவன் உகந்த உன்னை விடுமோ?

**நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியன்:** வெறுமையே பச்சையான இடைச்சிகளுக்கும் சென்று ஆச்ரயிக்கலாம் படியிருக்கிற தார்மிகன். இவர்களுடைய ஆச்ரயணம் உபாயம் அன்று, ருசியாலே. "கிருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று இவர்களுக்கு உபாயம் அவன்தானிறே.

**பண்டொருநாள் கூற்றத்தின் வாய்வீழ்ந்த:** தண்ணீர் குடிக்கக் கல்லின ஏரியிலே அமிழ்ந்திச் சாவாரைப் போலே, ஸத்ருக்கள் பக்கலிலும் வாத்ஸல்யம் உடைய பெருமாள் பக்கலிலே தப்புச் செய்த.

**கும்பகரணனும் தோற்றும்:** உறக்கத்தில் தலையானவனும் உன்பக்கலிலே தோல்வியடைந்தும் கூட.

**உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ:** தன் உறக்கத்தையும் தானே உனக்குத் தந்து போனானோ? அவனது துயில். உன்னது பெருந்துயில். அவன் ஒருத்தியையிறே பிரித்தது; நீ ஊராகப் பிரித்து நின்றாயே.

**தேற்றமாய் வந்து திற;** இரண்டாம் நிலத்திலே கிடக்கிறவளாகையாலே தடுமாறாதே தெளிந்து வந்து திற என்கிறார்கள்; ஊராகத் திரண்டு கிடக்கிறது, படுக்கையிற் கிடந்தபடியே வாராதே ஸதஸ்யையாய் வந்து திற. இலக்ஷ்மணன் ஸந்நிதியை வந்தடைந்த தாரைபோல வாராதே கொள் என்கிறார்கள்.

(தொடரும்)

---

**திருக்குற்றாலம்:** ஸ்ரீ குற்றாலநாத சுவாமி கோயிலில், திருநெல்வேலிப் பிள்ளையன் கட்டளைச்சார்பில் பவித்ர உற்சவம் நடைபெற்றது. திருவாளர்கள் நெல்லை சடகோபன், திருமதி என். பி. மீராபாய் குழுவினர், திரு. எஸ். இராமகிருஷ்ணன் குழுவினர், நெல்லைத் திருப்புகழ்ச் சபையார், ஸ்ரீ ஐயாறு அடிகள், கே. மகாதேவன் குழுவினர், மு. சுப்பையா முதலியார், குழுவினர் ஆகியோர் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (2,3,4,—12—62)

**தஞ்சை:** மாவட்டம் தேவபுரி என்னும் தோகூர் ஆலயத்தில் ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசப் பெருமாளுக்கும் மற்ற மூர்த்திகளுக்கும் வைகானச ஆகமப்படி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. திருக்குறள் வேள் திரு. ஜி. வரதராஜ பிள்ளை பி. ஏ. அவர்களும், திருச்சி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், கும்பாபிஷேகக் கல்வெட்டு, திருமங்கையாழ்வார் திருப்பாசுரக் கல்வெட்டுக்களைத் திறந்துவைத்தார்கள். (6—12—62)

# திருவிரையாக்கலி

திரு. K. M. வேங்கடராமையா M.A., B.O.L. திருப்பனந்தாள்.

## காப்புரைகள்

பழமையான கருங்கற் கோயில்களில் எல்லாம் சிலாசாஸனங்கள் இருத்தலைக் காண்கிறோம். அவை அக்கோயில் எடுப்பிக்கப்பெற்ற காலமுதற் கொண்டு ஆண்ட அரசர் முதலியவர்களுடைய கல்வெட்டுக்களாகும். அக்கல்வெட்டுக்களில் பல்வேறு அறச் செயல்கள் குறிக்கப்பட்டிருக்கும். அவ்வறங்களைப் பாதுகாக்கவேண்டும் என்று கல்வெட்டின் இறுதியில் காணப்பெறும் வாக்கியங்கள் பெரும்பாலும் காப்புரைகள் ஆக இருக்கும். சிவன் கோயிலாயின் 'பன்மாஹேசுவர ரக்ஷை' என்றும், திருமால் கோயிலாயின் 'ஸ்ரீவைஷ்ணவ ரக்ஷை' என்றும் எழுதப்பட்டிருக்கும். 'பன்மாஹேசுவர ரக்ஷை' என்றால் 'பல சிவனடியார்கள் காப்பாராகுக' என்பது பொருள். இனி, அறம் வளர்க— அறம் மறவற்க ; அறமல்லது துணையில்லை— இதனை ரக்ஷித்தார் அடி என் முடிமேலன— இதை அழிப்பான் கங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாவம் கொள்வான்—கடிகை எழாயிருவரையும் கொன்ற பாவத்துப்படுவான்—அகிதம் பண்ணினவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போகக் கடவார்களாகவும்—என்று பற்பல காப்புரைகள் தரப்பட்டிருக்கும்.

## ஆணை

மேற்கண்டவாறு காப்புரைகள் காணப்பெறுதலோடு, தருமங்களை அழிக்காதவாறு காப்பதற்காக ஆணை மொழிகளும் கல்வெட்டுக்களிற் காணப்பெறுகின்றன. மதுராந்தகத்துக் கல்வெட்டொன்றில் (262 of 1901; 477 of Vol. VII) 'மஹா சபையார் ஆணை திருவாணை' என்றுள்ளது. மூன்றாங் குலோத்துங்க சோழனுடைய திருமாணி குழிக் கல்வெட்டில் (157 of 1902; 782 of Vol. VII) 'இத்தன்மம் அழிப்பார் திருவாணை திருபுவன முழுதுடையார் ஆணை திருவிரையாக்கலி' என்றும், முதற் குலோத்துங்க சோழன் ஆட்சியில், திருமாணிகுழியில், திருமாணிகுழி மகாதேவர் திருமடைவிளாகத்து ஸ்ரீகாழி நாடுடையபிள்ளை திருமடத்துக்கு நிலம் இறையிலி யாக்கிய சாஸனத்தில் (1600 of 1902) "விரோதம் புகுதில் விரோதம் செய்தாரை ஸ்ரீயாஞ்ஞை திருவாணை மறுத்தாரைச் செய்வது செய்து இத்தன்மத்துக்கு விரோதம் வராமல் காத்துச் செலுத்தக் கடவோமாகவும், திருவிரையாக்கலி மறுத்தாரைத் தேவர் அடியாராயுள்ள ஆண்டார்களே தண்டித்துத் திருவிரையாக்கலி நிலைநிறுத்தக்கடவார்களாகவும் ; திருவாணை மறுத்தாரை நகரத்தோமே தண்டித்துச் சந்திராதித்தவரை நிலைநிறுத்தக் கடவோமாகவும்" என்றும் காணப்பெறுகின்றன. இவற்றால் திருவாணை திருவிரையாக்கலி என்பன ஆணைகள் என்றும், ஸ்ரீயாஞ்ஞை என்பதும் திருவாணை என்பதும் ஒன்று என்றும் அறியலாம். இவ்வாணைகளை மறுத்தால் என்ன தண்டனை என்பது தெரியவில்லை. ஆனால் திருவிரையாக்கலி மறுத்தாரைத் தண்டிக்கும் உரிமை தேவர் அடியார்கள் (ஸ்ரீமாஹேஸ்வரர்கள்) ஆகிய ஆண்டார்களுக்கு என்றும், திருவாணை மறுத்தாரைத் தண்டிக்கும் உரிமை நகரத்தார்களுக்கு என்றும் இத்திருமாணிகுழிக் கல்லெழுத்துப் பகர்கின்றது. இனி இவற்றின் வேறாக மஹா சபையார் ஆணை என்றொன்றுண்டு என்பது மதுராந்தகக் கல்லெழுத்தால் அறியப்பெறும்.

## திருவிரையாக்கலி

மேலே கண்ட ஆணைகளில் திருவிரையாக்கலி குறித்து 11-ம் திருமுறையிலேயும் 12-ம் திருமுறையிலேயும் சில குறிப்புக்கள் காணப்படுகின்றன.

## 11-ஆம் திருமுறை

பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த பிரபந்தங்களில் ஒன்று கோயில் நான் மணிமாலை. இதில் நான்காவது பாடலில் சிவ பெருமானுக்குரிய தசாங்கங்களைக் கூறுகை யில் 'திருவிரையாக்கலி' குறிக்கப்பட்டுள்ளது. அப் பாடற்பகுதி பின்வருமாறு:—

"தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்
தழங்குந் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல்,தில்லை யாகிய தொல்பெரும் பதியுமென்
றொருபதி னுயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடி."

இதில் சிவபெருமானுக்குரிய ஆணையாகத் திருவிரையாக்கலி என்பது காணப்பெறு கின்றது.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத் தொண்டர் திருவந்தாதி 68-ஆம் செய்யுள் கோட்புலி நாயனுரைப் பற்றியது. அது வருமாறு:—

"பெற்ற முயர்த்தோன் விரையாக்
கலிபிழைத் தோர்தமது
சுற்ற மறுக்குந் தொழிற்றிரு
நாட்டியத் தான்குடிக்கோன்
குற்ற மறுக்குநங் கோட்புலி
நாவற் குரிசிலருள்
பெற்ற வருட்கட லென்றுல
கேத்தும் பெருந்தகையே,"

இதினின்றும் திருவிரையாக்கலி என்பது சிவபெருமான் ஆணை என்பது போதரும்.

## நாதன்றன் வல்லாணை

திருவிரையாக்கலி எனும் ஆணையிட்டவர் கோட்புலி நாயனர். இவர் சோழநாட்டில் திருநாட்டியத்தான்குடி என்னும் ஊரவர். இவர் ஒரு பெருவீரர்; சிவபெருமான் கோயில்கடோறும் அமுதுபடிபெருகச் செய் யும் கடப்பாடு கொண்டவர்; அதற்கென நிறையநெல் சேமித்து வைப்பவர். ஒருகால் வேந்தனேவலால் இவர் போர்மேற் செல்ல வேண்டியதாயிற்று; செல்லுங்கால் தமராயி னோரைத் தனித்தனியே விளித்து,

'எந்தையார்க்(கு) அமுதுபடிக்(கு)
ஏற்றியநெல் இவைஅழிக்கச்
சிந்தையாற் ருனினைவார்
திருவிரையாக் கலி'என்று

ஆணையிட்டு அகன்ருர். இவர் போர் மேற் சென்றபின் கடும்பஞ்சம் வந்தது; கோட் புலியாரின் உறவோவார் யாவரும் பசியால் நலி வுற்றனர்; "இறைவற்குரிய நெல்லிது; தொடற்க; இறைவன் ஆணை" என்று கோட் புலியார் சொல்லிச் சென்றிருப்பினும் பசிக் கொடுமையால், "இறைவன் அமுதுபடியைக் கொள்வது பிழைதான்; எனினும் பின்னர் ஈடுசெய்வோம்" என்று நினைத்து, அந்நெல்லை எடுத்து உண்டனர். சின்னுள் பின்னர்க் கோட்புலியாரும் திரும்பினுர்; நிகழ்ந்ததைக் கேட்டறிந்தார்; யாவர்க்கும் ஆடையணி கலன்களை அளிப்பார்போலே யாவரையும் வரவழைத்தார்; எல்லோரும் வந்ததும், "நாதன்றன் வல்லாணை மறுத்து அமுதுபடி அழித்த மறக்கிளையைக் கொல்லுவேன்" என்று கூறி ஒவ்வொருவரையும் கொன்ருர். இதுவே 12-ஆம் திருமுறையாகிய பெரிய புராணத்தில் வந்த வரலாறு.

## திருவிரையாக்கலி மறுப்பின்

ஆணைகளை மறுப்பின் என்ன தண்டனை என்று கல்வெட்டினின்று தெரியவில்லை. ஆனால் கோட்புலி நாயனர் புராணத்தில் திருவிரையாக்கலி மறுத்தல் சிவாபராதம் என்றும், திருவிரையாக்கலி மறுத்தார்க்குரிய தண்டனை, மறுத்தாரைக் கொல்லுதலே என் றும் தெரிய வருகிறது.

## தொகுப்புரை

எனவே ஆணைகள்—திருவாணை திரு விரையாக்கலி—என்பனவாம் என்றும், திரு விரையாக்கலி என்பது சிவபெருமான் ஆணை என்றும், கோயில்களாலும் தேவர் அடியார்க ளாகிய ஆண்டார்களே திருவிரையாக்கலி மறுத்தாரைத் தண்டிப்பர் என்றும், இவ் வாணை மறுத்தார்க்குக் கொலைத் தண்ட னையே தீர்வு என்றும் கண்டோம்.

# சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T, காஞ்சிபுரம்.

(முன் தொடர்ச்சி)

ஐந்தாம் சூத்திரம்

மூலமலத்தால் தன் உணர்வு விளங்கப் பெறாத உயிர், அமைச்சரோடு கூடிநின்று தன்தொழில் நடாத்தும் அரசன்போல, அந்தக்கரணம் முதலிய தத்துவங்களோடு கூடி நின்று உணர்வு விளங்கப் பெறும்; அவற்றின் நீங்கி நிற்கும்போது உணர்வை இழந்து அறியாமையில் அழுந்தும். இவ்வாறு உயிர் கேவலங்களிற் பட்டு ஐந்து அவத்தை உறும்—என மேலைச் சூத்திரத்துள் விளக்கப் பட்டது. அதுபற்றி ஓர் ஐயம் தோன்றும். உயிர் தத்துவங்களோடு கூடி உணரும் போது அதற்கு முதல்வன் உபகாரமும் உண்டோ, இன்றோ? உண்டாயின், அதனை உயிர் அறியாதிருப்பதற்கு என்ன காரணம்? என்பது. இவ்வையம் நீக்குதற்கு எழுந்தது ஐந்தாம் சூத்திரம்.

> விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண் மூக்(கு)
> அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
> தாம்தம் உணர்வின் தமியருள்
> காந்தம் கண்ட பசாசத் தவையே

என்பது சூத்திரம்.

மெய் வாய் கண் மூக்கு(செவி)என்பவை உலகப் பொருள்களை அறியும் போது, மேலே கூறிய*இயல்புள்ள உயிரால் இடங் கொண்டு செலுத்தப்பட்டே அவற்றை அளவிட்டு அறியும்; ஆயினும், அவை புறப் பொருள்களை நோக்கி நிற்குமேயன்றி, தம்மை நோக்கியும், தம்மை இடமாக்கிக் கொண்டு செலுத்தி நிற்கும் உயிரை நோக்கியும் உணர்வதில்லை.

அதுபோல, உயிர்களும் உலகப் பொருள்களைக் கருவிகளோடு புணர்ந்து நின்று உணர்ந்து வரும் போது தம் உணர்விற்கு முதலாகிய திருவருளால் செலுத்தப் பட்டு நின்றே உணரும்; ஆனால், அங்ஙனம் அறியும் தம்மையும் தம்மை உள்நின்று செலுத்தி உணர்விக்கும் முதல்வனையும் அறியா. உயிர்கள் முதல்வனால் செலுத்தப் பட்டுத் தொழிற்படுவது எதுபோலும் எனின், காந்தத்தின் ஈர்ப்புச் சுழலில் (Magnetic field) உள்ள இரும்பு அதன் ஆற்றல் வயப்பட்டுத்திரிதல் போலும். ஆதலால், காந்தம் இரும்புத் துண்டுகளைத் தொழிற்படுத்தும் போது தான் மாறுபடாது நிற்றல் போல, முதல்வன் தன் அருளாற்றற் சூழலிற்பட்டுத் தொழிற்படும் உயிர்களின் பல்வேறு தொழிற் பாடுபற்றித் தான் சிறிதும் மாறுதல் அடைவதில்லை—என்பது சூத்திரத்தின் பிண்டப் பொருள்.

மெய்வாய்கண் மூக்கு விளம்பிய உள்ளத்தால் (உயிரால் தத்தம் விடயங்களை) அளந்தறிந்தும், (தம்மையும் உள்ளத்தையும்) அவ்வாறு அறியா; அவை போல, தாம் (உயிர்கள்) தம் உணர்வின் தமி அருளால் அளந்தறிந்தும் அறியா; அவை (அங்ஙனம் அளந்தறிதல்) காந்தம் கண்ட பசாசத்து(ப்போல)-என உரைநடை செய்து கொள்க. பசாசம்—இரும்பு. தம் உணர்வின் தமியாகிய அருள்-என இருபெயரொட்டு. உணர்வின் தமி-உணர்விற்கு முதல்; தமி-முதல்.

முதல்வனது பண்பாகிய பேராற்றல் காந்தத்தின் சத்தியைப் போன்றது. காந்தத்தின் சக்தி தான் நிறைந்துள்ள வெற்றிடத்தைத் தன் வண்ணமாக்கி, ஆண்டு அணுகும் இரும்புத் துண்டுகளை உள்ளும் புறம்புமாகக் கலந்து தன் வயப்படுத்தி நடாத்துதல்போல, திருவருளாற்றலும் உயிர்களைத் தன் பெரு நிறைவில் அடங்கக் கொண்டு உணர்த்தியும் செலுத்தியும் வரும்.

இச் சூத்திரத்தில் உணர்த்தப்படும் கருத்தை முதற் சூத்திரம், இரண்டாம் சூத்திரம் ஆகியவற்றின் பொதுக் கருத்துக்களோடு தொடர்பு படுத்தி உளங்கொள்ளுதல் வேண்டும். முதற் சூத்திரத்தில், முதல்வன், உயிர்களின் மூலமலம் கழலுதற் பொருட்டு, உலகத்தை முத்தொழிற்படுத்துவன் எனக் கூறினர் ஆசிரியர். ஒரு பெரிய அலுவல் அமைப்பை அதன் ஆட்சியாளர் பொதுவாக

மேற்பார்வை பார்த்து வருவது போல, முதல்வன் உலகத்தை நடாத்தி வருகிறான் என்னும் கருத்து அச்சூத்திரத்தால் நமக்கு உண்டாகின்றது. இரண்டாஞ் சூத்திரத்தால், ஞாயிறு தானும் தன் பேர் ஒளியும் அல்லது தானும் தன் ஈர்ப்பு ஆற்றற் பெருஞ் சூழலும் (Field of Gravitational Force) ஒருமையின் இருமைப்பட்டுக் கோள்களைத் தன் பாற் படுத்து நிற்றல் போல அம் முதல்வன் தானும் தன் அருளொளியாற்றலும் என ஒருமையின் இருமைப்பட்டு நின்று, உயிர்களோடு ஒன்றாய் உடனுமாந்தன்மையிற் கலந்து நின்று அவற்றைப் போக்கு வரவு புரிவிப்பன் எனப் புகன்றார். இதனால், உலகத்தில் தேசத்தலைவர் ஓரிடத்திலிருந்து தம் நாடு முழுதும் தம் ஆணையிற் செல்ல ஆளுதல் போல அன்றி, முதல்வன் பெரு நிறைவுள்ள பொருளாய்த் தன் பெரு நிறைவில் எல்லாப் பொருள்களையும் உயிரையும் அடங்கக் கொண்டு தொழிற் படுத்துகின்றான் என்னும் அரியகருத்தைப் பெறுகின்றோம். மேலும் வியாபகப் பொருளெல்லாம் தானும் தன் சத்தியும் என இரு திறப்பட்டியைந்து நிற்கும் என்றும், அங்ஙனமே முதல்வனும், தானும் தன் சத்தியும் என்று தாதான்மியத்தால் (ஒருமைஇருமையால்) இருதிறப்பட்டு இயைந்து நின்று யாண்டும் நிறைந்துளன் என்றும், அவன் தனக்கு வேறாகிய உலகு உயிர்களோடு இருமையின் ஒருமையாந்தன்மையில் (அத்வைத சம்பந்தத்தில்) கலந்துநின்றுளன் என்றும் உணர்கின்றோம்.

இரண்டாஞ் சூத்திரத்து அவையே தானேயாய் எனத் தொடங்கிப் பெறுவிக்கப் பட்ட அத்வைதம் என்னும் சம்பந்தத்தின் இயல்பையும் பயனையும் இவ்வைந்தாஞ் சூத்திரத்தால் மேலும் ஆழ்ந்தும் அகன்றும் உணர வைக்கிறார் ஆசிரியர்.

முதல்வன் திருவருள் உயிர்களுக்குப் பிறப்பு வீடு என்னும் இருநிலைகளினும் உபகரிக்கும்; பிறப்பு நிலையில் உயிர்களின் உணர்வில் தட்டாது நின்று, அவ்வுணர்வைப் பற்றி நிற்கும் பாசமாம் பற்றறுத்து அதனை வளர்த்துவரும். இந்நிலையில் அது திரோதான சத்தி (மறைப்பாற்றல்) எனப்படும். இத் திரோதான சத்தியின் வழி நின்று தொழிற் படுவனவே மலமாயைகன்மங்கள். இக்காரணம் பற்றி இச்சூத்திரம் திரோதான சத்தியின் இயல்பு கூறுமுகத்தால் மாயை கன்மங்களின் இலக்கணம் உணர்த்துவதாகக் கொள்ளப்படும். திருவைந்தெழுத்தில் வரும் நம என்னுஞ் சொல்லில் ம மூலமலத்தையும், ந திரோதானசக்தியையும் குறிக்கும். மாயை கன்மங்கள் திரோதான சத்தி வழிப்படுவன வாகலின், அவையும் ந என்னும் எழுத்தாற் குறிக்கப்படுவனவாகக் கொள்ளப்படும்.

இனி, இவ்வைந்தாஞ் சூத்திரப் பொருணிலை பற்றி ஆராய்தற்குரிய முடிபுகள் இரண்டு. அவை விளம்பிய உள்ளத்து மெய் வாய் கண் மூக்கு அளந்தறிந்து அறியா எனவும், தாம் தம் உணர்வின் தமியருள் (அளந்தறிந் தறியா) எனவும் எழுந்த சூத்திரக் கூறுகள் பற்றியவை ஆகும்.

முதலதிகரணம் :

இங்குத் தன்னுற் கூறப்படும் பொருள் 'ஐம்பொறிகள் தம்மோடு ஆன்மா ஒற்றுமைப்பட்டு நின்று செலுத்தினலன்றி ஒரு பொருளையும் அறியா; அவ்வாறு செலுத்தப் தப்பட்டுப் பொருள்களை அறியும் போது தம்மை நோக்கியும் அறியா; ஆன்மாவையும் அறியா என்பது. இக்கருத்து யாவரும் நனவு நிலையில் தமக்கு உண்டாகும் அனுபவம் பற்றி உணர்ந்து கொள்ளக் கூடிய உண்மை. ஆன்மாவை இன்றி ஐம்பொறிகளும் அறியா; ஐம்பொறிகளையின்றி ஆன்மாவும் புறப்பொருள்களை அறியாது. ஆன்மாவும் ஐம்பொறிகளும் தம்முள் ஒன்றை ஒன்று இன்றியமையா. ஆன்மா ஐம்பொறிகளின் நீங்கிக் கனவுநிலை எய்தும் போது ஐம்பொறிகள் தொழிற்படாமையும்; ஆன்மாப் புறப்பொருள்களை அறியமாட்டாமையும் இவ்வின்றியமையாமையை இனிது விளக்கும்.

இங்ஙனமன்றிச் சாங்கியர் வேறுவகையாகக் கூறுவர். நனவுநிலையில் ஆன்மாத் தாமரை இலையில் நீர் போல் பற்றற்று நிற்கும்; அதன் முன்பு புத்திதத்துவம் உணர்வுடையதாக நின்று ஐம் பொறிவாயிலாகப் புற விடயங்களை அறியும், அவ்வாறன்றி ஆன்மாக் கருவிகளோடு ஒற்றுமைப் பட்டு நின்று ஐந்தவத்தையுறும் எனல் வேண்டா' என்பர். அவர் கூற்றுப் பொருந்தாது. ஐம்பொறிகளும் புத்தி தத்துவமும் தமக்குக் கீழ் உள்ள பொருள்களை அறிவதன்றித் தம்மையும் தமக்கு மேலுள்ள ஆன்மாவையும் அறி

யும் தன்னேக்கு உணர்வு (Self-Consciousness) உடையன அல்ல என்பது மூன்று நான்காஞ் சூத்திரங்களில் விளக்கப் பட்டது. ஐம்பொறிகளும் புத்திதத்துவமும் ஆன்மாத் தம்மோடு ஒற்றுமைப்பட்டு நின்று செலுத்துதல் பற்றியே புறவிடயங்களின் அனுபவம் உண்டாகின்றது என்பது, நனவு, கனவு, உறக்கம் என்னும் நிலைகளில் அன்றுடம் நமக்கு உள்ள அனுபவம் பற்றித் தற்சோதனை உள்ளுணர்வால் நுணுகி உணர்ந்து கொள்ளத் தக்கது. மேலும், ஆன்மாவின் முன் நிற்றல் பற்றியே புத்தியும் ஐம்பொறிகளும் உணர்வுடையன வாயின், அவை அங்ஙனம் அறிந்துவருகின்ரேம் எனத் தம்மை நோக்கி அறிவதோடு, ஆன்மாவையும் அறிதல் வேண்டும். அஃதின்மையின், சாங்கியர் கூற்றுப் பொருந்தாக் கூற்று என்பது விளங்கும்.

இவ்வதிகரணத்துப் பொருளைத் தரும் வார்த்திகம் வருமாறு :

ஈண்டு ஐயுணர்வுகள் ஆன்மாவால் உணரும் என்றது, அவற்றினுன் ஆன்மா ஒற்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியா ஆகலான்.

ஐம்பொறியை ஆண்டங்(கு) அரசாய் [உளம் நிற்ப
ஐம்பொறிகள் உள்ளம் அறியாவாம்— [ஐம்பொறியிற்
காணுதேற் காணுது காணும்உளம் காணுதேல்
காணுகண் கேளா செவி

முதலதிகரணம் முற்றிற்று.

(தொடரும்)

---

**திருவெண்காடு:** ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் எல்லைப்போர் வெற்றியின் பொருட்டுச் சிறப்புச் சகஸ்ரநாம அர்ச்சனை வழிபாடு சென்னை மாநில அமைச்சர் திரு. கக்கன் அவர்களால் ஸ்ரீ துர்காம்பிகை சந்நிதியில் ஆரம்பிக்கப்பட்டுப் பொதுமக்கள் நன்கொடையால் தினமும் நடைபெற்று வருகிறது. 10—11—62.

**திருநாகேசுவரம்:** பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாக 10 நாட்கள் நடைபெற்றது. (30—11—62—9—12—62)

**திருவண்ணமலை:** திருக்கார்த்திகைப் பெருவிழா நடைபெற்றது. சக்தி விலாச சபா மண்டபத்தில் சமயச் சொற்பொழிவுகள் வழக்கம்போல் நடைபெற்றன. தமிழ் நாடு காங்கிரசின் தலைவர் திரு. R.கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சமயப்பேரவையினைத் தொடங்கிவைத்தார்கள். புரிசை சு. முருகேச முதலியார், அறநிலையத்துணை ஆணையர் திரு டி. இராமலிங்க ரெட்டியார் M.A., B.L., டி. எஸ். கண்ணபிரான் பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான், வழக்கறிஞர் எஸ். ரங்காச்சாரியார், தவத்திரு சித்பவானந்த அடிகளார் ஆகியோர் தலைமையில் திருவாளர்கள் முருகானந்த வாரியார், கிருஷ்ணமூர்த்தி பாகவதர், ஸ்ரீலஸ்ரீ ந. சரவண மாணிக்கவாசக சுவாமிகள், திரு. டி. கோபால அய்யர், "கலைமகள்" ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன், வித்வான் ம. போ. அண்ணமலை முதலியார், புலவர் ந. ரா. முருகவேள், M.A. M. O. L, வித்வான் திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், வித்வான், சொ. சிங்காரவேலன் M.A., திருமுறைமணி பவானி கண்ணப்பர், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் I.A.S., வித்துவான் சி. அருணை வடிவேலு முதலியார் ஆகிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். காஞ்சிபுரம் திருநெறித் தமிழ் இசை வேந்தர் ஆ. விநாயக முதலியார் அவர்களின் திருமுறைப் பாராயணமும், சாதுஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் குழுவின் பஜனையும் நடைபெற்றன.

திருவிழாக் காலங்களில் பெருந்திரளான மக்கள் கூடுவதால் கோயில்களில் அசுத்தம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தித் துப்புரவு விளங்கச் செய்யும் பொருட்டுத் திரு. புரிசை சு. முருகேச முதலியார் அவர்கள் தலைமையில், திரு. ஆறுமுகசாமி நாடார், திருமதி புஷ்பம் நடராஜன் ஆகிய அன்பர்கள் பலர், கோயிலின் ஒரு பகுதியைக் கழுவித் தூய்மை செய்தனர். இந்நிகழ்ச்சி மக்களிடையில் உணர்ச்சியைத் தூண்டிவிடும் சிறப்பினதாக இருந்தது.

இத்தகைய துப்புரவு இயக்கம் திருவிழாக் காலங்களிலேனும், எல்லாக் கோயில்களிலும் பரவிச் செயற்படுதல் மிக நலம் பயக்கும். (3—12—62—8—12—62)

# கோதைச் சிரிப்பு

பேராசிரியர், **கோ. சுப்பிரமணியம்**, எம்.ஏ., பி.எல்.

அனுமன் தனது உடலைச் சுருக்கிச் சிறிய வடிவெடுத்து இலங்கையில் சீதையை நாடினான். ஒவ்வொரு மாளிகையாகத் தேடினான். காணவில்லை. மனம் சோர்ந்த நிலையில் அங்கொரு பளிக்கு மண்டப வாயிலை யடைந்தான். அதனைக் கடந்து அப்பாற் செல்ல விடாமல் ஒரு சூறாவளிப்புயல் அவனை மண்டபத்தினுள்ளே சுருட்டி இழுத்தது. இவ்வாறு அள்ளி இழுக்கும் பொழுதே எதிர்த்து வந்த இன்னொரு சுழற்காற்றின் அலை அவனை மடக்கிக் கொண்டு வந்து வெளியே தள்ளியது. இவ்விதமாக அனுமன் ஒரு வலிய காற்றோட்டத்தின் சுழலில் சிக்கிக் கொண்டு தவிக்கலானான். பிறகு ஒருவாறு அக்காற்றின் அலை வீச்சுக்களி லிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ஒதுங்கி நடுங்கி உள்ளே பார்த்தான். அங்கே மலை போல் ஓர் அரக்கன் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அவன் விடுத்த குறட்டை மூச்சின் வேகம்தான் அனுமனை அரக்கன் மூக்கின் துளைக்கும், அரண்மனை வாயிலின் வெளிக்கும் இழுத்தும் தள்ளியும் உதறிப் பந்து விளையாடியது. பெரிய மலைக்குகை போன்ற அவன் மூக்கின் துளைக்குள் செலக் கூசியவனாய் அனுமன் வெளியே குதிப்பான். அதற்குள் மற்றொரு பெரிய மூச்சுக் காற்று வந்து அவனை மண்டப வாயிலுக்குத் தள்ளிக் கொண்டு செல்லும். அவ்வாறு செல்பவனை வெளியே விடாது மற்றொரு பேய்ச்சுழல் தோன்றி, மீண்டும் மூக்குவரை வலிய இழுத்துச் செல்லும். அனுமன் கையை உதறிக் கொண்டு திண்டாடி நின்றான். இதனைக் கம்பன் நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளான்.

> "மூசிய வுயிர்ப்பெனு முடுகு வாதமும்
> வாசலின் புறத்திடை நிறுவி வன்மையான்
> நாசியின் அளவையின் நடத்தக் கண்டவன்
> கூசினன் குதித்தனன் விதிர்த்த கையினான்."

ஆனால் அரக்கன் அசையாமல் தூங்கிக் கொண்டுதான் இருந்தான். அவன் தான் கும்பகருணன், இராவணனின் தம்பி. இராமனோடு போர்புரிவதற்குக் கும்பகருணனை உறக்கத்திலிருந்து எழுப்புவது இராவணனுக்குப் பெரும்பாடாகிவிட்டது. இருப்பு உலக்கைகள் தாங்கிய ஆயிரம் மல்லர்களை அனுப்பினான். அவர்கள் வந்து அவன் படுத்திருந்த மண்டபத்தின் வாயிற்கதவைத் திறந்தனர். அவ்வளவுதான் உடனே அவன் சுவாசக் காற்றின் சுழலிலே அகப்பட்டவர்களாய், அவர்கள் அங்கும் இங்கும் இழுத்தலைக்கப்பட்டனர். பிறகு மெதுவாகத் தப்பித்துக்கொண்டு வேறொருவாயிலின் வழியாய் அவர்கள் உள்ளே புகுந்தனர். இதையும் கம்பன் வேடிக்கையாய்க் குறிப்பிடுகிறான் :

> "திண்டிறல் வீரன் வாயில்
> திறத்தலும் சுவாத வாதம்
> மண்டுற வீரர் எல்லாம்
> வருவது போவ தாகக்
> கொண்டுறத் தடக்கைப் பற்றிக்
> குலமுடை வலியினாலே
> கண்துயில் எழுப்ப எண்ணிக்
> கடிதொரு வாயில் புக்கார்."

அங்ஙனம் புகுந்தவர்கள் சங்கு தாரை முதலியவற்றை அவன் காதிலே ஒலித்தார்கள். இரும்பு உலக்கைகளால் குத்தினார்கள். குதிரைகளை அவன் மேலே ஓடவிட்டுச் சுற்றிவரச் செய்தார்கள். இவையெல்லாம் அழுகிற குழந்தையைத் துடையிலே தட்டிக் கொடுத்து ஓராட்டி உறங்க வைத்ததுபோல், அவனுக்கு மிகுந்த உறக்கத்தை வரவழைத்தனவாம். "தட்டுறு குறங்கு போலத் தடந்துயில் கொள்வதானான்" என்று கம்பன் பாடுகிறான். நித்தியம் வேண்டும் என்று வரம் கேட்கப்போய், நித்திரையை வாங்கி வந்த நிருதன் கும்பகருணன். அவன் உறக்கத்திற்குப் பேர் போனவன். நீண்ட உறக்கம் பூண்டவர்களைக் கும்பகருணன் என்று கேலி செய்வது இன்றும் வழக்கமாக இருக்கிறது. அந்தக் கேலியைத் திருப்பாவைத் திருப்பாட்டிலும் நாம் காணலாம். அது மிகுந்த சுவையுடையது.

ஆண்டாள் நாச்சியார் என்னும் கோதையார், மேதையார் பெரியாழ்வாரின் மகளார் ஆவார். அவர் திருமாலுக்குப் பூமாலைகளைச் சூடிக்கொடுத்தார், பாமாலைகளைப் பாடிக் கொடுத்தார். அவருடைய சந்தம் கலந்த செந்தமிழ்ப் பாடல்கள் நந்தகோபன் மைந்தன் சிந்தையை நந்தச் செய்தது. அவர் பாடிய திருப்பாவைப் பாடல்கள் முப்பதும் உபநிடதங்களின் சாரம் என்று அறிந்தோர் கூறுவர். அத்திருப்பாவைப் பாடல் ஒன்றில் பெருஞ்சிரிப்புக்கு இடமாகக் கும்பகருணனும் இடம் பெறுகிறான். எவ்வாறு ?

மார்கழி நீராடலைத் தைந்நீராடல் என்றும் சங்க இலக்கியத்தில் சொல்வது உண்டு. ஆதிப்பிரான் ஆயிரம் பெயருடைய அமலன் பெருமாளின் சீர் பாடிக் கொண்டே நோன்பிருக்கும் பெண்கள் காலையில் நீராட வருகின்றார்கள். அவ்வாறு வரும் வழியில் தோழிமாரைத் துயிலெழுப்பிக்கொண்டு வருகின்றார்கள். அங்கொருபெண் கடுந்தூக்கத்தில் இருக்கிறாள். இவர்கள் கோவிந்தா கோவிந்தா என்று கூறுவதும் அவள் காதில் விழவில்லை. குறட்டை விடுகிறாள். அவள் நிலையைக் கண்டதும் தோழிமார்களுக்குச் சிரிப்பு வந்து விடுகிறது. மேலுலக இன்பத்தை அடைவதற்காக நோன்பு இருப்பேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கும் ஒரு தோழி இப்படி உறங்கலாமா? ஆசையோ சுவர்க்கத்தின் மேலே இருந்தது. பேச்சோ நோன்பைப் பற்றியதாக இருந்தது. ஆனால் செயலோ ஆழ்ந்த உறக்கமாக இருக்கிறதே! உறக்கமும் சாதாரண உறக்கமாக இல்லையே! மனித நிலையைக் கடந்த அரக்க உறக்கமாக அல்லவோ இருக்கிறது! உறக்கத்தில் இவள் கும்பகருணனையும் மிஞ்சி விட்டாளே! இவ்வளவு உறக்கம் இவளுக்கு எங்கிருந்து வந்தது? ஒரு வேளை இவளும் கும்பகருணனும் பந்தயம் போட்டுக்கொண்டு உறங்கத் தொடங்கியதில், அவன் இவளுக்குத் தோற்றுப்போய், தன்னுடைய உறக்கத்தையும் இவளுக்குக் கப்பம் கட்டி விட்டுப் போய்விட்டானோ? பாவம்! தான் சிறையில் இட்டுவைத்த கூற்றுவன்வாயிலே தானாகவே போய் விழுந்து செத்தான் அவ்வரக்கன். தூங்கித் தூங்கிக் கழிக்கிறவர்கள் சாவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? அத்தகைய கும்பகருணனையே இவள் வென்று விட்டாளே! வெளி நின்ற பெண்கள் இவ்வாறு எண்ணிக் கொண்டே தூங்குகின்ற பெண்ணை எழுப்பலுற்றார்கள் :

"அடி, அம்மா! நீயா நோன்பு நோற்று வீட்டின்பத்தை அடையப் போகிறாய்? நறுமணமிக்க துளசிமாலையை அணிந்த நாராயணன் திருப்புகழை நாங்கள் பாடிக்கொண்டு வருவது உன் காதில் விழவில்லையா? கதவையும் திறக்கவில்லை, வாயையும் திறக்கவில்லை; இப்படியா தூங்குவது? கும்பகருணன் உனக்குத் தோற்றுப் போய், இறக்கும்பொழுது இந்தப் பேருறக்கத்தை உனக்குப் பரிசாகத் தந்துவிட்டுப் போனானோ?" என்று கேலி செய்து அழைக்கின்றார்கள். உறங்கிக் கொண்டிருந்த பெண், அவர்கள் அரவத்தைக் கேட்டுச் சோம்பலை முறித்துவிட்டு நீட்டி நெளித்து உறக்கத்தைப் போக்குகிறாள். அதைச் சன்னல் வழியாகப் பார்த்த பெண்கள், "ஐயோ! பாவம்! நல்ல உறக்கம் போலிருக்கிறது! இன்னும் அது தீரவில்லை. உறக்கச் சடைவும் ஓர் அணிகலம் போல் உனக்கு அலங்கார மாகத்தான் இருக்கிறது. மிக நன்றாய் இருக்கிறதே! என்று கேலி செய்கிறார்கள். அதைக் கேட்டுத் துணுக்கென்று அவள் கதவைத் திறக்கப் புறப்பட்டு வருகிறாள். அப்பொழுது தூக்கக் கலக்கத்தால் அவள் தள்ளாடுகிறாள். வெளியே நிற்கும் தோழியர் அதைப் பார்த்து விட்டு," அடடா, பாவம்! கீழே விழுந்து விடாதே. தூக்கம் அதிகம். மெதுவாக நடந்துவா. நன்றாகப் பார்த்துத் தெளிவாக ஆராய்ந்து, மேடு பள்ளம் நோக்கி, வாசல் எங்கே இருக்கிறது, நடைப்படி எங்கே இருக்கிறது, கதவு எங்கே இருக்கிறது, கொண்டியும் தாழ்ப்பாளும் எங்கே உள்ளன என்று தேடிப் பார்த்துத் தெளிவுபடுத்திக் கொண்டு, தேற்றமாய்வந்து, கதவைத் திறப்பாயாக" என்று ஏளனம் செய்கின்றார்கள்; அத்தெய்வமறைத் திருப்பாடல் இதோ இருக்கிறது :

"நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் [பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கருணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் [தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
தோற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்"

இப்பாடலில் ஒவ்வொரு சொல்லும் பொருட்செறிவு கொண்டது; இன்பம் தேக்கிடுகின்றது. பாவை நோன்பு இருக்கும் பெண்கள் பாடுவது போல் கவிமரபாகப் பாடப்பட்டது. ஆனால், இப் பெண்கள் யார்? எல்லா உயிர்களும் பெண்கள். அவர்களின் நாயகன் நாராயணன். அவனை வாழ்த்தி வணங்கி அடைவதுதான் இப்பிறவியின் பயன். இவ்வுண்மையை மறந்து ஆசா பாசங்கள் நிறைந்து, உலகவாழ்வாகிய மையலில் தாழ்ந்து, கும்பகருண உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்புகிறது இப்பாடல். இப்பாடலின் ஒவ்வொரு சொல்லும் நம்மை நோக்கிச் சிரிக்கிறது, விளிக்கிறது, அழைக்கிறது; நம் இதயத்தைத் திறக்கச் சொல்கிறது. இங்குக் கூறப்படும் நோன்பு என்பது தவம். உற்ற நோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையுமே தவம். அன்பையும் அருளையும் கைக்கொள்ளாது விலங்கு வாழ்க்கை வாழ்வது தான் உறக்கம். அந்த உறக்கத்தைத் துறந்து இறைவனின் அருள்நெறியிற் செல்வதுதான் நாம் செய்ய வேண்டிய கடமையும் தவமும் ஆகும். அங்ஙனம் செய்தால் வாழ்க்கை செம்மை பெறும். உலகம் செழிப்புறும். திங்கள் மும்மாரி பெய்யும். நீர் வளம் பெருகும். நிலவளம் சுரக்கும், பசுக்கள் பாலைப் பொழியும், பொங்கற் பானைகளில் பால் பொங்கும். நல் வாழ்வு வாழ்ந்து நல்லோர் வழி நடந்து நாராயணன் திருவருளுக்குப் பாத்திரராவோம். இவ்விதமே வில்லி வந்த மெல்லியலார் சொல்லிப் போனார். அன்னை ஆண்டாள் அருளிச் செய்த உண்மை இதுதான். அவ்விதமே அணி புதுவைப் பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே செப்பிடுவோமாக :

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி [பெய்து
ஓங்குபெருஞ் செந்நெல்லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு [கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் [பசுக்கள
நீங்காத செல்வம் நிறைந்தேலோ [ரெம்பாவாய்."

---

**பந்தணை நல்லூர்:** பசுபதீசுவரர் கோயிலில் மாதாந்தரப் பிரதோஷக் கூட்டு வழிபாட்டின் 4-ம் ஆண்டு விழா நடைபெற்றது. திரு. வி. சௌந்தரராசன் பி. எஸ். ஸி. பி. டி., திரு. மு. அருணசலம் M. A., வித்வான் திரு. கே. சுந்தரமூர்த்தி ஆகியோர் விழாவிற் கலந்துகொண்டனர். (9—12—62)

**திருஅரதைப் பெரும்பாழி:** (அரித்துவார மங்கலம்) பாதாளேசுவர சுவாமி கோயிலிற் கார்த்திகை விளக்கீட்டுப் பெருவிழாவில், திரு. கோ. சிவஞானம் அவர்கள் சொற்பொழிவாற்றினர். மயிலாப்பூர் திருமதி கே. வி. நாகமணி அவர்கள் குழுவினர் இன்னிசை அரங்கு நிகழ்த்தினர். (9—12—62)

**திருவாடானை:** வார வழிபாட்டுக் கழகத்தின் முதல் ஆண்டு விழா, மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. பி. டி. ராஜன், Bar-at-Law, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறநிலையத்துணை ஆணையர் திரு. ஏ. சர்க்கரைச் சேர்வை, பி. ஏ., பி. எல்., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். (10—12—62)

**மன்னார்குடி வட்டம்:** பாமணி நாகநாத சுவாமி கோயிலில் சாதுஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் அவர்களின் பஜனையும், சொற்பொழிவும் நடைபெற்றன. (10—12—62)

**திருமயிலை:** கபாலீசுவரர் கோயிலில் கார்த்திகைத் தீபப்பெருவிழாவின்போது, நாச்சியார் கோயில் வெண்கலப் பயிற்சி நிலையத்தினின்று தருவிக்கப்பெற்ற வாசமாலை விளக்கு, தூண்டாமணி விளக்கு, பிரதோஷ தீபம், பஞ்சாட்சர தீபம், சிருஷ்டி தீபம், சோடச தீபம், பிரபா தீபம், கிளை விளக்குகள், மயில்கொத்து மணிவிளக்குகள் ஆகியவை சிறப்புடன் ஏற்றப்பட்டன. மேற்குறித்த விளக்குகளின் வேலைப்பாடும் அமைப்பும் பெரிதும் வியக்கத்தக்கவை. 16,000 ரூபாய் செலவில் இவ்விளக்குகள் தருவிக்கப்பட்டன. (10-12-62)

# பலபொருள் உருவகப் பாசுரம்

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அங்கட் கடுக்கைக்கு முல்லைப்
புறவம் முறுவல்செய்யும்
பைங்கட் டலைக்குச் சுடலைக்
களரி பருமணி சேர்
கங்கைக்கு வேலை அரவுக்குப்
புற்றுக் கலைநிரம்பாத்
திங்கட்கு வானந் திருவொற்றி
யூரர் திருமுடியே

இப்பாசுரம் வாகீசப்பெருமான் திருவாக்கில் அலங்கார நூலார் கூறும் அணிகளுள் ஓர் அணி நயம் குறித்ததாக அமைந்தது. அலங்கார நூல் கூறும் அணிகளுள் உருவக அணி என்பதும் ஒன்று. அது ஒரு பொருளைப் பிறிதோர் பொருளாகக் கேட்போர் வியக்குமாறு கூறுவது. உதாரணமாகத் "திருவாசகமென்னும் தேன்" "மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேன்" என இங்குத் திருவாசகம் தேன் ஆக உருவகிக்கப்பட்டமை காண்க. இது ஒரு பொருள், பிறிது ஒரு பொருளாகக் கூறப்பட்டது.

இங்ஙனமன்றி யொரேயொரு பொருளிடத்தில், பல பொருளாந்தன்மை காட்டி அப்பல பொருளுமாக, அது விளங்குதலைக் கேட்டோர் வியக்குமாறு கூறுவது பல பொருளுருவகமாம்.

மேற்குறித்த அப்பரருண்மொழிப் பாசுரம் இவ்வணிநயங் காட்டித் திகழ்கின்றது. திருவொற்றியூர்ப் பெருமான் திருமுடியை முதற்கண் முல்லை நிலம் என்கிறார். முல்லைக் கருப்பொருள் கொன்றை. முல்லையிற் கொன்றை மலர்ந்திருக்கும். இங்கும் (திருமுடி) கொன்றை மலர்ந்திருத்தலால் இது முல்லை நிலமாகத் தோற்றமளிக்கிறதென்கிறார். (முல்லைப் புறவம் என்பது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. கடுக்கை—கொன்றை) அது நகுவெண்டலை கிடக்கப் பெறுவதால் ஒரு சுடலை போலத் தோற்றமளிக்கின்றதென்கின்றனர். இங்கே நாலடிச் செய்யுள் ஒன்றை நினைவு கூர வேண்டும். அது,

கழிந்தா ரிடுதலை கண்டார் நெஞ்
சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி
ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன்
பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து

என்பதாம்.

இதனுள் சுடுகாட்டில் வெண்டலை கிடத்தலும், அது சிரிப்பதுபோல் தோன்றுவதும் பெற்றும். அதுபோலவே இங்கு (திருமுடி) ஒரு சிரிக்கும் வெள்ளிய தலையொன்று கிடக்கிறது. நகுவெண்டலை எனப்படுவது தாருகவனத்து முனிவர் வேள்வியிற் றோன்றிச் சிவபிரானைக் கொல்லவந்த பொருள்களுள் இதுவும் ஒன்றும். பெருமான் அதனைத் தலைக்கு அணியாக அணிந்தனர். இந் நகுவெண்டலையைப் பற்றிப் பிரபுலிங்க லீலையிற் சிவப்பிரகாச சுவாமிகள்,

பாக மொருபெண் குடியிருக்கும்
பரம னணியிற் பரித்தமணி
நாக நுழைவுற் றுடல்சுருண்டு
கிடந்து நகுவெண் டலைப்புழையிற்
போக மெல்லத் தலைநீட்டிப்
பார்த்து வாங்கப் போகுமொரு
தோகை மயில்வா கனப்பெருமாள்
துணைத்தாட் கமலந் தொழுதிடுவாம்.

என்னும் முருகக் கடவுள் துதியிற் கூறுகிறார்.

இங்குச் சுடலைக் களரி என்பது சுடலை முற்றம் என்னும் பொருள் தருகிறது. திருமுடியைச் சுடலை முற்றமாகக் கூறலாமோ எனின், நானு சொல்கிறேன்? அத்திருமுடி தானே சொல்கிறதே; நகுவெண்டலையால் என்று கூறியபடி. (பைங்கண்தலை—பசிய கண்களையுடைய தலை; முறுவல் செய்யும் தலை—நகு வெண்தலை யெனப் பொருள் கொள்க)

இனி அத்திருமுடி கடலாகவும் உள்ளது. நதிகளெல்லாம் கடலிற் போய்ச் சேரும். "தொக்கிலங்கும் யாறெல்லாம் சூழ்ந்தோடிப் பொருகடலே புக்கன்றிப் புறம் நிற்க மாட்டாதே"—என்னும் திருமங்கை மன்னன் பாடலாலும் அறியலாம். கங்காநதி புக்கிருக்கும் இடமாய் அமைதலால் அத்திருமுடி ஒரு கடலாகக் காட்சியளிக்கின்ற தென்கின்ருர். (பருமணிசேர் கங்கை—பருத்த முத்துக்களைக் கொழிக்கும் கங்கையெனவும், வேலை—கடலெனவும் பொருள் கொள்க.)

இனி அத்திருமுடி ஒரு புற்று ஆகவும் காட்சியளிக்கிறது. அரவு உள்ளமையால் என்கின்றனர். அரவு வாழ்வது புற்று. "புற்றில் வாழ் அரவுமஞ்சேன்" என்பது திருவாசகம்.

இனி அத்திருமுடி வானமாகவும் பொலிவு காட்டுகிறது, பிறையை அணியப் பெறுவதால் என்கின்றனர். பிறையுலாவுவது வானில்.

மைவார்! கருங்கண்ணி செங்கரங்
கூப்பு மறந்தும் மற்றப்
பொய்வா னவரிற் புகாதுதன் பொற்கழற்
கேயடியேன்
உய்வான் புகவொளிர் தில்லைநின்
ருேன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர்
வெள்ளைச் சிறுபிறைக்கே.

என்ற திருக்கோவையா ராலும் அறிக.

இவற்ருல் திருவொற்றியூர்ப் பெருமான் திருமுடியை முல்லைப்புறவம், சுடலைக் களரி, புற்று, வானம், ஆகிய பலபொருளாக ஏதுக்காட்டி யுருவகித்திருத்தலால், இப்பாசுரம் ஏதுப்பலபொருளுருவகம் என்னும் அணி நலம் பெற எம்மையாளுடைய அரசர் திருப்பாசுரம் பணித்தருளிய இனிமை யறிகின்ருேம்.

இவ்வாறு ஏதுவுடன் கூடிய பல பொருளுருவகமாக வந்தமைக்குத் தண்டியலங்காரம் கூறும் ஒரு பாடலும் நினைவு கூரத்தக்கது. அது :

மாற்றத்தாற் கிள்ளை நடையால்
மடவன்னம்
தோற்றத்தாற் றண்ணென் சுடர்விளக்கம்
—போற்றும்
இயலான் மயிலெம்மை யிந்நீர்மை
யாக்கும்
மயலார் மதர்நெடுங்கண் மான்

என்பதாம்.

---

**சென்னை இராயப்பேட்டை:** சுந்தரேசுவரர் கோயிலில் திருவள்ளுவர் மன்றத்தின் சார்பில் இராலிங்க சுவாமிகள் திருவுருவப் படத்தை உதவி ஆணையர் திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமையில், டாக்டர் திரு. பா. நடராஜன், M. A., D. Litt., M. L. A., அவர்கள் திறந்துவைத்தார்கள். திரு. கே. கமலக்கண்ணன் M. L. C., திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன், திரு. ஆ. நடராஜன் ஆகியவர்கள் சொற்பொழி வாற்றினர். (10—12—62)

**காஞ்சிபுரம்:** திருக்கைலாசநாதர் கோயிற் பெருமானுக்குத் திருமதி கோதாவரி அம்மை அவர்களால் 40 கிராம்கள் எடையில் தங்கத் திருநீற்றுப் பட்டம் அணிவிக்கப்பெற்றது. அவ்விழாவில் அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A. B.L., அவர்களும், வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் கலந்து கொண்டனர். (12—12—62)

**தஞ்சை:** பெருவுடையார் கோயிலுக்கு வருகைதந்த சென்னை முதலமைச்சர் மாட்சிமிகு திரு. கே. காமராச நாடார் அவர்களிடம், இராஜஸ்ரீ இராஜாராம் இராஜாசாகிப் சத்திரபதி அவர்கள், தஞ்சை அரண்மனைக் கோயில்களின் சார்பில் தேசீயப் பாதுகாப்புக்குச் சேமிப்பு நிதியாக ரூ. 25,000 வழங்கியதுடன், 6476 கிராம்கள் தங்கப் பத்திரமும் வாங்கினுர்கள். மேலும் நம் வட எல்லைப் போர்வீரர்களின் உணவுக்காக 500 கலம் நெல் நன்கொடையாகவும் அளித்தார்கள். (16-12-62)

**திருமயிலைக் கபாலீசுரர்கோயில்:** நம் பாரத நாட்டின் வட எல்லைப்போர் வெற்றி குறித்துச் "சோமவார அஷ்டோத்தர சஹஸ்ர சங்க மஹாஸ்தபன அபிஷேகம்" காமிக ஆகமத்தின் முறைப்படி மிகச்சிறப்பாக நடைபெற்றது. (16, 17—12—62)

# இதோ இமயம்

[பேராசிரியர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M.A., B.L., M.O.L.
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்]

——:o:——

இமயமலை இந்தியாவின் வடக்கு எல்லை. இந்நாளில் பல பகுதியில் உள்ளவர்களும் பலவேறு மொழி பேசினுலும் இதனை மறப்ப தில்லை. இமயமலை தான் இந்துக்கள் வழி படும் தெய்வங்களின் நிலையம். 'இமாலயம் ஒரு தேவாலயம்'. நமது புராணங்கள் எல் லாம் இமயமலைக் காப்பியங்களே எனலாம். குமார சம்பவம், கந்த புராணம் அந்த வகை யில் சிறந்தவை. நாம் வழிபடும் தாய்க் கடவுளை மலைமகளாகவே கருதுகின்ருேம்.

இந்த இமயம் நம்முடைய அரசியல் குறிக்கோள் ஆகவும், இந்நாட்டில் அமைந் திருப்பதைக் காண்கிருேம். தனி நாடுகள் பலவாக இந்தியா அமைந்திருந்த காலத்தும், மன்னர் மன்னர்களாய்ப் புகழ் எய்த விரும் பியவர்களுக்கு இந்திய ஒருமைப்பாடே குறிக் கோளாக அமைந்து அவர்களுடைய ஆசை யைத் தூண்டியது. பொற்கோட்டு இமய மும், குமரியும் குடகடலும் குணகடலும் அவர்களுடைய ஆசைக்கு எல்லையாக நின் றன. தென்கோடியில் உள்ள தமிழ் அரசர் களும் இமயத்தை எப்போதும் மறக்கவில்லை. இமயவரம்பன் என்பது ஒரு சேரன் பெயர். இமயமே மேருவாக அவர்களுக்கு விளங்கிய தால், பாண்டியன் மேருவைச் செண்டால் திரித்த கதை பாண்டியரோடு இமயத்திற்கு உள்ள தொடர்பை நிலைநாட்டுகிறது. கரி காலன் புலிக்கொடியை இமயத்தில் நிலை நாட்டினுன்.

சோழரோடு இமயத்திற்குள்ள தொடர்பு இது என்பதும் தமிழரின் நம் பிக்கை. ஏதோ ஒவ்வோர் அரசர் காலத் தில் மட்டும் இந்தத் தொடர்பு விளங்கிய தாகக் கொள்ளக் கூடாது. சோழன் புலி யும் சேரர் வில்லும் பாண்டியர் மீனும் தமிழ் அரசர்களுடைய முத்திரையாக இமயத்தில் என்றென்றும் விளங்கும் என்பது தமிழர் களுடைய மரபு. இவர்கள் நாட்டின் எல் லைக் கல் இமயமே ஆம். எனவே அவர்க ளுடைய குறிக்கோள் வாழ்வு வடவேங்கடத் தோடு நின்று விடாது பொற்கோட்டு இமயம் வரை சென்றது.

இமயத்தில் வாழும் முனிவர்களைக் காத் தல் வேண்டும் என்ற உயரிய எண்ணமும் இந்தக் குறிக்கோளின் அடிப்படையாகும். ஓர் எடுத்துக்காட்டு தரலாம். விசும்பு இயங் கும் முனிவர் வடநாட்டின் மேல் படை எடுத் துச் சென்ற செங்குட்டுவனைக் காணுகின்ற றனர். கண்டு 'வான் பேர் இமயத்து ஏகுதல் நின் கருத்து ஆகலின், அறுமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர். பெருநில மன்ன ! காத்தல் நின் கடன்' என்று வேண் டிக்கொள்கின்றனர். செங்குட்டுவனும் வெற்றிபெற்றவுடன் 'வடதிசை மருங்கின் மறைகாத்து ஓம்புநர் தடவுத்தீ அவியாத் தண் பெரு வாழ்க்கைக் காற்றூதாளரைப் போற்றிக் காமின்' எனத் தன் படைத்தலை வர்க்குக் கட்டளை இடுகின்ருன்.

இந்த இமயம் மக்களுடைய வாழ்விலும், சமயக்குறிக்கோளாக வாழ்கிறது. 'தீர்த்த யாத்திரை' என்ற ஒரு கருத்து வளர்ந்தது. இந்திய நாடே தெய்வத் திருநாடாக மக்கள் எண்ணத்தில் ஓங்கி எழுந்தது. இங்கு உள்ள ஆறுகளும் மலைகளும் கடவுளை நினைப்பூட்டு வனவாக இவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. கங்கை முதல் காவிரி வரையும், காசி முதல் ராமேசுவரம் வரையும், இமயம் முதல் குமரி வரையும் மக்கள் சுற்றிவரத் தொடங்கினர். இதன் பயனுக எழுந்த இந்தியப் பண்பாட் டின் ஒருமைப்பாட்டை எங்கும் காண்கி ருேம். மக்கள் மேற்கொள்ளும் சங்கற்பங் களில் இதனைக் கேட்கிருேம். எத்தனை மக் கள் இன்றும் இவ்வாறு இந்தியா முழுவதும் சுற்றி வருகின்றனர். ஆழ்வார்களும் நாயன் மார்களும் ஒருவகையில் இந்த ஒருமைப் பாட்டை நிலை நாட்டினுர்கள் எனலாம். பதரி, (பத்ரிகாசிரமம்) ஆழ்வார் பாட்டால் இமயமலையை என்றென்றும் நினைப்பூட்டிக்

கொண்டு இருக்கின்றது. திருக்கேதாரம் வடநாட்டுப் பெருங்கோயிலாகத் தேவாரத்தின் வழியே இமயமலையை நினைப்பூட்டிச் சைவர் உள்ளத்தில் ஓங்கி நிற்கின்றது. ஆண்டுதோறும் பதரிக்கும் கேதாரத்திற்கும் போய்வருவார் தொகை மிகுந்து கொண்டே வரக் காண்கிறோம்.

இந்த இமயம் ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வோர் உள்ளத்திலும் ஓங்கி நிற்கிறது என்றும் கூறவேண்டும். திருக்கோயிலின் கோபுரங்கள் அப்பெருமலையினையே நினைப்பூட்டுகின்றன. கோபுரங்களின் அமைப்பு முறை குடிசையிலிருந்து தோன்றின என்பது போன்ற கொள்கைகளை மறுக்க வேண்டியதில்லை. ஆனால் கோபுரம் கோயில்களின் சிறந்த நடுநாயகமான உறுப்பாக ஓங்கி வளர்ந்தபோது இமயத்தைக் குறிக்கும் அடையாளமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. 'கைலாசம்' என்ற சொல்லோடு தொடர்புகொண்ட கோயில்கள், விமானம் என்பன, கைலைக்காட்சியே என்பதனை விளக்குகின்றன. ஆனால் பல்லவர் காலத்திற்குப் பிறகு வாயில் கோபுரங்களாக ஓங்கியவை எல்லைப் பெருங்கோடு (எல்லைக் கல்) என்ற கருத்தை நினைப்பூட்டக் காண்கிறோம். 'இமாலயம் தேவாலயம்' என்று நாம் முன்னர்க் கூறிய கருத்தின் விளக்கத்தை இங்கே காணலாம். பல கலசங்கள் கொண்ட இந்த இராய கோபுரங்களைக் காணும்போது, பல குவடுகள் கொண்ட இமயமலையே நம் உள்ளத்தில் ஓங்குகிறது. இதற்கு ஏற்பச் சிற்பிகளும் இமயமலைப் புராணக் காட்சிகளை எல்லாம் அதில் பொறித்து வைக்கக் காண்கிறோம்.

'கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டா' என்பது உலக நீதி. 'திருக்கோயில் இல்லாதது திருஇல் ஊர்' என்பது திருநாவுக்கரசர் கொள்கை. ஊர்தோறும் திருக்கோயில்கள் எழும்போது இமயமும் ஒவ்வொரு ஊரிலும் எழுகின்றது எனலாம். குன்றுகளும் இல்லாத தஞ்சையில் வான் அளாவும் கோபுரங்கள் எங்கும் நிற்பதைக் காணும்போது இந்தக் கருத்தை, எவ்வளவு தூரம் சோழப் பேரரசர்கள் நம்பி அக்கருத்தை நிலை நாட்ட, எவ்வளவு தூரம் முயன்றார்கள் என்பது நன்கு விளங்கும்.

கோயிலினை மனத்துள்ளேயும் கட்டலாம். ஏழையும் அவ்வாறு செய்யலாம் அல்லவா? உலகத்துப் புறப்பொருள்களோ கடவுள் படைத்தவை. பின் நம் படைப்பு என நம்முடைய எண்ணத்தினையன்றி வேறு எதனைக் கூறமுடியும். அரசன் செய்வதும், ஆண்டி செய்வதும் அவ்வளவே ஆகும். இந்தப் பேருண்மையை வலியுறுத்தவே பூசலார் நாயனாருடைய பேரைச் சுந்தரரும், நம்பியாண்டாரும் சேக்கிழாரும் வற்புறுத்துகின்றனர். எனவே ஒவ்வொருவர் உள்ளத்திலும் இமயமலை ஓங்கி வளர்கிறது. இமயமலை இவ்வாறு ஒவ்வொருவர் தியானத்திலும் குறிக்கோளாக அமைந்து விளங்குவதை 'இமயமலை அல்லது தியானம்' என்ற கட்டுரையில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அழகாக விளக்கி உள்ளார்.

எனவே இமயமலையை இழந்து இந்தியன் வாழ முடியாது. நம்முடைய பல வகைத் துறைகளிலேயும் காப்பிய வாழ்விலேயும், சமயக் கருத்திலேயும், சமுதாய அமைப்பிலேயும், உள்ளத்தின் போக்கிலேயும், இமயம் உறைந்து நிற்கிறது. அதனால்தான் சீனர் இமயத்தைத் தாக்கியதும் இந்தியர் அனைவரும் ஒருங்கு திரண்டு எழுந்தனர். இமயம் எங்கோ இருப்பது ஒன்று அன்று. இதோ தெரிகிறது !. உள்ளே இருக்கிறது ! திருக்கோயில்களில் உள்ள திருக்கோபுரங்களும், நம் உள்ளத்தில் எழும் தியானங்களும், நம் கண்ணுள்ளும், உள்ளத்தினின்றும் தோன்றும் இமயமே ஆம்.

---

மன்னார்குடி : இராஜகோபாலசுவாமி கோயிலில் திருப்பாவை, திருவெம்பாவைப் பேரவை நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் பேரவையைத் துவக்கி வைத்தார்கள். திருவாளர்கள் வீர. சிவசுப்பிரமணியம், தஞ்சை என். எஸ். தாத்தாச்சாரியார், திருவாசமணி கே. எம். பாலசுப்பிரமணியம், B. A., B. L., திருமதி ராஜம்மாள் சுந்தரராஜன், ஸ்ரீ ஏ. எஸ். அரங்கநாதாச்சாரியார், ஸ்ரீ கா. தி. அரங்கநாதன், நாகர்கோயில் ஆறுமுக நாவலர், குடந்தை ஏ. எஸ். மணி ஆகியோர் விழாவிற் கலந்து கொண்டனர். *(16, 17, 18—12—62)*

# வழிபாடு

[திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B.A., B.L.]

பண்டைக் காலம் முதற்கொண்டு மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. தங்களுடைய நலத்தைக் குறித்துக் கடவுளைத் தொழுது வந்தார்கள். தொழுகையில் பல வகைகள் தோன்றின. மக்களுடைய பண்பாட்டின் வளர்ச்சியை முன்னிட்டு அத் தொழுகைகள் மாறின. வெவ்வேறு நாட்டு மக்கள் தங்கள் தங்கள் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்தும் மாறின. உணவு வேறுபாடுகளைக் கொண்டும் தொழுகைகள் மாறின. புலால் உண்ணுகிறவர்கள் தாம் உண்ணும் உயிர்களைச் செகுத்து வழிபாடு செய்தார்கள். மரக்கறி உண்ணுகிறவர்கள் காய்கறிகளைச் சமைத்துத்தொழுகைக்கு இட்டார்கள். தானியங்களைச் சமைத்து வைத்தார்கள். இவ்வாறு தங்கள் ஈட்டின பொருள்களை வைத்துத் தியாக உணர்ச்சியில் தொழுகை நடத்தினார்கள். அவ்வாறு தொழும்பொழுது தாம் வழிபடும் தெய்வங்களைப் புகழ்ந்து பல நல் லுரைகளைக் கூறினார்கள். அவ்வுரைகள் பெரும்பாலும் செய்யுள் வடிவாகவும் இன்னிசையில் அமைந்தவையாகவும் இருக்கும். உருவ வழிபாடும் அருவவழிபாடும் நாடுகளை ஒத்து ஏற்பட்டன. அச்சத்தினால் அமிழ்ந்தவர்கள் பயங்கரமான உருவங்களை வழிபட்டார்கள். அவ்வுருவங்களுக்குத் தக்க சொற்கள் உரைக்கப்பட்டன. அன்பினால் வழிபட்டவர்கள் சாந்த மூர்த்திகளைத் தொழுது அன்புமேலிட்ட சொற்களைக் கூறினார்கள். இவ்விதமாகத்தொழுகைகளும்,பொருள்களும் கால தேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தபடி நிறைவேறி வந்தன. நமது இந்தியாவிலும் தென்னாட்டிலும் இந்த வரலாறே தொழுகையில் காண்கிறோம். வடநாட்டில் 2000 ஆண்டுகளுக்குமுன் சமயச் சார்பில் யாக யக்கியங்களே சிறப்பாக இருந்தன. அவைகளில் வடமொழி மந்திரங்கள் ஓதப்பட்டன. தற்போதும் யாகங்கள் மறைந்துபோயும் வடமொழி மந்திரங்கள் கோயில்களில் வழங்குகின்றன, ஜைன பௌத்த சமயங்களின் போதனையால் யாகங்களில் பலியிடுதல் நின்றுவிட்டன.

ஆனால் தென்னாட்டிலோ வடமொழி மந்திரங்கள் பயன்பட்டனவாகச் சான்றுகள் இல்லை. பண்டைச் சேர சோழ பாண்டியர் காலங்களில் எந்த மொழியில் வழிபாடு நடத்தப்பட்டனவோ உறுதியாய்க் கூறச் சான்றுகள்கிடையா. பல்லவர் காலத்தில் வடநாட்டிலிருந்து வடமொழி தெற்கே வந்ததென்பர். நாட்டுப்புறத்து மேடைக் கோயில்களில் மக்கள் தம் மொழிகளிலே பிரார்த்தனை செய்து வந்திருப்பார்கள். பல்லவர் காலத்தில் உறுதியாகக் கோயில்கள் கட்டப்பட்ட வகையில் பிரார்த்தனை ஒருவாறு மாறியிருக்கக் கூடும்.

ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் அப்பர் தோன்றியும், அடுத்து ஆழ்வார்கள் தோன்றியும் சைவ வைணவக் கோயில்களின் சிறப்புக்களைத் தம் அரிய அன்புப் பாசுரங்களால் பிரசாரம் செய்தபோது, வழிபாட்டு முறை பெரும் மாறுதல் அடைந்தது. வழிபாட்டில் தேவாரமும் ஆழ்வார் பாசுரங்களும் ஓதப்பட்டன. மக்கள் தம் மொழியிலேயே வழிபாடு செய்தார்கள். ஏழு முதல் பத்து நூற்றாண்டுகள் வரை இந்த முறை முன்னேறி வந்தது. அந்த வகையில் பன்னிருதிருமுறைகளும் நாலாயிரப் பிரபந்தங்களும் வெகு சிறப்பாக வழங்கத் தொடங்கின. 10, 11ம் நூற்றாண்டுகளில் இராஜராஜனும், இராஜேந்திரனும் வடநாட்டுப் படையெடுப்பின்போது வடக்கே இருந்து வடமொழி வழிபாட்டைத் தெற்கே கொண்டுவந்தனர். தமிழ்ப் பாசுரங்களையும் விட்டுவிடாமல் ஒரு பகுதியை ஓதும்படி ஏற்படுத்தினர். இந்த முறையில் 12-ம் நூற்றாண்டின் பின் இருமொழிகளும் வழிபாட்டில் இணைந்துவிட்டன. நாளது வரையில் அதே முறை நடவடிக்கையில் இருக்கின்றது. கோயில்களில் துதி சொல்வதில் வடமொழி மந்திரங்கள் முதலில்

சொல்லப்படுகின்றன. புராணங்களில் வருகின்ற நாமாவளிகளும் சில வேத மந்திரங்களும் ஆகமரீதியில் கூறப்படுகின்றன. பிறகு தமிழ்ப் பாசுரங்கள் ஓதப்படுகின்றன. இவைகள் பஞ்சபுராணம் என்ற வரிசையில் சொல்லி, முருகன் திருப்புகழ்களோடு முடிகின்றன. தெய்வங்களுக்கு வைக்கப்படும் நைவேத்யங்கள் வினியோகம் செய்யப்படுகின்றன. சைவாலயங்களில் திருநீற்று வினியோகம், வைணவ ஆலயங்களில் தீர்த்தம் துளசி சடகோபம் சாத்துதல் முதலியன நடத்தப்படுகின்றன. இந்த வகையில் வழிபாடு ஒரு முறையாக வந்துவிட்டது இப்படியிருக்கையில் தற்போது மொழிப்பற்று மிகவாக ஏறியிருக்க, அதை முன்னிட்டு நாட்டு மொழிகளில் ஆராதனை செய்யவேண்டும் என்ற கிளர்ச்சி தொடங்கி யிருக்கிறது.

நாட்டு மொழிக் கிளர்ச்சி கல்வி முதிர்ச்சி நாகரிக முன்னேற்றம் இவைகளினால் ஏற்படக் கூடியதுதான். இதனை அறவே தடுத்தல் நல்லதல்ல. வரலாறு இதனை வற்புறுத்துகிறது. ஐரோப்பாவில் கிறித்தவ சமயத்தில் பல நூற்றுண்டுகளாக லத்தீன் மொழியிலேயே அவர்கள் தேவாலயங்களில் நடைமுறைகள் நடத்தி வந்தார்கள். 16-ம் நூற்றுண்டில் நாட்டு மொழிக் கிளர்ச்சி ஏற்பட்டது. அப்போது கிறிஸ்தவ வேதம் நாட்டு மொழிகளில் தோன்றின. பிரார்த்தனைகளும் நாட்டுமொழிகளில் செய்யப்பட்டன. கத்தோலிக்கு சமயத்தார் மட்டும் லத்தீனிலேயே நடத்தி வருகிருர்கள். அண்மையிலே அங்கேயும் இக்கிளர்ச்சி உண்டாகி லத்தீன் பிரார்த்தனைகள் நாட்டுமொழிகளில் எழுதி வருகிருர்கள். நாட்டுக் கோயில்களில் நாட்டு மொழியையே வைத்துக்கொள்ள அனுமதித்தும் வருகிருர்கள். இது வியப்பேயல்ல. நமது கோயில்களில் நாளாவட்டத்தில் வரக் கூடும்.

நாகரிகமும் பகுத்தறிவும் ஓங்கிவரும் இந்த நாளில் ஆலயச் சடங்குகளும் வழிபாடுகளும் அம்முதிர்ச்சிக்கு ஏற்ப மாறவேண்டியது அவசியம். கோயில்களில் பலி கொடுப்பது நின்றுவிட்டதல்லவா? அது மக்களுடைய பகுத்தறிவுக்கு ஏற்றபடி மாறியது. அதுபோலச் சில சடங்குகளும் மாறவேண்டியது அவசியம். பொருள் விளங்கக்கூடிய மொழிகளில் நடத்தினுல் மக்கள் அச்சடங்குகளின் மேன்மைகளை அறிந்து மாற்றியும் ஒழுங்குபடுத்தியும் நடத்துவார்கள். இந்தக் காரணத்தை முன்னிட்டு ஆலோசித்தால் திருவிழாக்களில் நடைபெறும் பற்பல ஆடம்பரங்களை நிறுத்திவிட்டுச் சமய உண்மைகளுக்கு ஏற்றபடி மக்கள் அறிவைப் பெருக்கும் முறையில் அவைகளை நடத்தலாம். இது தான் சமயஞானம் பரப்புவதற்குத் தக்க வழியாகும்.

இசுலாமியப் பள்ளிகளிலும் கிறிஸ்தவ ஆலயங்களிலும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கு ஏற்றபடி பிரார்த்தனைகளும் உபன்னியாசங்களும் புரிகிருர்கள். அவைகளுக்கு ஏற்றபடி சமயக் கல்விபெற்ற ஆசிரியர்களையே கோயில்களில் நியமிக்கிருர்கள். அதனுல் படித்த மக்கள் மிகுதியாக ஆலயங்களுக்குச் செல்லுகிருர்கள். நமது ஆலயங்களிலே பாமர மக்கள்தான் மிகுதியாகச் செல்லுகிருர்கள். அங்கே வேடிக்கைகள் விளையாட்டுக்கள் இவைகளைக் காணச் செல்லுகிருர்களே ஒழியப்பக்தியினுலும் சமய ஞானம் பெறவேண்டியும் செல்வதில்லை. வெள்ளிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆயிரக்கணக்கில் இசுலாமியரும் கிறிஸ்தவர்களும் ஏன் சமயநிலையங்களுக்குச் செல்லுகிருர்கள்? நமது மக்களில் படித்தவர்களும் செல்வவான்களும் ஏன் செல்வதில்லை. அறிக.

வார வழிபாடு என்ற இயக்கத்தைச் சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தொடங்கினுர்கள். சில இடங்களில் நடைபெறுகின்றன. பல இடங்களில் நின்றுவிட்டன. ஏனெனில் இந்த இயக்கத்தில் ஆலய அதிகாரிகள் ஈடுபடவில்லை. சில இடங்களில் மட்டும் நிர்ப்பந்தத்திற்காகச் சிலரைப் பேசச் செய்கிருர்கள். அந்த முறையை நிர்வாகத்தர்கள் போற்றுவதில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆலயத்திலும் பிற்பகல் ஒருமணி நேரம் வழிபாட்டு முறையில் சமயப் பேச்சுக்கள் நடத்தினுல் நல்லதே. கூடிய மட்டிலும் ஓய்வு நாளாகிய ஞாயிற்றுக்கிழமை காலையிலும், திருநாட்களில் மாலைகளிலும் சமயப் பேச்சுக்கள் தவருமல் வைத்தால் உண்மையான வழிபாடு ஏற்படும். இந்த இயக்கத்தில் நாம் சிறிதும் பாடுபடுவதில்லை.

ஒரு கோயிலினுடைய பலன், அதில் ஈடுபடும் பொதுமக்களுக்கு இருக்கவேண்டியதே ஒழியக் கோயில் ஊழியர்களுக்கல்ல ஆகவே

அதில் வரும் வரும்படி பொதுமக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டுமேயன்றி, ஊழியர்களின் ஊதியங்களுக்கேயும் ஆடம்பரங்களுக்கேயுமே செலவழிக்கக் கூடாது. நூற்றுக்கு ஒருபங்கு கூடத் தற்போது சமயப் பிரசாரத்திற்குப் பயன்படுவதில்லை. கோயில் நிர்வாகத்திற்கும் ஆடம்பரச் செலவுகளுக்குமே 99 விழுக்காடு செலவு ஆகிறது. இதை மாற்றி வீண் ஆடம்பரங்களையும் அர்த்தமற்ற உலகியல் டம்பச் செலவுகளையும், சமயப் பகையான வீண் நிகழ்ச்சிகளையும் நிறுத்தி, ஆன்மீக போதனைகளுக்குச் செலவழித்து மக்களை உய்விக்கச் செய்வதே அதிகாரிகளின் கடமையாகும்.

கோயில் நிர்வாகத்திற்கும் பிரசாரத்திற்கும் ஊழியங்களுக்கும் நியமிக்கப்படும் ஆட்கள், சமய அறிவில் தேர்ந்த மக்களாகவே இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய சமயக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டும். அவைகளில் பயிலும் சமய மக்களுக்கே வேலை தர வேண்டும். பழனியில் ஏற்படுத்தியிருக்கும் சமயக் கல்லூரிபோலப் பல பெரிய ஆலயங்களை ஒட்டியும் வைக்கவேண்டும். அப்போது தான் உண்மையான வழிபாடு நடத்தி வைக்க முடியும். அந்த ஒழுங்கு விரைவில் ஏற்படுவதாகுக.

---

சென்னைப் புரசைத் திருநெறிக் கழகத்தின் சார்பில் ஸ்ரீ வேப்படி விநாயகர் கோயிலில், திரு. ச. சிவகுமாரன் M. A,. அவர்கள் தலைமையில், திருமதி ஜெயகுமாரி பாஸ்கரன் அவர்கள் திருவெம்பாவைத் தொடர்சொற்பொழிவு நடத்தினார்கள். அறநிலைய உதவி ஆணையர் திரு. ஏ. இராமச்சந்திரன் M. A., B. L., அவர்கள் தொடக்க உரை வழங்கினார்கள், (22—12—62)

திருச்சி: வட்டத்திருக்கோயில்களின் சார்பாகத் திருவெம்பாவை திருப்பாவை மாநாடு, தாயுமானவர் திருக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெற்றது. இம் மாட்டை, நம் அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார், இலஞ்சி, ஆ. இ. முத்துக்குமாரசுவாமி, மதுராந்தகம் குருகுலம் அழகரடிகள், இராசிபுரம் வித்துவான் மு. இராமசாமி, வில்லிசைப்புலவர் ச. பா பிச்சைக்குட்டி, ஜி. வரதராஜப் பிள்ளை பி. ஏ., வித்துவான் எஸ். கே. இராமராஜன், வே. இரத்தின சபாபதி, தஞ்சை என். எஸ் தாத்தாச்சாரியார், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், குமாரி டி. வசந்தா பி. ஏ, குமாரி டி. சகுந்தலா, பி. எஸ்ஸி. பிடி,. (நடனம்) ஐயன் பெருமாள் கோனர், குமாரி ரா. ராஜம் பி. ஏ., பு. ரா. சுவாமிநாதன் எம். ஏ., எல். டி. போத்தனூர் வே. இராமசாமி, தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் I. A. S, திருமதி எஸ் சிவானந்த விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர். (22, 23, 24—12—62)

சென்னை: ஸ்ரீவைஷ்ணவ மகாசங்கத்தின் 37-ம் ஆண்டு விழா, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஸ்ரீ உப்புட்டூர் ஆழ்வார்செட்டி இராமானுஜகூடம் நிலையத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், B. A., B. L., அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். செங்கல்பட்டு மாவட்டத் தலைவரும், ஆலந்தூர் ஸ்ரீ வைஷ்ணவ சங்கத் தலைவரும் ஆகிய திரு. A. S. துரைசாமி ரெட்டியார் M. L. A., அவர்கள் தலைமை தாங்கினார்கள். 26—12—62 பிற்பகல் நிகழ்ந்த மாதர் மாநாட்டிற்கு ஸ்ரீமதி P. ஆண்டாளம்மா மதன கோபாலநாயுடு அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள் (22, 23, 24, 25, 26—12—62)

காஞ்சிபுரம் வட்டம்: இளையனார் வேலூர் ஸ்ரீ பாலசுப்பிரமணி சுவாமி கோயிலில், முருகன் லாரி சர்வீஸ் உரிமையாளர் திரு. V. V. A. சுப்பிரமணிய முதலியார் அன்பளிப்பாகக் கட்டித்தர இருக்கும் உயர் நீர்த்தொட்டிக்கு (Water Tank) அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். திரு. O. S. சீனிவாச ரெட்டியார் M. L. A., அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

# திருவருட்பயன்

திரு. பூ. சமரபுரி முதலியார், தாம்பரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

### ஒன்பதாம் அதிகாரம்—ஐந்தெழுத்து அருள் நிலை

ஐந்தெழுத்தும் திருவருளே; அவற்றின் தன்மையைக் கூறும் பகுதி. ஆன்மா பல வகைச் சாதனங்களினாலும் பெற்ற இன்புறு நிலை வாசனாமலத்தால் சலியாது நிலைத்திருத் தற் பொருட்டு அஞ்செழுத்தை விதிப்படி கணிக்க வேண்டும் தன்மையைக் கூறுவது.

ஆகமங்களும் வேதங்களும் மற்றைய கலைஞான நூல்களும் அஞ்செழுத்தின் விரிவேயாம். இவ்வுண்மை அஞ்செழுத்தின் தன்மையை ஆராயப் புகுந்தால் விளங்கும். அதாவது அஞ்செழுத்தும் கடவுள், உயிர், தளை என்னும் மூன்று பொருள்களின் நிலை களைக் குறிப்பிற் புலப்படுத்துவனவாம். இதையே நூல்கள் விரிவாக அல்லல் இல்லா மல் விளக்கும்.

நல்லிலக்கணம் இல்லாத ஆன்மாக்கள் முத்தி அடையும் வழி இது என்றும், 'நான் ஞானி'' என்று சொல்லும் ஆன்மாக்கள் முத்தி அடையா என்றும் சந்தேக விபரீதம் அறவிளக்கும்.

ஐந்தெழுத்து சமஷ்டி வியஷ்டி என இருவகைத்து. சமஷ்டி ஐந்தெழுத்து ஓம் என்பதாகும். இது நுண் ஐந்தெழுத்தாகும். வியஷ்டி பலவகை.

முன்னே சமஷ்டியை நோக்குவோம். ஓம் என்பது. அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் ஆகிய ஐந்தும் சேர்ந்தது. அகரம் உயி ரையும், உகரம் திரோதானத்தையும், மகரம் மலத்தையும் விந்து சக்தியையும் நாதம், சிவத் தையும் குறிக்கும். இது ஞானம் பெற்று முத்திபெற விரும்புவோர் தியானிப்பது.

வியஷ்டி பலவகை—தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகாகாரணம், முத்தி என்பன.

தூலம் இருவகை-(1) நமசிவய (2) ஓம் நமசிவய. முன்னது புலால் உண்ணும் துரா சார முடையார் அது நீக்கி உலக அல்லலி னின்று விடுபட விரும்புவோர் ஓதுவது-பின் னது உலகு அல்லல் நீங்க விரும்புவோர் ஓதுவது.

சூக்குமம் மூன்றுவகை ;—

(1) சிவயநம
(2) ஓம் ஹாம் ஹம் சிவயநம
(3) ஓம் சிவய வசி
அதிசூக்குமம்-ஓம் சிவய
காரணம்-ஓம் சிவ
மகாகாரணம்-ஓம் சி
முத்தி-ஓம்

நமசிவய - அல்லலைப் போக்குவது. இதையே ஊன நடம் என்கின்றார். ஆசிரியர். அதாவது ஆன்மாவின் குற்றத்தைப் போக்கு வது. சிவயநம முத்தியைத் தருவது. இதை ஞான நடம் என்கின்றார்.

நகர முதலாக (நமசிவய) என்று ஓதி னால் மலம் நீங்காது. ஆனால் உலக இன்பங் களில் பற்று அறாத உபாய மார்க்கர் பற்று நீங்க இது உபதேசிக்கப்படுவர். இது ஆன் மாவைப் பிறவியில் அழுந்தச் செய்யும், அழுந்த அழுந்த மலம் தேயும், ஆன்மா தூய்மை அடையும். அப்போது பிறவி அல் லல் நீங்க வேண்டும் என்னும் விருப்பம் எழும், நீக்குகின்றவன் யார் என்று ஆராயும், சிவம் என்று அறியத் தலைப்படும்; மமகா ரத்தை (புறப்பற்றை) விடும், பின் அகங் காரத்தை (அகப்பற்றை) விட முயற்சி செய்யும்.

அந்த முயற்சியால் ஞானத்திற்கு முதற் படியாகிய (அரும்பு) சரியையில் மனம் செல் லும்; அப்போது திருவருள் காற்பங்கு பதியும்; உலகப்பற்று காற்பங்கு நீங்கும்- பின் இரண்டாம் படியாகிய (மலர்) கிரியை யில் மனம் செல்லும், அப்போது திருவருள் அரைப்பங்கு பதியும், உலகப்பற்று அரைப் பங்கு நீங்கும்-பின் மூன்றும்படியாகிய(காய்)

சிவயோகத்தில் மனம் செல்லும், அப்போது திருவருள் முக்காற் பங்கு பதியும், உலகப் பற்று முக்காற் பங்கு நீங்கும். மேல் நான்காம் படியாகிய (கனி) ஞானத்தில் மனம் செல்லும், இப்போது திருவருள் முழுத்திறத்துடன் பதியும். இதையே நான்காம் சக்தி பதிதல் என்பர் சிவஞானிகள் (மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்று சொல்வர்.)

அப்போது ஞானசாரியன் தோன்றி ஓம் சிவயநம என்று உபதேசிப்பர். இதையே மாணிக்கவாசகனார் "நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்'' என்றார்.

அறிஞர்களே! இப்போது எல்லாரும் "சிவயநம'' என்று உபதேசிக்கப்படுகிறார்களே என்றால், குருக்கள் ஆவார் இருவகை-காரணகுரு, காரியகுரு. காரணகுரு ஆன்மாவின் உண்மை நிலையை ஆராய்ந்து உபதேசிப்பர்; காரியகுரு பொருளை முன்னிட்டு உபதேசிப்பர், ஆன்மாவின் பயனை நோக்கி அல்ல. பணம் கொடுக்கிறவன் பெரியவன் ஆனால், அவன் என்ன சொல்லுகிறானோ அப்படிச் செய்வர்.

சிவயநம: என்று ஓதினால், முத்தி அடைய விரும்பும் நினைவுடையவர் ஆவர். அதை விடாது முறைப்படி ஓதிவந்தால் மிக்க ஆர்வம் தோன்றும். அஃதறிந்து ஞானசாரியன் தோன்றி, 'ஓம் ஹாம் ஹம் சிவயநம:' என்று உபதேசிப்பர். பின்னர் ஞானம் முதிர்ந்து சிவத்தைப் பெற்றோர் "ஓம் சிவயவசி'' என்றும் "ஓம் சிவய'' என்றும் உபதேசிக்கப்படுவர். இதையே மணிவாசகனார் "உடையாள் உன்றன் நடுவிருக்கும்'' என்னும் திருப்பாட்டில் குறிப்பாக உணர்த்துகிறார். அப்பர் அடிகளும் திருப்பாலைத்துறைக் குறுந்தொகையுள் 6-வது செய்யுளில் "மறவாது சிவாய என்று எண்ணினார்க்கு இடமா எழில் வானகம் பண்ணினார்'' என்று குறிப்பிடுகிறார்.

"ஓம் சிவ'' என்னும் காரண ஐந்தெழுத்து, சிவத்தைப் பெற்று நெஞ்சில் பொருந்த வைத்திருக்கும் போது, முன்போல் ஆன்மா வெளிப்பட்டு நில்லாது அருளுடன் கலந்து நிற்கும்போது உபதேசிக்கப்பெறுவது.

"ஓம் சி'' என்னும் மகாகாரணம் அருளும் சிவத்தில் ஒடுங்க, உயிர் சும்மா இருந்து சிந்திப்பது.

'ஓம்' என்னும் முத்தி அஞ்செழுத்து உயிர் சிவத்துடன் கலந்து தன்னை மறந்து நிற்கும் நிலையில் நினையாமல் நினைப்பது.

பிறப்பை விளக்கும் திரோதானமும் மலமும் ஒரு பக்கத்திலும், முத்தியை உதவும் சிவமும் சத்தியும் ஒரு பக்கத்திலும் இருக்க, பிறப்பிற்பட்டு மலங்கள் நீங்கி, முத்தி அடைதற்குரிய ஆன்மா நடுவில் இருக்கும் உண்மையைச் சிகாராதி ஐந்தெழுத்தில் காணலாம். அதில், சிவ முன்னேயும், நம பின்னேயும் இருக்க, 'ய' இரண்டுக்கும் நடுவே உள்ள நிலையை நாடி, ஓதிப், பாச நீக்கமும் முத்திப் பேறும் அடைவோமாக! (சிவ ய நம:)

திரோதான சத்தி மலத்தோடு சேர்ந்து அதைப் பக்குவப்படுத்தும் வரை, உயிரைப் பிறவிகளில் அழுத்தும். இந்தப் பெத்த (கட்டு) நிலையில் ஆன்மா இறைவன் திருவருளினால் வினைகளை அனுபவித்து, இருவினையொப்பு வந்ததும் மலம் நீங்கும், அது நீங்கவே திரோதானமும் நீங்கும்; வகரமாகிய திருவருட் சத்தியால் ஆன்மா சிவத்தை அடையும். அப்போது ஐந்தெழுத்தும் நான்கெழுத்தாகும். (ஓம் சிவய).

நகர முதலாகக் கணித்தால் முத்தியாம் ஆனால் உலக இன்பங்களில் பற்று அறாத உபாய மார்க்கர் பற்று நீங்க நகர முதலாக உபதேசிக்கப் பெறுவர்.

முத்திக் காமிகள் தங்கட்கு ஆதாரமாகிய சிவத்தையும் அதைக் காட்டுகின்ற அருளையும் முன்னே வைத்து ஓதினால் நகர மகரங்கள் திரும்பிப் பற்றா. "வா'' ஆகிய சத்தி 'சி' யாகிய சிவத்தைக் காட்டி, ஆன்மாவை வீட்டு இன்பத்தில் வாழச் செய்யும். அந்தத் திருவருளே முத்தியில் ஆன்மாவுக்குக் குற்றமற்ற (மாயா காரியமல்லாத) திருமேனியாக இருக்கும்.

இம்மையில் சீவன் முத்திநிலை அடைதற்கு ஏதுவாயுள்ள ஆன்மா திரோதானத்திற்கும் சிற்சத்திக்கும் நடுவில் நில்லாது, சிற்சத்திக்கும் சிவத்துக்கும் இடையே நிற்பது முறைமையாம். சிவயநம என்பதில் ய நகரத்திற்கும் வகரத்திற்கும் நடுவே நிற்கிறது; இது சீவன் முத்தி அடைதற்கு முன். அந்நிலை அடையப் பக்குவப்பட்ட காலத்து, ய ஆனது இரு பக்கமும் அருளும் சிவமும் இருக்க அருள்மேனி கொண்டு சிவத்தோடு நிற்கும். (சிவ ய வசி.)

ஆகையால் வேதாகமங்கள் ஆன்மா சிவ சத்தியினின்றும் ஒருபோதும் நீங்கி நில்லாத தன்மையை அறிந்து முத்தியடைதற் குரிய வழிகளையும் சாதன முறைகளையும் கூறும்.

பஞ்ச அட்சரம் என்பது ஐந்தெழுத்து என்னும் பொருளைத் தருவதோடு அமையாது, விரிந்த பொருளை உணர்த்தும் என்னும் அருத்தத்தையும் கொண்டு நிற்றல் சிந்திக்கற்பாலது. (பஞ்ச என்றால் விரிந்த என்னும் பொருள் - பஞ்சானனம் என்பது சிங்கம் - விரிந்த முகத்தை உடையது - பஞ்ச+ ஆனனம்).

## பத்தாம் அதிகாரம்
## அணைந்தோர் தன்மை

பாசத்தினின்றும் நீங்கித் திருவடி ஞானத்தைப் பெற்று, அதனால் முதல்வனாகிய ஞேயத்தைக் கண்டு, கண்ட காட்சி சலியாது நிலைத்தற் பொருட்டுத் திரு அஞ்செழுத்தை உணர்ந்து விதிப்படி எண்ணிச் சமாதியினைக் கூடி, அயரா அன்பின் அரன் கழல் அணைந்த சீவன் முத்தர்களது தன்மை.

மகத்தாகிய நிறைந்த ஞானத்துள் அடங்கித் தம்மறிவினுள்ளே பேரின்பம் அடங்கும்படி ஆநந்த நித்திரையில் அமிழ்ந்திருப்பர். உலகோடு செறிவற்று உரை சிந்தனையும் அற்றுச் சிவத்தை நினைப்பது அல்லது வேறு நினைவில்லை.

இவர்கள் சிவமாந் தன்மையை அடைந்து, ஞேயத்தில் அழுந்திப் பரமாநந்தத்தை அனுபவிப்பவராயினும், சிவத்தாற் செய்யப்படும் ஐந்தொழில்களையேனும், காரணேஸ்வரர்கள் செய்யும் ஒவ்வொரு தொழிலையேனும், மாயா போகத்தை அனுபவிக்கச் செய்யும் பிறப்புக்குக் காரணமாகிய வெய்ய தொழிலையேனும் சிறிதும் பொருந்தார். எல்லாவற்றையும் அறியும் தன்மையுடையவர்களாயினும், ஒரு விஷயத்திலும் பற்றின்மையால், அவர்கள் சிவத்தையன்றி வேறு பொருள்களைச் சிறிதும் காணார்கள்.

ஆமையானது தன் வழியே நடக்குங்கால், ஆரவாரமுள்ள இடத்தில் தன் ஐந்து உறுப்புக்களையும் உள்ளே இழுத்துக் கொண்டு அசைவற்றுக் கிடப்பது போல, சீவன் முத்தர்கள், விஷயங்கள் வந்து தம்மை எதிர்ப்பட்டால், தம் பொறிகளை அடக்கித் தமக்கு உயிராகிய சிவத்திலே அடங்கி நிற்பர்.

சிவத்தை நீங்கி எவ்விடமும் எப்பொருளும் இல்லை; அதுபோல் சிவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை அடைந்த ஞானிகளும் எவ்விடத்தும் உள்ளாராவர்.

உள்ளே அறிவாய் விளங்கும் திருவருளையும் புறம்பே வடிவு கொண்டு வந்த ஆசாரியரையும் ஒரே பொருள் என்று கண்டவர்க்கு—"இது அவன் திருவுரு, இவன் அவன் எனவே" (திருப்பள்ளி எழுச்சி- செய்: 7) கண்டவர்க்கு—ஒன்றை வெறுப்பதோ ஒன்றை விரும்புவதோ இல்லை. வேண்டுதல் வேண்டாமை இலானாகிய சிவனடியைச் சேர்ந்தார்களானபடியால் அவர்களும் விருப்பு வெறுப்பு அற்றவர்களாயே இருப்பர்.

யான் எனது என்னும் செருக்குற்றுச் செய்யப்பட்ட தொழிலுக்குப் பயன் உலக போகங்களாமாறுபோலச், செருக்கற்றுப் பயன் கருதாது செய்யப்படும் இறை பணிக்குப் பயன் மெய்ப் பொருளாகிய சிவாநந்த போகமேயாம்.

குரு திட்சையால் சஞ்சித வினை எரிக்கப்பட்டது; பிராரத்த வினை தேகம் உள்ள வரை அனுபவிக்கப்பட்டு உடல் ஊழாய்க் கழியும்; முத்தர்கள் செய்யும் தொழில்கள் அருட் செயலன்றி அவர்கள் செயலல்ல ஆதலால், அவற்றின் பயன் அவர்களைச் சாராது, ஆகவே ஆகாமியம் ஏறாது. இம்மை, மறுமை அம்மைகளைத் தருதற்குக் காரணமாய வினைகள் அவர்களைத் தாக்காவாகவே, பேரறிவாளராகிய சீவன் முத்தர்க்குப் பரமுத்தி இம்மையில் தேகம் இருக்கையிலேயே உண்டாகும்.

அவர்கள், பெத்தான்மாக்கள் படும் துன்பம் கருதித், தம் கருணையால் மிக இரங்கி அவர் நன்மை பெறுவதையே எண்ணுவார்கள்.

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்துஎன் குடிமுழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

—(திருவாசகம்-பிடித்தபத்து-செய்: 1.)

# தஞ்சாவூர் இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

முதலாம் இராசராசன் தஞ்சாவூரில் இராச ராசேச்சரத்துக்குத் தெற்கிலும் வடக்கிலும் தளிச்சேரிகளைப் புதியனவாக அமைத்தான். அவைகளுக்குத் தெற்குத் தளிச்சேரி தென்சிறகு, ஷை வடசிறகு, வடக்கில் தளிச்சேரி தென்சிறகு, ஷை வடசிறகு, (பெயர் புலப்படாதவாறு கல்வெட்டில் சிதைந்து போன) மற்றொரு தளிச்சேரி, என்னும் பெயர்களை வைத்தான். தெற்குத் தளிச்சேரி தென்சிறகில் 92, ஷை வடசிறகில் 92 ; வடக்கில் தளிச்சேரி தென் சிறகில் 95, ஷை வடசிறகில் 96, மற்றொரு தளிச்சேரியில் 25 ஆக 400 வீடுகளைக் கட்டினான்.

சோழமண்டலத்திலுள்ள அம்பர், அரபுரம், அவனிநாராயணபுரம், ஆமாத்தூர், ஆயிரத்தளி, திருவாரூர், திருவிடைமருதில், உத்தம தானிபுரம், திருவையாறு, கஞ்சாறநகரம், கடம்பூர், திருக்கண்டியூர், கருப்பூர், கற்பக தானிபுரம், காராயில் காவிரிப்பூம் பட்டினம், கிள்ளிகுடி, திருக்கொள்ளம் பூதூர், கொற்றமங்கலம், கோட்டூர், சீகண்டபுரம், செல்லூர், திருச்சோற்றுத்துறை, தலையாலங்காடு, தளிச் சாத்தங்குடி, திருத்தெங்கூர், நயதீரபுரம், நல்லூர் நன்னிலம், நாகப்பட்டினம், நியமம், திருநெய்த்தானம், பந்தணைநல்லூர், பராந்தகபுரம், பல்லவ நாராயணபுரம், திருப்பழனம், பழுவூர், பழையாறை, பாச்சில், பாம்புணி, புதூர், புறையாச்சேரி, மண்ணி நகரம், திருமறைக்காடு, மிறையில், வடவாயில், வயலூர், வீரபுரம், திருவெண்காடு, வேளூர், திருவேதிகுடி, ஜநநாதபுரம் முதலான ஊர்களிலுள்ள தளிச்சரிகளிலிருந்து நானூறு தளிப்பெண்டுகளைக் கொண்டுவந்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடாக மேற்குறித்த நானூறு வீடுகளிலும் குடியேற்றினான். அவர்கள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு வேலி நிலத்தைப் பங்குசெய்து, அப்பங்குவழி ஒவ்வொரு வேலி நிலத்துக்கு வரக்கூடிய நூறுகல நெல்லை இராச கேசரியோடொக்கும் 'ஆடவல்லான்' என்னும் மரக்காலால் அவரவர்களுக்கு அளந்துவிடும்படி ஏற்பாடுகளைச் செய்திருந்தான். இவர்களைக் குடியேற்றினது கோயிற் பணிகளைப் புரிவதற்கேயாம். இந்த நானூறு தளிப்பெண்டுகளில் பெரும்பாலோர் அந்தந்த ஊர்களிலுள்ள திருக்கோயில்களில் தொண்டாற்றி வந்தவர்களே யாவர். இங்ஙனம் குடியேற்றப்பட்டவர்களில் சிலர் அரபுரத்துத் தாழிவிண்ணகரம், தஞ்சாவூர்த் தஞ்சை மாமணிக்கோயில், அம்பர் அவனிநாராயண விண்ணகர், பாம்புணி ஸ்ரீபூதிவிண்ணகர், என்னும் திருமால் திருக்கோயில்களில் பணிகள் புரிந்தோர் ஆவர்.

முதலில் இங்குக் குடியேற்றப்பட்டவர்கள் திருவையாற்று ஓலோகமா தேவீச்சரத்தில் பணிகள் ஆற்றிவந்த நக்கன் சேரமங்கை, நக்கன் இரணமுகராமி, நக்கன் உதாரம், நக்கன்பட்டாலி, நக்கன் எடுத்த பாதம், நக்கன் சோழகுல சுந்தரி, நக்கன் ஏகவீரி என்னும் எழுவர் ஆவர். நக்கன் என்பது தளிச்சேரிப் பெண்டுகளுக்கு அவர்கள் திறமை குறித்து இராசராசனால் கொடுக்கப்பெற்ற சிறப்புப் பெயராகும். இங்ஙனமே ஏனைய முந்நூற்றுத் தொண்ணூற்று மூவர் பெயர்களின் முன்பும் தனித்தனி இந்த நக்கன் என்னும் சிறப்புப்பெயர் கொடுக்கப் பெற்றுள்ளது.

முதலாம் இராசராசன் திருவையாற்று ஓலோகமாதேவீச்சரத்துத் தளிச்சேரிப் பெண்டுகளில் சிலரைக் கொண்டுபோய் முதன்முதல் குடியேற்றியதற்குக் காரணம் அந்த ஓலோகமாதேவீச்சரம், அவனது முதற் பெருந்தேவியாராகிய ஓலோகமாதேவியாரால் கட்டப்பெற்றது. ஆதலால் அதிலிருந்து கொண்டுபோய்க் குடியேற்றுவது அத்தேவியார்க்கு உவப்பை உண்டாக்கும் என்னும் எண்ணம் பற்றியதாகலாம் ; அல்லது திருவையாற்றுத் திருப்பதிகத்தில், திருஞான

சம்பந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி யுள்ள,

"வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர
மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி முகில்பார்க்கும்
திருவையாறே"

என்னும் தேவார அடிகள் சிறந்த சிவபத்திச் செல்வனாகிய அவன் திருவுள்ளத்தில் பதிந்திருந்ததன் விளைவாய்த் திருவையாற்றுத் தளிச்சேரிப் பெண்டுகள் பண்டுதொட்டே நடனக்கலையில் தேர்ச்சிபெற்றவர்கள் என்று அவன் கருதியது ஆகலாம்.

இங்ஙனம் முதல் இராசராசன் தளிச்சேரிப் பெண்டுகளைக் குடியேற்றி அவர்களுக்கு நிவந்தம் அளித்ததோடு அமையாது, அவர்களின் தொண்டுகளைக் கண்காணிக்க ஒருவரையும் நியமித்து அவர்க்கும் நிவந்தம் அளித்துள்ளான். இச்செய்தி "தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் காந்தர்விகளுக்கும் நாயகஞ் செய்யத் தஞ்சாவூர் பரஞ்சோதிக்குப் பங்கு இரண்டு" என்னும் கல்வெட்டுப் பகுதி அறிவிக்கின்றது.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு அளித்த நிவந்தங்களை உணர்த்தும் கல்வெட்டின் முற்பகுதியால், சோழமண்டலத்து ஊர்களில், வழக்கில் அதிகமாகப் பயிலப்பெறாத சில கோயில்கள் புலப்படுகின்றன. அவைகள் அம்பரில் முதுபகவர்தளி, அரபுரத்தில் நிகளங்க ஈஸ்வரம், ஆயிரத்தளியில் மல்லீஸ்வரம், கடம்பூரில் இட்டாச்சி ஈஸ்வரம், நந்தீஸ்வரம், கோட்டூரில் குணவதி ஈஸ்வரம், பஞ்சவன்மாதேவீஸ்வரம், தஞ்சாவூரில் எரியூர் நாட்டுத்தளி, ஐயபீமதளி, பிரமகுட்டம், திருவாரூரில் அருமொழி ஈஸ்வரம், உலகீஸ்வரம், பிரஹமீஸ்வரம், மட்டைதென்தளி, நியமத்தில் அரிகுலகேஸரி ஈஸ்வரம், சந்திரமல்லி ஈஸ்வரம், நிருபகேசரி ஈஸ்வரம், நன்னிலத்தில் அமலீஸ்வரம், திருமேற்றளி, நாகப்பட்டினத்தில் நடுவில்தளி, பழூவூரில் பகைவிடை ஈஸ்வரம், பழையாறையில் அரையெருமான்தளி, சங்கீஸ்வரம், பாச்சிலில் திருமேற்றளி, திருவமலீஸ்வரம், பாம்புணியில் திருப்பாதாள ஈஸ்வரம், விடையபுரத்தில் திருப்புகழீஸ்வரம், முதலான கோயில்களாம்.

## சரித்திரத்துக்குப் பயன்படும் சில செய்திகள்

1. திருக்காரோணத்து நக்கன் ராசகேசரிக்குப் பங்கு ஒன்றும் (Para 10)

2. முப்பத்தேழாம் வீடு தஞ்சாவூர் எரியூர் நாட்டுத்தளி நக்கன் மாதேவடிகளுக்குப் பங்கு ஒன்றும் (Para 131)

3. இருபத்தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் குந்தவைக்குப் பங்கு ஒன்றும் (Para 215)

ஐம்பதாம் வீடு இத்தளி நக்கன் அருமொழிக்குப் பங்கு ஒன்றும்" (Para 236)

என்னும் தொடர்களில் இராசகேசரி, மாதேவடிகள், குந்தவை, அருமொழி என்னும் பெயர்கள் வந்துள்ளன. இவைகளில் இராசகேசரி என்பது முதலாம் இராசராசனுடைய பட்டப்பெயர். மாதேவடிகள் என்பது முதலாம் இராசராச சோழனின் மகளாரின் பெயர். குந்தவை என்பது இராசராசனுடைய திருத்தமக்கையாரின் பெயர். அருமொழி என்பது முதலாம் இராசராச சோழனுடைய மற்றொரு மகளாரின் பெயர்; "ராஜராஜ தேவர் திருமகளார் அருமொழி சந்திரமல்லியாரான கங்கமாதேவியார்" என்னும் திருவையாற்று ஓலோகமாதேவீச்சரத்துக் கல்வெட்டுப் பகுதியே இதற்குச் சான்றாகும்.

### குறிப்பு

இங்குக் குறித்த நான்கு பெயர்களில் இராசகேசரி என்பது முதலாம் இராசராசனுக்கு முன் இராசகேசரி என்னும் பட்டம் தரித்து ஆண்ட அரசர்களில் ஒருவர்பட்டப் பெயராகவும், மாதேவடிகள் என்பது முதற்பராந்தக சோழனது முதல் மகனாகிய இராஜாதித்தனின் தேவியாரின் பெயராகிய மாதேவடிகள் என்னும் பெயராகவாவது (அல்லது) செம்பியன் மாதேவியார்க்குரிய மாதேவடிகள் என்னும் பெயராகவாவது இருக்கலாம்.

இங்ஙனம் அரச குடும்பத்தாரின் திருப்பெயர்களைத் தளிச்சேரிப் பெண்டுகளுக்கு வைத்து வழங்கப்பெற்றமையால் இத்தளிச்சேரிப் பெண்டுகளின் பெற்றோர்கள் அரச குடும்பத்தில் அளவிறந்த இராச பக்தி உடையவர்களாய்த் திகழ்ந்திருந்தனர் என்று கொள்ளலாம். (தொடரும்)

# சேக்கிழார் சொல்லாதவை

[திரு. கி. வா. ஜகந்நாதன், M. A., சென்னை.]

திருஞான சம்பந்தப் பெருமான் புராணத்தை மிக விரிவாகச் சேக்கிழார் பாடியிருக்கிறார். பெரிய புராணத்தில் அதுதான் மிகப் பெரிய வரலாறு. அதன் அளவைக் கருதி, "பிள்ளைபாதி, புராணம்பாதி" என்ற பழமொழி வழங்கி வருகிறது. சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத் தொகையாகிய வித்திலிருந்து நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி என்ற முளை தோன்றியது. அதிலிருந்து திருத்தொண்டர் புராணமாகிய பெரிய மரம் வளர்ந்து படர்ந்தது.

திருஞான சம்பந்தர் வரலாற்றைத் தெரிந்து கொள்ள நம்பியாண்டார் நம்பிகள் அப் பெருமானைப்பற்றிப் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை, என்னும் நூல்களும் சேக்கிழாருக்குத் துணை செய்திருக்கவேண்டும். அங்கங்கே வழங்கிய பல செய்திகளை விசாரித்து அறிந்தும் இந்த வரலாற்றை உருவாக்கியிருக்கிறார் சேக்கிழார்.

நம்பியாண்டார் நம்பி தம் நூல்களில் திருஞான சம்பந்தர் செய்த அற்புதச் செயல்கள் பலவற்றைக் குறிப்பிடுகிறார். சேக்கிழார் அவற்றிற் சிலவற்றைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. அதற்கு இன்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருகால் நூல்களில் கண்டவற்றை அங்கங்கே வழங்கும் செய்திகளோடு ஒப்புநோக்கி, நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் இருந்தவற்றை மட்டும் சொல்லியிருக்கலாம். எவ்வாறேனும், நம்பியாண்டார் நம்பிகளின் திருவாக்கிலிருந்து ஞானசம்பந்தரைப் பற்றித் தெரிந்து கொள்ளும் செய்திகளிற் சில பெரிய புராணத்தில் காணப்படவில்லை. அவற்றைச் சிறிது இங்கே ஆராய்வோம்,



நடன சம்பந்தர்

## முருகன் திருவவதாரம் :

திருஞான சம்பந்தர் முருகனுடைய திருவவதாரம் என்பது ஒருசாரார் கொள்கை. சேக்கிழார் இதை வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஞானசம்பந்தர் அழுத போது, "தம்மேலைச் சார்புணர்ந்தோ... அம்மே அப்பா என்றென் றழைத்தருளி அழுதருள"[1] என்று அதனைக் குறிப்பிக்கிறார். அம்மே, அப்பா என்று அழைப்பதற்குரிய சார்பு சம்பந்தப் பெருமானுக்கு இருந்தது என்பது குறிப்பாகப் புலனாகிறது. இறைவனுக்கும் அவருக்கும் தந்தைக்கும் மகனுக்கும் உள்ள

1. திருஞானசம்பந்தர் புராணம், 63.

உறவே பழைய சார்பு என்று ஒருவாறு உய்த்துணர்ந்தாலும், முருகனே அப்பெருமான் என்று தெளிவாகக் கொள்ள இயலவில்லை. பல இடங்களிலும் பிள்ளையார் என்று சொல்கிறார். சில இடங்களில், "வானவர் நாயகர் மகனார்",[1] "சேவில் திகழ்ந்தவர் மைந்தர்"[2] என்று சிவபெருமானுடைய திருமகனார் என்று சுட்டியும் கூறுகிறார். அம்மை தந்த ஞானப்பாலையுண்டமையால் மகன் முறையைப் பெற்றாராதலின் இவ்வாறு கூறினார் என்றும் கொள்ளலாம். ஆனால் அம்மைக்கு மகன் என்று எங்கும் கூறவில்லை.

சேக்கிழார் காலத்தில் அவர் யாருக்கு அமைச்சராக இருந்தாரோ, அந்த இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு ஆசிரியராக விளங்கியவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர். அவர் தாம் பாடிய தக்கயாகப் பரணியில் தெளிவாக ஞானசம்பந்தப் பெருமானை முருகன் என்றே கூறுகிறார்.

"வருகதை தெய்வ மகள் என்
மருமகள் வள்ளி கணவன்
மனமகிழ் பிள்ளை முருகன்
மதுரையில் வெல்லும் இனிய
தொருகதை சொல்லு"[3]

என்று தேவி கலைமகளை நோக்கிக் கூறியதாகவும், அவளுடைய கட்டளையின் படியே கலைமகள்,

"எழுமலை கொல்லும் அசனி
இளமயில் வள்ளி கணவன்
இறைமலை வில்லி புதல்வன்
இகல்மகள் ஐயை களிறு
கழுமலம் உய்ய விரவு
கலியுக எல்லை பொருத
கதைகளில் உள்ள தமணர்
கழுமிசை—கொள்வதிதுவே"[4]

என்று கதையைத் தொடங்கியதாகவும் அப்புலவர் அமைக்கிறார். அங்கே தெளிவாக வள்ளி கணவனே கழுமலத்தில் தோன்றி மதுரையில் சமணர்களை வென்றான் என்ற செய்தி இருக்கிறது.

பிற்காலத்தில் வந்த அருணகிரியார் முதலிய பெருமக்கள் சம்பந்தப் பெருமான் முருகனுடைய திருவவதாரம் என்பதைப் பலபாடல்களில் சொல்லியிருக்கிறார்கள்.

சேக்கிழார் திருஞான சம்பந்தரை முருகன் திரு அவதாரம் என்று தெள்ளத் தெளியச் சொல்லவில்லை. அவர்காலத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் தெளிவாகச் சொல்லியிருத்தலால், அப்படி ஒரு கருத்து அவருக்கும் முற்காலத்தில் வழக்கில் இருந்தது என்று கொள்ளலாம். நம்பியாண்டார் நம்பி திருவாக்கில் இந்தக் கருத்துக்கு அரண் செய்யும் குறிப்புகள் சில உள்ளன. அவர் இரண்டு இடங்களில்,

"மாழை நோக்கி மலைமகள் புதல்வன்"[5]
"மலைமகள் புதல்வி கலைபயில் நாவ"[6]

என்கிறார். சேக்கிழார் சிவபிரான் மகனாராகக் கூறினாரேயன்றி உமாதேவியின் புதல்வராகக் கூறவில்லை. திருமுருகாற்றுப்படையில் முருகனை,

"மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே"

என்று விரிக்கும் தொடர்களோடு நம்பியாண்டார் நம்பி சொல்பவற்றை வைத்து ஒப்பு நோக்கினால், அவரும் முருகன் என்ற கருத்தை உளம் கொண்டே அப்படிப் பாடியுள்ளார் என்று தோன்றுகிறது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில் ஒரு பாடல் வருகிறது. அதில்,

"மயில் ஏந்தியவள்ளல் தன்னை அளிப்ப
மதிபுணர்ந்த
எயில் ஏந் தியசண்பை நாதன்"[7]

என்று ஞானசம்பந்தரைச் சொல்கிறார். சண்பைநாதன் என்பது சீகாழிக்குத் தலைவன் என்ற பொருளை உடையது, அதற்கு முன்னுள்ள தொடர்கள் சண்பைக்கு அடை. மதிபுணர்ந்த எயில் ஏந்திய சண்பை-சந்திரனைத் தொட்டுவளர்ந்த மதிலை ஏந்திய சீகாழி. இந்த அடைக்கு முன்பு, 'மயில் ஏந்திய வள்ளல் தன்னை அளிப்ப' என்ற தொடர்கள் வருகின்றன. அவற்றில் 'தன்னை அளிப்ப' என்பவற்றையும் மதிலுக்கு அடையாக்குவது தான் பொருத்தமாக இருக்கிறது. 'தன்னைப் பாதுகாக்கும் பொருட்டு மதிலை

1. திருஞான சம்பந்தர் 314. 2. ஷை 493. 3. தக்கயாகப்பரணி, 169. 4. ஷை. 170.
5. ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை, 1. 6. ஷை 10. 7. பாடல், 64.

ஏந்திய சண்பை' என்று இயையும். மயிலேந்திய வள்ளல்' என்னும் தொடர் தனியே நிற்கிறது. அது மதிலுக்கு அடையாக இருக்க நியாயம் இல்லை. அப்படியானால் அதற்கு என்ன பொருள்?

'மயில் ஏந்திய வள்ளல், சண்பை நாதன்' என்ற இரண்டு தொடர்களும் சம்பந்தப் பெருமானைக் குறிப்பதாகக் கொள்வதையன்றி வேறு வழியில்லை. மயிலாகிய கொடியை ஏந்தியவன் முருகன்.

"பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ"[1]

என்பது திருமுருகாற்றுப்படை.

முருகனாகிய சம்பந்தப் பெருமான் என்றே இந்தத் தொடர்களுக்குப் பொருள் கொள்ள வேண்டும், இந்தத்தொடர் சம்பந்தப் பெருமான் முருகன் திருவவதாரம் என்பதைத் தெளிவாக விளக்குகிறது.

நம்பியாண்டார் நம்பி பின்னும் திருக்கலம்பகத்தில் சம்பந்தரை,

"புகலியர் அதிபன், நதிதரு வரதன்
அணிதமிழ் விரகன்"[2]

என்று போற்றுகிறார். புகலியர் அதிபன், தமிழ் விரகன் என்பன சம்பந்தருக்குரிய திருநாமங்கள். நதிதருவரதன் என்பதும் அவரையே குறிக்க வேண்டும். அந்தத் தொடருக்குப் பொருள் என்ன? அதற்கு இருவகையில் பொருள் கொள்ளலாம். நதியைத் தந்த வரதன், நதியால் தரப் பெற்ற வரதன் என்று இருபொருள் கிடைக்கும். சம்பந்தர் நதியைத் தந்ததாக வரலாறு இல்லை; நதியால் தரப்பெற்றதாகவும் இல்லை. ஆனால் முருகன் கங்கா நதியால் தரப்பெற்றவன். காங்கேயன் என்னும் பெயருடையவன். சம்பந்தர் முருகன் திருவவதாரமாதலின் அவரையும் முருகனாக வைத்து, 'நதியால் தரப் பெற்ற வரதன்' என்ற பொருளில் 'நதிதரு வரதன்' என்று சொன்னார் என்று கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது.

இவ்வாறு குறிப்பாக இரண்டிடங்களிலும் வெளிப்படையாக இரண்டிடங்களிலும் சம்பந்தர் முருகனுடைய திரு அவதாரம் என்ற கருத்தை நம்பியாண்டார் நம்பி சொல்லியிருக்கிறார். இதைச் சேக்கிழார் சொல்லவில்லை.

## பாடிய பதிகங்கள்:

திருஞான சம்பந்தர் அந்த அந்தத் தலத்தில் பதிகம் பாடினார் என்ற செய்தியைச் சேக்கிழார் சொல்லுகிறார். ஆனால் எத்தனை பதிகங்கள் பாடினார் என்று சொல்ல வில்லை: அந்தத் தொகையை நம்பியாண்டார் நம்பி சொல்லியிருக்கிறார்.

"நகரம் கெடப்பண்டு திண்டேர் மிசைநின்று
நான்மறைகள்
பகர்அம் கழலவ னைப்பதி னாரு
யிரம்பதிகம்
மகரம் கிளர்கடல் வையம் துயர்கெட
வாய்மொழிந்த
நிகரங் கிலிகலிக் காழிப் பிரான் என்பர்
நீள் நிலத்தே"[3]

அப்படியே பின்னும் இரண்டு இடங்களில்,

"பன்னு தமிழ்ப்பதினா றுயிரம் நற்பனுவல்"[4]
"பச்சைப் பதிகத் துடன்பதினா றுயிரம்பா
வித்துப் பொருளை விளக்க வல பெருமான்"[5]

என்று பாடுகிறார்.

## பாலை நெய்தல் ஆக்கியது:

திருஞான சம்பந்தருடைய அன்னையார் பிறந்த ஊர் திருநனிபள்ளி. சம்பந்தப் பெருமான் ஞானப் பாலுண்டு தமிழ்மறை பாடுவதை உணர்ந்த அவ்வூர் அந்தணர்கள் அப் பெருமானைத் தம் ஊர்க்கு அழைத்துச் சென்று திருக்கோயிலுக்கும் கூட்டிப் போய்ப் பதிகம் பாடச் செய்தனர். அந்த ஊரில் பாலை நிலத்தை வயலாக்கிப் பின் நெய்தல் நிலமாக்கினார் என்று ஒரு செய்தியை நம்பியாண்டார் நம்பி சொல்கிறார்.

"நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃதே
போதின்மலிவயல் ஆக்கிய கோன்"[6]
"கள்ளம் பொழில் நனிபள்ளித் தடம் கடம்
ஆக்கி அஃதே
வெள்ளம் பணிநெய்தல் ஆக்கிய வித்தகன்"[7]
"ஞாலத்தினர் அறிய மன்னும்நனி பள்ளியது
பாலை தனைநெய்தல் ஆக்கியும்"[8]
"பாலையும் நெய்தலும் பாடவலான்"[9]

என்பனவற்றைக் காண்க. திருக்கடவூர் உய்ய வந்த நாயனார் தாம் பாடிய திருக்களிற்றுப்

1. அடி, 122. 2. பாடல், 23. 3. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 15. 4. திருவுலாமாலை, 62
5. திருத்தொகை, 42-3. 6. திருவந்தாதி, 17. 7. திருச்சண்பை விருத்தம், 4.
8. திருவுலாமாலை, 75. 9. திருத்தொகை, 17.

படியாரில் இரண்டிடங்களில் இந்த நிகழ்ச்சியைப் பாடுகிறார்;

"பாலை நெய்தல் பாடியதும்" (12)
"பாலை நெய்தல்...தென்புகலி வேந்தன்
[செயல்" (69)

இந்தச் செய்தியைச் சேக்கிழார் சொல்லவில்லை.

## புலையனைப் பூசுரன் ஆக்கியது:

ஓரிடத்தில் நம்பியாண்டார் நம்பி, "புலையடித் தொண்டனைப் பூசுரன் ஆக்கி"[1] என்று பாடுகிறார். தமக்கு அடித்தொண்டு புரிந்த புலைச்சாதியிற் பிறந்த தொண்டன் ஒருவனை அந்தணனாக்கினார் சம்பந்தர் என்று இதனால் தெரிய வருகிறது. இந்த வரலாறும் சேக்கிழார் திருவாக்கில் காணப்படவில்லை.

## நடனம் ஆடியது:

திருஞான சம்பந்தர் அம்மைக்காக நடனம் செய்து சிவபெருமான் அருளைப்பெற்றார் என்ற வரலாறு ஒன்றை நம்பி சொல்கிறார்.

"பொருகயற் கண், மலைமடப் பாவைக்கு
மாநடம் ஆடும் மணியை"[2]
"சிறுகூத் தியற்றிச் சிவன் அருள் பெற்ற
நற்றமிழ் விரகன்"[3]

என்பனவற்றில் அச்செய்தி வருகின்றது. சேக்கிழார், இறைவனைப் பணிந்து அன்பு முதிர்ச்சியால் உருகி ஆடிப்பாடினர் சம்பந்தர் என்று சில இடங்களில் சொல்கிறாரேயன்றி, நடனமாடியதாகச் சொல்லவில்லை. திருஞான சம்பந்தப் பெருமானுடைய விக்கிரகங்கள் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் உள்ளன. அப்பெருமான் கண்ணனைப் போல நடனமாடும் கோலத்தில் அமைந்த விக்கிரகங்களும் உண்டு. அவற்றைப் பார்க்கும் போது அது ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கும் கோலம் என்றே தோன்றுகிறது. அது எப்போது நிகழ்ந்தது என்று தெரியவில்லை.

## மங்கையர்க் கரசியின் அன்பு:

சம்பந்தப் பெருமான் அம்மையின் ஞானப்பாலை உண்டார் என்ற செய்தியைக் கேட்ட பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் உள்ளத்தில் அன்பு மீதூர, அதனால் அவருடைய மார்பில் பால் சுரந்தது என்று ஒரு வரலாறு வழங்குகிறது. இதனைத் திருக்களிற்றுப் படியார்,

"சுரந்த திருமுலைக்கே துய்யதிரு ஞானம்
சுரந்துண்டார் பிள்ளைஎனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி
[தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு" (54)

என்று வியந்து பாராட்டுகிறது.

பிற்காலத்தில் வந்த சிவப்பிரகாச சுவாமிகளும் நால்வர் நான் மணி மாலையில் இந்த வரலாற்றைக் குறிப்பிடுகிறார்.

"இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்—
[நிலையுணர்ந்து
கொங்கை சுரந்தஅருட் கோமகளோ
[சம்பந்தா
இங்குயர்ந்தார் யார்சொல் எனக்கு"

என்பது அவர் பாட்டு.

இந்த அன்பு நிகழ்ச்சியைப் பெரிய புராணம் சொல்லவில்லை. சேக்கிழார் இவற்றைப் பாடாததற்குக் காரணம் என்ன? இவை நிகழ்ந்த இடங்களிற் சென்று, விசாரித்து, ஐயமறத் தெரிந்தவற்றை மாத்திரம் சொன்னார் போலும்!

பிறநாயன்மார் வரலாறுகளிலும் இப்படி அவர் சொல்லாமல் விட்ட சில நிகழ்ச்சிகள் உண்டு.

1. *திருவந்தாதி*, 37. 2. ௸ 37. 3. *மும்மணிக்கோவை*, 191.

காஞ்சிபுரம் வட்டம்: *திருமாகறலீசுவரர் கோயிலில் இராசகோபுரத் திருப்பணித் தொடக்க விழா நடைபெற்றது. அறநிலைய அமைச்சர் கனம் திரு.* M. பக்தவத்சலம் பி. ஏ., பி.எல்., *அவர்கள் திருப்பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் அறநிலைய ஆணையர்* திரு. M. S. *சாரங்கபாணி முதலியார், பி. ஏ., பி. எல், அவர்கள் தலைமையில் வித்துவான் அருட்டிரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் சொற்பொழிவாற்றப் பன்னிரு திருமுறை அமைப்புவிழா நிகழ்ந்தது.* திருவாளர்கள் கோ. *சாரங்கபாணி செட்டியார்,* ஆ. *விநாயக முதலியார், தருமபுரம். பி. சுவாமிநாதன் ஆகியோர் திருமுறைப் பாராயணம் செய்தனர். (13—12—62)*

# காஞ்சியில் உள்ள கல்வெட்டுக்கள்

[டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., Ph.D]
சென்னைப் பல்கலைக் கழகம்.

## காஞ்சியின் பழைமை

காஞ்சி மாநகரில் கௌதம புத்தர் சிறிது காலம் தங்கியிருந்தார் என்று புத்த சாதகக் கதை கூறுகிறது. காஞ்சியைச் சூழ்ந்த தொண்டை நாட்டைக் குறும்பர் என்பவர்கள், இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து ஆண்டு வந்தனர் என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது.

தொண்டை நாட்டு வடபகுதியைத் திரையன் என்பவன் ஆண்டுவந்தான். காஞ்சியைத் தலைநகராய்க் கொண்ட தென்பகுதியை இளந்திரையன் என்பவன் ஆண்டுவந்தான் என்று சங்க நூல்கள் கூறுகின்றன. கரிகாற்சோழன் தொண்டை நாட்டைக் கைப்பற்றினான், காடு கெடுத்து நாடாக்கினான், பல்லாயிரம் வேளாளர்களை அந்நாட்டிற் குடியேற்றி வேளாண்மையைப் பெருக்கினான் என்று பிற்காலத் தமிழ் நூல்கள் பேசுகின்றன. கரிகாலனது சிலை காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் இருக்கின்றது. கரிகாலனுக்குப் பின்பு நெடுமுடிக் கிள்ளியின் பிரதிநிதியாக இளங்கிள்ளி என்பவன் காஞ்சி நாட்டை ஆண்டுவந்தான் என்று மணிமேகலை கூறுகின்றது. இவை அனைத்தையும் நோக்க, ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே காஞ்சி மாநகரம் சிறந்து விளங்கியது என்பதை அறியலாம்.

தொண்டை நாடு கி. பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையில் பல்லவர் ஆட்சியில் இருந்தது; பின்பு 13-ஆம் நூற்றாண்டு வரையில் சோழர் ஆட்சியில் இருந்தது; பின்னர் விசயநகர ஆட்சிக்கு உட்பட்டது; அதன் பிறகு கர்நாடக நவாபுகள் ஆட்சிக்கு உட்பட்டது. எனவே, பல்லவர் காலம் முதல் விசயநகர ஆட்சி முடிய இருந்த பல நூற்றாண்டுகளில் தோன்றிய கல்வெட்டுக்கள் பல காஞ்சியில் மிகுதியாகும்.

## காஞ்சியில் கோவில்கள்

அழியத்தக்க பொருள்களாக உள்ள மண், மரம், செங்கல் இவற்றைக்கொண்டு சங்க காலக் கோவில்கள் கட்டப்பட்டன. பல்லவ மன்னர் முதலில் மலைச்சரிவுகளைக் குடைந்து கோவில்களை அமைத்தனர்; பின்பு ஒற்றைக் கற்களையே கோவில்களாக மாற்றினர். அவையே மாமல்லபுரத்தில் உள்ள பஞ்சபாண்டவர் இரதங்கள்; பின்னர்க் கற்களைச் செங்கற்களைப் போல வெட்டி, அவற்றை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோவில்களை அமைத்தனர்; காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோவில் வைகுந்தப் பெருமாள் கோவில் ஆகியவை இவ்வகையைச் சார்ந்தவை.

பல்லவர் கோவில்கள் அமைப்பதில் ஆர்வம் கொண்டவர்; சிற்பங்கள் அமைப்பதில் திறமை மிக்கவர். அவர்கள் கட்டடக் கலையிலும் சிற்பம் ஓவியம் இசை நடனம் நாடகம் ஆகிய நுண்கலைகளிலும் பெருவிருப்பம் கொண்டவர்; ஆதலால் காஞ்சியில் பல கோவில்கள் எழுந்தன. அவர்களுக்குப் பின்பு நாடாண்ட சோழப் பேரரசரும் கலையார்வமும் சமயப் பற்றும் மிக்கவர். ஆதலால் அவர்கள் காலத்தில் காஞ்சிபுரத்துக் கோவில்கள் மிக்க சிறப்படைந்தன. நாம் இந்த உண்மைகளை எவ்வாறு அறிகின்றோம்? காஞ்சியிலுள்ள ஒவ்வொரு கோவில் கல்வெட்டுக்களும் இந்த உண்மையை அறிவிக்கின்றன.



ஏகாம்பரநாதர் கோயில்

### கல்வெட்டுள்ள கோவில்கள்

காஞ்சியில் கல்வெட்டுள்ள கோவில்கள் 23 ஆகும்.

| கோவிலின் பெயர் | கல்வெட்டுக்கள் |
|---|---|
| கயிலாசநாதர் கோவில் | 38 |
| அநேகதங் காபதம் கோவில் | 3 |
| ஏகாம்பரநாதர் கோவில் | 23 |
| காமாட்சி அம்மன் கோவில் | 2 |
| உலகளந்த பெருமாள் கோவில் | 15 |
| முக்தீசுவரர் கோவில் | 3 |
| பாண்டவப் பெருமாள் கோவில் | 3 |
| சொக்கீசுவரர் கோவில் | 2 |
| ஜ்வரஹரேசுவர் கோவில் | 3 |
| புண்ணிய கோட்டீசுவரர் கோவில் | 5 |
| அஷ்டபுஜம் பெருமாள் கோவில் | 5 |
| விளக்கொளிப் பெருமாள் கோவில் | 3 |
| அழகிய சிங்கப்பெருமாள் கோவில் | 1 |
| பணாமணீசுவரமுடையார் கோவில் | 3 |
| யதோத்காரி கோவில் | 14 |
| காரணீசுவரர் கோவில் | 2 |
| மகாகாளீசுவரர் கோவில் | 1 |
| வீரட்டானேசுவரர் கோவில் | 6 |
| கச்சீசுவரர் கோவில் | 24 |
| சர்வதீர்த்தேசுவரர் கோவில் | 1 |
| சோமேசுவரர் கோவில் | 1 |
| திருமேற்றளிக் கோயில் | 5 |
| வரதராசப்பெருமாள் கோவில் | 357 |

இவ்விருபத்து மூன்று கோவில்களிலும் படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுக்களின் மொத்த எண்ணிக்கை 523.

### கல்வெட்டுச் செய்திகள் சில

ஏகாம்பரநாதர் கோவில், கயிலாசநாதர் கோவில், வரதராசப் பெருமாள் கோவில் கல்வெட்டுக்களைப் பற்றித் தனிக் கட்டுரைகள் எழுதப்படல் வேண்டும். இங்குப் பொதுவாகச் சில கல்வெட்டுச் செய்திகளைக் காணலாம்:

காஞ்சிமா நகரில் சோழப் பேரரசர் காலத்தில் இருந்த தெருக்களின் பெயர்கள் சில கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு: அருண்மொழி தேவர் பெருந்தெரு, இராசராசப் பெருந்தெரு, இராஜாசிரையப் பெருந்தெரு, நிகரிலி சோழப் பெருந்தெரு, கண்டகோபாலப் பெருந்தெரு, இரவிகுல மாணிக்கப் பெருந்தெரு, கூறைவாணிகப் பெருந்தெரு என்பன.

முதலாம் இராசராச சோழன் சித்தூர் மாவட்டத்தையும் நெல்லூர் மாவட்டத்தையும் வென்று கைக்கொண்டு, தொள்ளாயிரம் ஆடுகளைக் கச்சாலை ஈசுவரர்க்குப் பத்து நந்தா விளக்குகள் எரிக்க வழங்கினான். முதற் குலோத்துங்க சோழன் புஷ்ய நட்சத்திரத்தில் பிறந்தவன். அவனது கோப்பெருந் தேவி சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவள். இவ்விருவர் தம் பிறந்த நாளை ஆண்டுதோறும் கொண்டாட உலகளந்த பெருமாள் கோயிலுக்கு முதற் குலோத்துங்கன் ஒரு சிற்றூரைத் தானமாக விட்டான்.

முதற் குலோத்துங்கன் மிகச்சிறந்த சிவ பக்தன்; தில்லைக் கூத்தப் பெருமானைத் தன் குல தெய்வமாகக் கொண்டவன்; ஆயினும் வைணவ சமயத்திடமும் பற்று மிகுந்தவன். அவன் முதலில் சில நிலங்களை உலகளந்த பெருமாள் கோவிலுக்கு விட்டு வைத்தான். காலப் போக்கில் அந்த நிலங்கள் நெசவாளர் கைக்கு மாறிவிட்டன. அவர்கள் அந்த நிலங்களை உழுது அறுவடையில் ஒரு பங்கு நெல்லைக் கோவிலுக்கு அளக்கவில்லை. முதற் குலோத்துங்கன் தக்கோலம் கோவிலில் தங்கி இருந்தபோது அவன் மனைவிமார் இருவர், மேலே குறிக்கப்பெற்ற உலகளந்த பெருமாள் கோவில் நிலங்களைப் பற்றித் தம் கணவனிடம் முறையிட்டனர். மன்னர் பெருமான் நெசவாளர்களிடமிருந்து நிலங்களைக் கைப்பற்றி உழவரிடம் ஒப்புவித்தான்.

கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முஸ்லிம்களின் பிடியிலிருந்து தென்னாட்டை மீட்கக் கம்பண வுடையார் காஞ்சிபுரத்தில் தம் மனைவியுடன் சிறிது காலம் தங்கி இருந்தார். அம்மனைவியின் பெயர் இராமதேவி அவ்வையார் என்பது. அப்பெருமாட்டி இராம சமுத்திரம், ஏனாதிபுதூர், காரையூர் என்ற மூன்று ஊர்களையும் ஏகாம்பர நாதர் கோவிலுக்கு விளக்கு எரிக்கத் தானம் செய்தார்.

முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் எக்காரணம் கொண்டோ கயிலாச நாதர் கோயில் மூடப்பட்டது; அதற்குரிய நிலங்கள் விற்கப்பட்டன; கோவில் திருவிருப்பு, திருமடைவிளாகம் முதலியன அனைய பதங்காவுடையார் கோவிலுக்குத் தரப்பட்டன. இங்ஙனம் சிறுமையுற்று மூடப்பட்ட கோவில் "சக ஆண்டு 1286 ஆடி முதல் திறக்கப்பட்டு

விழா நடப்பதாக. இதற்கு முருங்கையூர் சர்வ மானியமாகட்டும்", என்ற கம்பண வுடையார் கல்வெட்டுக் காணத்தக்கது. இக் கல்வெட்டால், முதற் குலோத்துங்கன் காலத்தில் (கி. பி. 1070—1120) மூடப்பட்ட கோவில் கம்பண வுடையார் காலத்திற்றான் (கி. பி. 1364) திறக்கப்பட்டதென்பது அறியக் கிடக்கிறது.

கிருஷ்ண தேவராயர் கலிங்க வெற்றிக்குப் பின்பு காஞ்சிபுரத்திற்கு வந்தார்; ஏகாம்பர நாதரையும், வரதராசப் பெருமாளையும் வழிபட்டார்; தம் தந்தை நரசா நாய்க்கர், தாயார் நாலா தேவியார் இவர்கள் நலத்துக்கும் தமது நலத்துக்குமாக ஆயிரம் வராகன் செலவில் வரதசராசப் பெருமாளின் புண்ணியகோட்டி விமானத்தைப் பொன்மய மாக்கினர்; ஏகாம்பர நாதர் தெப்ப விழாவிற்காக இரண்டு கிராமங்களை விட்டார்; அக்கோவிலிலுள்ள விமானத்திற்கு ஒரு தேரும் வரதராசப் பெருமாள் கோவிலிலுள்ள கண்ணனுக்கு ஒரு தேரும் செய்வித்தார்.

அச்சுத ராயர், அவர் மனைவி, மகன் ஆகிய மூவரும் வரதராசப் பெருமாளை வழிபட்டனர். அம் மூவரும் தங்கள் நிறை அளவான முத்துக்களைத் தானம் செய்தனர். அவர் பட்டம் பெற்றதை முன்னிட்டுச் சில கிராமங்களை ஏகாம்பர நாதர் கோவிலுக்கும், வரதராசப் பெருமாள் கோவிலுக்கும் சமமாகப் பங்கிடும்படி ஆணை பிறப்பித்தார். அவரது ஆணையை ஏற்ற அதிகாரி ஏகாம்பர நாதர் கோவிலுக்குப் பல கிராமங்களையும் பெருமாள் கோவிலுக்குச் சில கிராமங்களையும் பிரித்துக் கொடுத்தார். இதனை அறிந்த அச்சுத ராயர் இரண்டு கோவில்களுக்கும் சமமாகவே கிராமங்களைப் பங்கிட்டார் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

பூதத்தாழ்வாரும், பொய்கையாழ்வாரும் கேட்டை நட்சத்திரத்திற் பிறந்தவர்கள். ஆண்டு ஒன்றுக்கு 13 முறை கேட்டை நட்சத்திரம் வரும். அந்த நாட்களில் அவ்விரு ஆழ்வார்களுக்கும் சிறப்புப் பூசை நடத்த ஒருவன் 780 கலம் நெல்லை முதலாக வழங்கினன். அதற்கு ஆண்டுதோறும் 310 கலம் நெல் வட்டியாக வந்தது. கோவில் அதிகாரிகள் அந்த வட்டியைக் கொண்டு கேட்டை நட்சத்திர நாட்களில் அவ்விரு ஆழ்வார்களுக்கும் சிறப்புப் பூசை நிகழ்த்தி வந்தனர்.

முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோவிலை எடுப்பித்தவன்; அவன் அக்கோவிலில் ஆடலும் பாடலும் நிகழ்த்தப் பதியிலார் நானூற்றுவரை அமர்த்தினன்; ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும், ஒரு வேலி நிலமும் வழங்கினன். அவ்வாறு மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் வரதராசப் பெருமாள் கோவிலில் ஆடலும் பாடலும் நிகழ்த்த இருநூற்றுவர் இருந்தனர். அவர்கள் 'திரிபுவன வீரன் பதியிலார்' என்று பெயர் பெற்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடும் நிலமும் தானமாக விடப்பட்டன. திரிபுவன வீரன் என்பது மூன்றாம் குலோத்துங்கனுடைய விருதுப் பெயர்களுள் ஒன்று.

தென்னாட்டில் தங்கச் சுரங்கம் உள்ள இடம் கோலார் என்பது அனைவரும் அறிந்ததே. அது அக்காலத்தில் குவலாலபுரம் எனப்பட்டது. அதனைத் தலைநகராகக் கொண்டு கங்க மரபினர் ஆண்டுவந்தனர். கி. பி. 1214-இல சீயகங்கன் அமராபரணன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் சோழர்க் கடங்கிய சிற்றரசன். அவன் தன் மனைவி மக்களுடன் காஞ்சியை அடைந்தான்; கோவில்களில் வழிபாடு நிகழ்த்தினன். வரதராசப் பெருமாள் கோவிலில் உள்ள ஆதிசேடன் கோவிலைக் கற்றளியாக்கினன். அவ்வரசனது ஆதரவில் வாழ்ந்த 'பவணந்தி' முனிவர் அக்காலத்தில் 'நன்னூல்' என்னும் இலக்கணத்தைச் செய்தார்.

மக்கள் நடமாடும் தெருக்களில் கூத்து முதலியவை நடத்த இக்காலத்தில் அரசாங்க இசைவு பெற வேண்டும் என்பது விதி. இவ்விதி அக்காலத்திலும் இருந்து வந்தது. சம்புவராயர் காலத்தில் காஞ்சியிலும் தொண்டை நாட்டிலும் தெருக்கூத்து ஆட, அரசாங்க உரிமை வழங்கப்பட்டது என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

பெரிய கோவிலை மேற்பார்வையிட ஆணையர் ஒருவர் இருப்பது வழக்கம். பல சிறிய கோவில்களுக்கு ஒரே ஆணையர் இருப்பதும் இன்றைய வழக்கம். இவ் வழக்கம் முற்காலத்திலும் இருந்து வந்தது. கம்பணர் காலத்தில் திருவீரட்டானேசுவரர் கோவில், முத்திகொடுத்த நாயனர் கோவில், காரணீசுவரர் கோவில் ஆகிய மூன்று கோவில்களுக்கும் ஒரே ஆணையர் இருந்தார்.


ஹர்ஷர் கி. பி. 7-ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்த பேரரசராவர். அவர்

காலத்தில் **மயூரகவி** என்ற வடமொழிப் புலவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் சூரிய வணக்கத்துக் குரிய நூறு சுலோகங்களைச் 'சூரிய சதகம்' என்னும் பெயரில் இயற்றினார். அவற்றுள் 6 சுலோகங்கள் கச்சீசுவரர் கோவிலில் ஐஞ்சந்தி தூர்க்கையர்க்கு எதிரிலுள்ள தூணில் பொறிக்கப்பட்டுள்ளன.

அக் காலத்தில் பல பெரிய கோவில்கள் இந் நாட்டில் படைகள் தங்கியிருக்கும் இடங்களாக மாறின. கருநாடகப் போர்களில் ஏகாம்பரநாதர் கோவில் ஒரு கோட்டையாகப் பயன்பட்டது. ஏகாம்பர நாதர் கோவிலில் வெளிச்சுவரின் ஒரு பகுதி கருநாடகப் போர்களில் அழிந்தது. வெள்ளைய ராட்சி ஏற்பட்டவுடன், 1799-இல் இடிந்த அப்பகுதி ஹாக்ஸன் என்ற ஆங்கில அதிகாரியால் பழுது பார்க்கப்பட்டது.

**தேவாரம்** என்பது அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய திருப்பதிகங்களின் தொகுப்பை இன்று குறிக்கிறது. ஆனால் சோழர் காலத்தில் இச்சொல் வழிபாட்டைக் குறித்தது: தக்கோலம் சிவன் கோவிலில் முதற் குலோத்துங்கச் சோழன் **தேவாரம் செய்த** பின்பு அவன் மனைவியர் அவனைக் கண்டு உலகளந்த பெருமாள் கோவிலைப்பற்றி விண்ணப்பித்தனர் என்று கல்வெட்டு ஒன்று கூறுகின்றது. இங்கு இத் தேவாரம் என்ற சொல் வழிபாடு என்னும் பொருளில் வந்துள்ளமை அறியத் தகும். கயிலாச நாதர் கோவிலில் தேவார நாயகம் தங்கி இருந்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது. அவன் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தவன். இராசேந்திர சோழனது அரண்மனையில் வழிபாடு செய்வதற்கு உதவிபுரிந்த பணிமக்களின் தலைவன்-வழிபாட்டுக்குரிய எல்லாவற்றையும் கவனிக்கும் அதிகாரி என்பதே **தேவார நாயகம்** என்பதன் பொருள்.

**அவ்வையார்** என்பவரைக் குறிக்கும் பொழுது, மிக்க வயதான பெண்மணியின் படத்தைப் போடுவது இன்றைய தமிழர் வழக்கம். கன்னட மொழியில் அவ்வை என்னும் சொல் அம்மை என்னும் பொருளில் வழங்கப்படுகிறது; தெலுங்கில் பாட்டி என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. இராமதேவி அவ்வை, குந்தவ்வை என்னும் பெயர்களிலுள்ள 'அவ்வை' என்பது 'அம்மை' என்னும் பொருளைத் தருகிறது என்று ஈண்டு அறியப்படும்.



வைகுந்தப் பெருமாள் கோயில்

ஒரு நந்தா விளக்கு எரிக்க 32 பசுக்களும் ஓர் எருதும் வழங்கப்பட்டன. சாதாரண விளக்கு ஒன்று எரிக்க 96 ஆடுகள் வழங்கப்பட்டன. அரை விளக்கு எரிக்க 48 ஆடுகளும், கால் ($\frac{1}{4}$) விளக்கு எரிக்க 24 ஆடுகளும், அரைக்கால் ($\frac{1}{8}$) விளக்குகள் எரிக்க 12 ஆடுகளும் வழங்கப்பட்டன. பால் பசு, சினைப்பசு, நாகு என 32 பசுக்கள் வழங்குவது வழக்கம். நாகு என்பது கன்று ஈனும் பருவத்தை உடைய பசு.

அக்காலத்தில் காஞ்சிமா நகரில் வழங்கப்பெற்ற முகத்தலளவைக் கருவிகள் 'அருள்மொழி நங்கை நாழி', 'அரியண்ண வல்லான் நாழி', 'திருநாராயணம்' என்பன. இவற்றுள் திருநாராயணம் என்பது நெய் அளக்கப் பயன்பட்டது. பதினாறு சாண்கோல் என்பது நீட்டலளவையின் பெயர். கோவிலுக்குக் கொடுக்கப்படும் பொன்னையும் நகைகளையும் நாணயங்களையும் மாற்று அறிய ஒரு கல் பயன்பட்டது. அதன் பெயர் 'கோவில் கல்'.

கொற்றன்-கொற்றி என்பன பண்டைக் காலப் பெயர்கள். இவை இலக்கண உரைகளில் இடம் பெற்றுள்ளன. 'கொற்றியார்' என்பது கலம்பக வுறுப்புகளுள் ஒன்று. இப்பெயர்கள் அக்கால மக்களுக்கு வழங்கி வந்தவை என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். திரு அத்தியூர்க் கொற்றி, பெற்றி பொன்னம்பலம், பொற்றியார் என்று பெண்பாற் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

இங்ஙனம் கல்வெட்டுக்கள் அக்கால அரசியல் செய்திகள், சமயச் செய்திகள், சமுதாயச் செய்திகள் ஆகிய அனைத்தையும் நமக்கு அறிவிக்கின்றன.

# திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[திருமிகு. சிவஞானத் தம்பிரான் சுவாமிகள், திருவெண்காடு]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஞான நிலை சிவனென்று நீத்தலும் ஏத்தலாவது எக்காலமும் சிவமாகவே இருக்கும் பேரின்ப வாழ்வு, இங்குச் செல்லாமல் மயங்கலாகாது. நிலையறிந்து பொருள் உண்மையை உணர்த்தல் வேண்டும். வழிபாடு என்பது எத்தனையோ பகுதியுடையது. அத்துவித நிலையோ முழுவழிபாடு ஆகும். அதையும் 'ஏத்தல்' 'உன்னல்' முதலிய சொற்களின் ஆட்சி கொண்டு உணர்த்துவதுண்டு. 'துகளறு போதம்' என்னும் தலையான அருள் நூலில், பரைய அதீதத்தின் பின் நிகழும் சுத்தாவத்தைக்கு முன் வரையில் தொல்லைமலம் இருக்கும் எல்லை உணர்த்தப்பட்டமையை அறிய வல்லார்க்கே, இங்கே 'தொல்வினை நில்லாவே' என்றதன் கருத்து விளங்கும். ஏனையோர் அங்கேயும் வினையுண்டோ என்பர். வினை முதலியன எங்கும் ஒரே நிலையும் ஒரே அளவும் ஒரே இயல்பும் உடையன அல்ல. ஞானிகள் வினைக்கும் அஞ்ஞானிகள் வினைக்கும் எல்லாவற்றுறுலும் தார தம்மியம் உண்டு. "சித்தம் சிவம் ஆக்கிச் செய்தனவே தவம் ஆகும் அத்தன்'' அருளால் அன்றி, அத் தாரதம்மியத்தை யுணர்தல் கூடாது.

சிவபிரானை அறிவது எத்தனையோ திறத்தில் அமைந்துள்ளது. அத்திறம் எல்லாவற்றுள்ளும் மெய் கண்டார் உணர்த்திய தொன்றே எளியதும் தெளிவுற்றதும் உண்மையதும் உரியதும் உயிர்க்கு முற்றும் உகந்ததும் ஆகும். அத்திறத்தை அறியத் திருமுறைகள் பெருந்துணை புரிகின்றன. புரிந்தாலும் மெய்கண்ட நூல்களை உணர்ந்து திருமுறைகளை ஓதுவார்க்கு உளதாகும் விளக்கம், இலக்கியம் இலக்கணம் சாத்திரம் பயிலாமல் திருமுறை மட்டும் பாராயணம் புரிவார்க்கு எய்துவதில்லை. சிலர் விபரீத ஞானமும் எய்தி உலகர்க்கும் விளக்கம் புரியத் துணிந்து, சாத்திரங்களையும் தோத்திரங்களையும் கெடுக்கின்றனர். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு:—

"திருந்திய கருணை யாலே
திருவுரு மூன்ற தாகி
யிருந்திடும் ஈசர் நோக்கும்
இயைந்திடும் உயிர்கள் நோக்கும்
தெரிந்த புண்ணியமும் சற்றும்
தெரிந்திடா தனவும் ஒத்து
விரிந்திட அறிவு மேலாய்
விளங்கின்நற் பாதம் ஆமே.''

என்பது ஸ்ரீ அம்பலவாணர் அருளிய தசகாரியத்துள் உள்ள திருவிருத்தம். அவர் சிவமாகத் திகழும் சிவஞான மூர்த்தி என்பது சைவ சித்தாந்த ஞானச் செல்வர்க்கெல்லாம் இனிது விளங்கும். இதன் உரையாக வெளிவந்ததில், "தெரிந்த புண்ணியமும்-எல்லாம் சிவன் செயல் என்று அறியப்பட்டு இயற்றப்பெறும் பதி புண்ணியமும், சற்றும் தெரிந்திடா தனவும்-சிறிதும் அறியப்படாத அதுவது வாய் அழுந்தி நிற்கும் நிலையும்'' என்று பதவுரை எழுதியதும் அல்லாமல், பின் விளக்கமும் எழுதியிருக்கிறது. "தெரிந்த புண்ணியம்:-புண்ணியம் மேல் நோக்குவிக்கும்' என்றபடி மேல் நிலை எய்துவிப்பனவாகிய புண்ணியங்கள் இருவகையில், சிவனலாது பெருமான் இலன் என்று தெளிந்து அவனை உன்னிச் செய்யப் படுவதாகிய பதிபுண்ணியமே ஆராய்ந்தெடுக்கப்பட்ட புண்ணியம். சற்றும் தெரிந்திடா—தனவும்:-இறைவனையே இடைவிடாது பற்றிச் சிவோகம் பாவனையில் இருப்பதால், ஒளியுட் புதைந்த கண் அவ்வொளியையும் அறியாது ஒளியாயிருத்தல் போலவும், அமுதக் கடலில் அழுந்திய உயிர் அமுதமாய் அதனையும் அறியாததுபோலவும் சிறிதும் அறியப்படாதனவும்.'' என்பது அவ்விளக்கம். அப்பொருளும் விளக்கமும், அறியாமையின் அடிப்படையில் எழுந்த காரணத்தால் முற்றும் குற்றம் உற்றது.

"சிவ புண்ணியம் அபுத்தி பூர்வம் புத்தி பூர்வம் என்று இருவகைப்படும். அவற்றுள், (1) அபுத்தி பூர்வம் வேள்வி முதலியவற்றுட் போலப் பொது நீக்கி அறியுமாறு இன்றிச் சிவபிரானை நோக்கிச் செய்வதூஉம் (2) அந்

நோக்கமும் இன்றி மாவலி முன்னைப் பிறப்பிற் செய்தது போலச் செய்தவினை யாதானும் ஓர் ஆற்றால் சிவபிரானுக்குரிய பணியாய் முடிவதூஉம் என இருவகைப்படும்.

பொது நீக்கிச் செய்யப்படுவதாகிய சிவ புண்ணியமும் (1) பொது (2) சிறப்பு என்று இருவகைத்து. அவற்றுள், (1) பொது ஆவது;- சிவ புண்ணியத்திற்கு அங்கம் ஆகிய சிவ தீக்கை இன்றி அவ்வாறு செய்வது.

(2) சிறப்பு ஆவது சிவபுண்ணியத்திற்கு அங்கம் ஆகிய சிவதீக்கை உடையராய் அவ்வாறு செய்வது.

இவ்விரண்டும் (1) பத்தி காரணம் ஆக உண்மையாற் செய்வதும் (2) புகழ் முதலிய உலகப் பயனை நோக்கிச் செய்வதும் என வெவ்வேறு இருவகைப்படும்.

அச் சிறப்புச் சிவபுண்ணியம் இரண்டும் சரியையும் கிரியையும் யோகமும் அம் மூன்றால் நீழும் ஞானமும் என ஒவ்வொன்று நன்னான்காம். அந்நான்கனுள்ளும் சரியையிற் சரியை முதலாக முப்பத்திரண்டு வகைப்பட்டு இன்னும் பலதிறப்பட்டு விரியும்.

இப்புண்ணியங்களுள் நோக்கிச் செய்வன புத்தி பூர்வம். நோக்கம் இன்றிச் செய்வன அபுத்தி பூர்வம். புத்தி பூர்வவினையை அறிந்து செய்வினை என்பர். அபுத்தி பூர்வவினையை அறியாது செய்வினை என்பர். இலகுவினை என்பது புண்ணியத்தையே. அதிலும் சிவபுண்ணியத்தையே. புத்தி பூர்வ புண்ணியத்தைத் 'தெரிந்த புண்ணியம்' என்றும், அபுத்தி பூர்வ புண்ணியத்தைச் 'சற்றும் தெரிந்திடாதன' என்றும் அத் தசகாரியத்தின் திருவிருத்தம் உணர்த்துகின்றது. அங்குச் சத்திநிபாதத்திற்கு வேண்டும் இருவினை யொப்பு உணர்த்தப் பட்டது. அஃது அதை உணராமல் எழுதிய உரையாதல் யாவர்க்கும் புலனாகும். அவ்வுரையில் தொட்ட இடங்களில் எல்லாம் பிழை தவிர வேறு இல்லை. அப்பதிப்பில், பக்கம்-81-82 இல் உள்ள பகுதியால் இவ்வுண்மையை அவர் உணர்ந்து எழுதியிருக்கலாம். திருவருள் துணை செய்யவில்லை.

"நெறிநீர்மையர் நீள்வானவர்
நினையுந் நினைவாகி
அறிநீர்மையில் எய்தும்
அவர்க்கு அறியும் அறிவருளிக்
குறிநீர்மையர் குணம் ஆர்தரு
மணம் ஆர்தரு குன்றில்
எறிநீர் வயல் புடைசூழ்தரும்
இடும்பாவனம் இதுவே."

என்று காழிவேந்தர் அருளிய திருப்பாடலை இங்கு ஊன்றி நோக்குதல் எத்தனையோ நலம் பயக்கும்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருவவதாரத்தின் காரணம், அவர்க்குத் தந்தையாரான சிவபாத விருதயர் புரிந்த தவமே ஆகும். சேக்கிழார் சுவாமிகள்,

"மேதினிமேற் சமண்கையர்
சாக்கியர்தம் பொய்ம் மிகுத்தே
ஆதியரு மறைவழக்கம்
அருகி அரனடியார் பால்
பூதிசாதன விளக்கம்
போற்றல் பெருதொழியக்கண்
டேதமில் சீர்ச் சிவபாத
இருதயர்தாம் இடருழந்தார்"

என்று (1) சிவபாத விருதயரது இடருழப்பையும், (2) அதற்கு ஏதுவான ஆதியருமறை வழக்கத்தின் அருகிய நிலையும் சிவனடியார்பால் திருநீறு முதலிய சாதன விளக்கம் போற்றப் பெருது தவிர்ந்தமையும் கண்டு அறிந்த வாய்மையையும், கூறினார்கள். அதை அடுத்து,

"மனையறத்தில் இன்பம்உறும்
மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே
ஆடிய சேவடிக் கமலம்
நினைவுறமுன் பரசமயம்
நிராகரித்து நீருக்கும்
புனைமணிப்பூண் காதலனைப்
பெறப்போற்றும் தவம்புரிந்தார்"

என்றருளியதில், பரசமய நிராகரணம் (சைவ மதஸ்தாபனம்) அவதாரத்தின் குறிக்கோள் என்பதை உணர்த்தினார்.

இவ்வுண்மையைத் திருஞான சம்பந்தர் திருமுறையே வெளிப்படுத்துகின்றது.

"அலையாரும் புனல்துறந்த
அமணர் குண்டர் சாக்கியர்
தொலையாதங் கலர்தூற்றத்
தோற்றம் காட்டி ஆட்கொண்டீர்

தலையான நால்வேதம்
தரித்தார் வாழும் தலைச்சங்கை
நிலையார்ந்த கோயிலே
கோயிலாக நின்றீரே" (2. 55. 11)

என்பது, திருஞான சம்பந்தரைச் சிவபிரான் தோற்றியாட் கொண்டதன் காரணத்தைப் (பெரிய புராணத்தின் வாய்மையை நிலை நாட்டிய வண்ணம்) உணர்த்துமாறுணர்க. திருஞானசம்பந்தர் திருப்புனித வாய்மலர்ந்தருளு தலின் விளைவாகிய நலங்களைப் புராணத் தொடக்கத்தே உணர்த்தும் இடத்தில், 'அருமறை வழக்கம் அருகிய வாற்றால், வேதநெறி தழைத் தோங்க' என்றும், 'அரனடியார்பால் பூதிசாதன விளக்கம் போற்றல் பெருதொழிந்ததால், "மிகுசைவத் துறைவிளங்க' என்றும் ஆசிரியர் அருளினர்.

"கஞ்சியைக் குலவு கையரே
கலிக்கம்ஆர் அமணர் கையரே
அஞ்சவாதில் அருள் செய்யநீ
அணைந்திடும் பரிசு செய்யநீ
வஞ்சனை வரவும் வல்லையே
மதித்தெனைச் சிறிதும் வல்லையே
வெஞ்ச லின்றி வருவித்த கா
மிழலை சேரும் விறல் வித்தகா"

என்ற திருவீழி மிழலைத் திரு வியமகப் பதிகத்திலும், தம்மைச் சிவபிரான் வருவித்த காரணத்தை உணர்த்தி யருளினர்.

"குண்டிகை பீலிதட்டோடு நின்று
கோசரம் கொள்ளியரும்
மண்டைகை யேந்தி மனங்கொள்
கஞ்சியூணரும் வாய் மடிய"

என்று நம் ஆசாரியாது திருவவதாரத்தின் பின் விளைவு கூறி, அது குறித்தே, தமக்குத் தோடுடைய செவியனும் விடையேறித் தூவெண் மதிசூடிக் காடுடைய சுடலைப்பொடி பூசி உள்ளங்கவர் கள்வனுமாகிய பிரமாபுரத்துக் கள்வன், அக் காட்சி தந்தருளிய உண்மையை, "இண்டை புனைந்து எருதேறி வந்து என் எழில் கவர்ந்தார்" என அவ்விளைவு நிகழ்த்தத் தமக்கு ஆற்றலைத் தந்த திருவருளின் தொடக்கத்தை யுணர்த்தும் வாயிலாக வெளிப்படுத்தியவா றறிக.

திருஞான சம்பந்தர் தம் முற் பிறப்புக்களிலும் திருவடி மறவாத சிறப்புடையவர் என்பது, அவர் திருவாக்கில் வெளியாய உண்மையை உலகோர் அனைவரும் உணர்வர். "பல்லூழி காலம் பயின்று அரனை அர்ச்சிக்கின் நல்லறிவு சற்றே நகும்" என்றதால், சற்றுய நல்லறிவிற்கே பல்லூழி காலம் சிவார்ச்சனை செய்திருக்க வேண்டும் ஆயின், பரிபூரண சிவஞான சம்பந்தர்க்குள்ள சிவார்ச்சனைப் பயிற்சி ஒரு பிறப்பினது மட்டும் எனல் ஒல்லுமோ ?

"துறக்குமா சொலப்படாய்
துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாத என்னை
மையல் செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்
பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க்
கிழுக்குகின்ற தென்னையே"

என்று திருத்துருத்தியில் வந்தருளியபோது கருத்திருத்தினமையை வெளியிட்டவாறு காண்க.

'மறவி என் சிந்தனை மாற்றி' (2. 67. 8)

என்றதும் உணர்தற்குரியது.

சிவபாத விருதயர் தவத்திற்காக ஒரு பிள்ளையைத் தரத் திருவுளங்கொண்ட சிவபிரான், திருவடியை மறக்குமாறிலாத திருவருட் செல்வரைப் பிறப்பித்தருளியது சைவ சமயத்தின் தனிப்பெரு வாய்ப்பன்றோ? அவர்க்குப் 'பிணிப்படும் உடம்பு விட்டு இறக்குமாறு காட்டினா'னும் இறைவன். அவர் திருவடிகளைத் தொழக் கிடைத்த நம்மனோர் யாவர்க்கும், இனிப் பிறிதொரு பிறவி யில்லாதவாறு, கடைசி பிறப்பாக அதுவே வீடுபெறுஞ் சிறப்பாக அமையும் பேறு எய்தியது.

'தேவரையும் மால் அயன் முதற்
றிருவின் மிக் கோர்
யாவரையும் வேறடிமை யா
உடைய எம்மான்'

என்ற உண்மைக்குத் தக, அத் திருவின் மிக்கோர்க் கெல்லாம் மிக மேலானவராகிய திருஞான சம்பந்தரை 'வேறு' (வீறு) உற ஆண்டருளிய உண்மையைத் திருவெங்குருவைக் குறித்துப் பாடியருளிய திருப்பதிகத்தின் ஒன்பதாம் திருப்பாடல் உணர்த்திற்று. 'நல்லூர்ப் பெருமணம் வேறுகந்தீர்' என்றதும் இங்கு அறியத்தக்கது.

"ஆறுடைச் சடையெம் அடிகளைக் காண
அரியொடு பிரமனும் அளப்பதற் காகிச்
சேறிடைத் திகழ்வானத் திடைப்புக்கும்
செலவறத் தவிர்ந்தனர் எழிலுடைத் திகழ்
[வெண்

**ணீறுடைக் கோல மேனியர் நெற்றிக்**
**கண்ணினர் விண்ணவர் கைதொழு தேத்த**
**வேறெமை யான விரும்பிய விகிர்தர்**
**வெங்குரு மேவியுள் வீற்றிருந் தாரே."**

ஆட்கொண்டருளிய வண்ணம் தேவி வாயிலாகத்தானே! அவ்வுண்மையை, அவர் திருவாக்கில் எத்தனையோ இடங்களிற் காண காணலாம்.

**"நன்றதுணர்வீர் உரைமினோ ஆதிஎமை ஆளுடைய**
**அரிவை யொடு பிரிவிலி அமர்ந்த பதிதான்,**
**சரதமணி தெண்டிரை கொணர்ந்து வயல்புக**
**எறிகொள் சண்பை நகரே."**

அவளே ஆளினும், அவள் தனித்து வந் தாளல் இயலாது. அவளை அவிநாபாவமாக உடைய சிவபெருமான் உடன்போந்தே அக் காழி வேந்தரை ஆண்டருளினான் ஆதலின்,

**"சிற்றிடைப் பேரல்குற் றிருந்திழை யவளோடும்**
**பெற்றெனை யாளுடைப் பெருந்தகை இருந் [தகே"**

எனச் சிறப்பாட்சியையும் பல இடத்தில் குறித்தருளிய வாய்மையை ஆண்டாண்டு நோக்கி வாழ்க. அதனை அத்திருப் பாடலின் முன்னரே, ஆண்ட காரணத்தோடும் உணர்த் தியவாறு காண்க.

**"போதையார் பொற்கிண்ணத்**
**தடிசில் பொல்லா தெனத்**
**தாதையார் முனிவுறத் தான்**
**எனை ஆண்டவன்"**
**"புறவம்பதியாக எனையாளுடையான்**
**இமையோர் ஏத்த உமையோடிருந்தானே"**

திருஞான சம்பந்தர் முதலிய ஆசாரியர் மூவ ரும் முதன்முதல் ஆக அருளிய திருப்பதிகம் மூன் றும் 'குருவருள்' விளைவு என்னும் வாய்மையை அகத்தியர் தேவாரத் திரட்டில் அறிந்திருப்பர் அனைவரும். 'குருவருளும் வெண்ணீறெழுத் தைந்தும்' என்ற தொடக்கத்துத் திருவெண் பாவும் 'தோடுகூற்றுப் பித்தா மூன்றும் பீடு டைத் தேசிகன் பேரருளாகும் என்றதும்' அதனை உணர்த்துகின்றன. அவ்வாறே அகச் சான்றாக நம் காழி வள்ளல் வழங்கியதோ ரிடத்திலும் குருவருள் விளங்குவதை உணர லாம்.

**"மைத்திகழ் நஞ்சுமிழ் மாசுணமே**
**மகிழ்ந்தரை சேர்வது மாசுணமே**
**மெய்த்துடல் பூசுவர் மேன்மதியே**
**வேதம தோதுவர் மேன்மதியே**
**பொய்த்தலை யோடுறு மத்தமதே**
**புரிசடை வைத்தது மத்தமதே**
**வித்தகர் ஆகிய வெங்குருவே**
**விரும்பி யமர்ந்தனர் வெங்குருவே"**

என்ற திரு வியமகப் பதிகத்தில், **எங்குருவே வெங்குருவில் விரும்பி யமர்ந்தனர்** என்றருளிய துணர்க.

திருஞான சம்பந்தர் இளமைத் திருக் கோலத்தையே என்றும் உடையார். பதினா றுண்டே உலகில் நிலவினார் என்னும் வாய் மைக்கு எத்தனையோ ஆதாரங்கள் உள.

"பானல் வாய் ஒரு பாலன்' "பாலன் ஆய தொண்டு செய்து பண்டும் இன்றும் உன்னையே நிலமாய கண்டனே நின்னை அன்றி நித்தலும் சிலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே." என்னும் திருவாலவாய் திருப்பதி கங்களில் தமது என்றும் குன்றா இளமைத் திருவுருவை, உணர்த்தி யருளினார்.

**"மூலைத்தடமூழ்கிய போகங்களும்**
**மற்று எவையும் எல்லாம்**
**விலைத்து அலையாவணம் கொண்டு**
**எமையாண்ட விரி சடையீர்"**

என்றதிலும் இளமை நிலை விளக்கப்பட்டது.

திருஞான சம்பந்தர் அருளிய திருமுறை கள் **"சிவனைத் தொழுது உலகில் இழுகு மலம் அழியும் வகை கழுவும் உரை"** ஆயும், **"கழுமல நகர்ப் பழுதில் இறை எழுதும் மொழி"** ஆயும், உள்ள திருவருளுருவின என்னும் உண்மை உயர்வைச் சைவர்கள் உளங்கொண்டு நாள் தோறும் பாராயணம் புரிதல் வேண்டும். இது திருவருளைப் பெற்றுய்வதற் குரிய ஞான சாதனமாகும். சாதகமும் ஆகும்.

திருஞான சம்பந்தர் திருவாய்மொழிகள் எல்லாம் இறைவன் திருவருள் மொழிகளே அல்லாது வேறு இல்லை.

**"மலையினார் பருப்பதம் துருத்திமாற் பேறு**
**மாசிலாச் சீர்மறைக்காடு நெய்த்தானம்**
**நிலையினான் எனதுரை தனதுரை யாக**
**நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்"**


என்னும் உண்மையால் இவர் திருவாக்கெல் லாம் சிவனருள் வாக்கே என்பது நன்கு விளங்கும். அதனுல்தான் பன்னிரு திரு முறைகளுள் முதல் மூன்ருக அமைந்தன. சிவ வாக்கு முதற் கண்ணும் அடியார் வாக்கு அடுத்தும் அமைந்தவா றறிக. 'எனதுரை தனதுரை' என்றதைத் தெளிய,

"நிலை கூடினவர்கள் பிராரத்த தேகத் துடன் கூடி நின்று போகம் புசிப்பதில்லையோ என்னில், மறைப்பாகிய பாசபந்தம் நீங்கின ஞானவான்கள், தத்துவ சுத்திப்பட்டு ஆன்ம போதம் ஜீவியாமல் ஒடுங்கிப் போனதால், ('ஒடுக்கம்' என்றதன் உண்மைப் பொருளை இங்குணர்க) அவர்களுக்கு முன்போல் அருந்தியிருந்த தேகத்துக்கு உள்ள புசிப்பும் தொழிலும் அவர்கள் பொருந்தார்கள். உயிர் பொருந்தாத உடலோ சடம் ஆதலின், அதுவும் தொழிற்படாது. கர்த்தாவே பொருந்தி நின்று புசிப்பார். எதனுலே என்னில், பெத்தான்மார்களுக்குப் பாசமோசனம் பண்ணுவதற்குக் கருவியாக இந்தத் தேகமும் போகமும் கர்த்தாவே தன்னுடையனவாய் ஒத்துக் கொண்டு ஜீவன் முக்தி பர முக்தி என்று இரண்டு படுத்தாமல் இந்த முக்தியே பர முக்தியாய்க் கூட்டுவிக்கும்" என்னும் பழைய சான்ருேர் வாக்கையும் அறிதல் சிறந்தது.

"பாவினிற் சீவன் முக்தி பகருமேற்
பரம முக்தி மேவுவன் ..........
இரண்டும் ஒன்றே."

(பண்டார சாத்திரம்).

(தொடரும்)



திருமயிலைக் கபாலீசுரர் கோயிலில் நிகழ்ந்த வடஎல்லைப்போர் வெற்றி வழிபாட்டுக் கூட்டத்தில், அறங்காவலர் திரு. அய்யா சுப்ரமணிய முதலியார் அவர்கள் புதல்வன் திரு. முருகையன், அறநிலைய அமைச்சர் அவர்களிடம் தேசியப் பாதுகாப்புக்கு நிதியுதவுதல்.

# தேவாரத்தில் திருமால்

தணிகைமணி திரு. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை M. A.

## 1. சம்பந்தர் தேவாரம்

திருமால் பாற்கடலில் அரவணையில் துயில்பவர். அந்த அரவு அழல் வாயது; ஐந்து வாயது; படம் கொண்டது; புள்ளிகள் வாய்ந்தது; பாயாக அமைந்தது. பைங் கண்ணது.

"மறைதருவழி மலிமனிதர்கள் நிலைமலிசுரர்
முதல் உலகுகள் நிலைபெறு
வகைநினை வொடுமிகும்
அலைகடல்நடு அறிதுயில்அமர் அரியுரு
இயல் பரன்". 1-21-2.

திருமாலுக்கு ஊர்தியும், கொடியும் கரு



சந்தான கிருஷ்ணன், திருப்புல்லாணி

திருமாலின் துயில். 'அறி துயில்'. அது மறை கூறிய வழியே, உலகுகள் யாவும் நிலை பெறுதற்கு வேண்டிய நினைப்போடு கூடிய துயிலாகும். அத்தகைய அரியின் உருவோடு கலந்தவராய்ச் சிவபிரான் உலகங்களை அளிப் பர்.

டன். திருமகளின் காதலன், நாயகன் திரு மால். அவள் திருமாலின் மார்பில் உறைவாள். திருமால் அழகர். திறமை வாய்ந்தவர்; நீண்ட அழகிய முடியினர்; அவருடைய கண் தாமரை போன்ற செம்மையது; அவர் கடல் நிறத்தவர்; நீலவண்ணர்; பச்சை நிறத்தினர்;

மணிவண்ணர்; மேகவண்ணர்; "பாலாடு மேனி கரியான்" எனவும் கூறப்பட்டுள்ளது. அவர் ஏழு உலகையும் 'உண்டவர், கடலைக் கடைந்தவர்; துழாய் மாலை அணிந்தவர்; (ராகு-கேது) பாம்பின் தலையை அரிந்தவர்; பிரமனை ஈன்றவர்; வேதத்திற் சொல்லப் பட்டவர். அவர் கையிற் பொலியும் படை 'ஆழி' (திகிரி, சக்கரம், நேமி); இது வன்மை மலிந்தது, ஒளி வாய்ந்தது, கூர்மை கொண்டது, எரி வீசுவது; தேவர்களின் துதிக்கு இணங்கித் திருமால் இப்படை கொண்டு அவர்களைக் காத்தளிப்பர்; அவர் திருக்கரத்தில் சங்கமும் உண்டு. அது ஒளிவீசுவது.

**வராக அவதாரத்தில்** அவர் பயங்கரமான கோரரூபமுடன் பன்றியாய்ப் பூமியைத் தமது எயிற்றின் நுனியில் நிறுவினர்.

**வாமனவதாரத்தில்** குறிய அழகிய மாணியாய் மாவலியிடம் சென்று மண் இரந்தார்; தானநீர் ஏற்றார்; குறளராம் அவர் வானளாவி நிமிர்ந்தார்; தாவினர், மண்ணை அளந்தார், விண்ணை அளந்தார், திசைகளை அளந்தார்; அடி மூன்று அளந்தார்.

**ஸ்ரீ ராமாவதாரத்தில்** வைதேகியை (சீதையை) மாயையால் காட்டில் வௌவிய அரக்கன் இராவணனை, இராமர் தமது விற்போர் வல்லமையாற் செற்றார். இராவணனுடைய பத்து முடிகளையும் மலையன்ன தோள்களையும் அறுத்துத் தள்ளினர். அந்தப் பழியும் வினையும் நீங்குதற் பொருட்டு இராமேசுரம் என்னும் கோயிலை அமைத்து அவர் சிவபிரானை வழிபட்டுப் புகழ்ந்தேத்தினர்.

**கிருஷ்ணவதாரத்தில்** குருந்து ஒசித்தார்; புள்ளின் வாயைப் பிளந்தார்; மருதிடைத் தவழ்ந்தார்; மலையைக் குடையாக ஏந்தி மழையைத் தடுத்தார்; யானையின் கொம்பை ஒடித்தார்; விளவின் கனியைக் கன்றால் நூறினர்.

**வராக அவதாரத்தில்** இறைவனைப் பூசித்த தலம் சிவபுரம். **வாமனவதாரத்தில்** இறைவனைப் பூசித்த தலம் திருமாணிகுழி. **இராமாவதாரத்தில்** இறைவனை வழிபட்ட தலம் திருவுசாத்தானமும், இராமேசுரமும். திருமால் பூசித்த பிற தலங்கள் பழபாடியும், திருமாற்பேறும். அவர் ஆயிரம் மலர் கொண்டு வழிபடும் போது, தமது கண் மலரையே இடந்து பூசித்த தலம் திருவீழிமிழலை. இறைவர் வீற்றிருப்பதற்காக விண்ணிலிருந்து விமானம் ஒன்றைத் திருவீழிமிழலைக்குத் திருமால் வரவழைத்தார். திருமாலே சிவனுடைய தேவி. சிவனுக்கு மாது ஒரு பால்; மால் ஒரு பால். உடனிருந்தும் திருமால் இறைவனைக் கண்டிலர். மண்ணுளார்க்கும், விண்ணுளார்க்கும் அசுரர்களால் ஏற்படும் துயரங்களைக் களையும் பொருட்டு இறைவன் திருமாலுக்கு ஆழி அளித்தார்.

திரிபுர சம்மார காலத்தில் திருமால் சிவபிரானுடைய அம்பாக அமைந்தார். விடையாகவும் ஆயினர். பிரமனும் திருமாலும் தத்தம் வலிமையைப் பேசிப் போராடிய போது அவர்களின் இடையே தோன்றிய சோதியின் அடியைக் காணத் திருமால் பன்றிக் கோலம் பூண்டு மண்ணைக் கெண்டி ஆழ்ந்து தேடினர். அடியைக் காணது அயர்ந்தனர். "ஹர" பாராயணம் செய்து வணங்கினர். இந்தப் பன்றி நீலநிறப் பன்றி. நீலமலை போன்ற பெருத்த உருவத்தது.

திருமால் போகம் பொலிய அழகாய் வாழ்வதற்கு மூலாதாரம், சிவபிரான் தேவியொடு பிரியாது அமர்ந்திருத்தலே.

> **"நாகத் தணையானும் (நளிர்மா மலரானும்)
> போகத் தியல்பினுற் பொலிய அழகாகும்,
> ஆகத்தவளோடும் அமர்ந்து".** 1-85-9.

## II. அப்பர் தேவாரம்

திருமாலின் அவதாரங்களுள் - அவர் **1. வராகமாய்ப்** பூமியை இடந்ததும், **2. நரசிம்மமாய்** இரணியனை மாய்த்ததும், **3. வாமனனாய்** மாவலியிடம் மண் இரந்ததும், நீண்டு பூமியைத் தாவி அளந்ததும், வாமனரது உதிரத்தைக் கொண்டதும், **4. இராமராய்** இராவணனைக் கொன்றதால், அதனால் நேர்ந்த பாவத்தைப் போக்கச் சிவபிரானைப் பூசித்ததும், **5. கிருட்டிணனாய்** ஏழு விடைகளை அடக்கியதும், குருந்து ஒசித்ததும், குழல் ஊதியதும், பேய்முலை உண்டதும், மலையைக் குடையாகக் கொண்டதும், குதிரையின் வாயைப் பிளந்ததும், கூறப்பட்டுள்ளன. பத்து அவதாரங்கள் திருமால் எடுத்ததும் கூறப்பட்டுள்ளது.

அவர் குடக்கூத்து ஆடினர், திருநீற்றை நிறையப் பூசினர், பாற்கடலில் பாம்பணையில், ஆலிலையில் பள்ளிகொள்வர், தேவகணங்கள் அவரைத் தொழுது ஏத்தும், தேசமெங்கும் அவரைத் தொழுது பரவும். அவர் மிகவும் மாயை வல்லவர். எங்கும் வியாபித்துள்ளவர்.

அவருடைய இருப்பிடம் வைகுந்தம். அவர் வாகனமும், கொடியும் கருடன். அவர் நாள் திருவோணம். அவர் நிறம் (கடல் நஞ்சு அவரைத் தாக்கினதற்கு முன்பு) வெள்ளை. அவர் சிவனைப் பூசித்துப் பெற்ற சக்கரத்தால் வக்கரன் என்பவனது உயிரை வௌவினர்.

### III. சுந்தரர் தேவாரம்

திருமால் காமன் தந்தை; திருமகள் கணவர்; பின்னையின் கேள்வர்; ஸ்ரீதேவியின் நாயகர்; சிவந்த விசாலக் கண்ணினர்; நெடியவர்; கரிய நிறத்தவர்; உலகை உண்டு உமிழ்ந்தவர்; தேச வேந்தர்.

**கிஷ்ணவதாரத்தில்:** யானையின் கொம்பைப் பறித்தவர்; குதிரையின் வாயைப் பிளந்தவர்; புள்ளின் வாயைக் கீண்டவர்; மருத மரங்களினூடு தவழ்ந்து அம்மரங்களை வீழ்த்தினவர்.

**வாமனவதாரத்தில்:** மாணி (பிரமசாரி) உருவுடன் சென்று மண்ணை அளந்தவர்.

மங்கை பாகத்துடன், திருமாலையும் ஒரு பாகமாக உடையவர் சிவபிரான். சலந்தரனைப் பிளந்த சக்கரத்தைப் பெற ஆயிரம் மலர் கொண்டு சிவபிரானைப் பூசித்த போது, ஒரு பூக் குறையத் திருமால் தம் கண்ணையே இடந்து மலராகச் சூட்டி அச்சக்கரத்தைப் பெற்றனர்.

நமது யோக நிலையை அழிக்க வந்த காமவேளை அவன் தந்தையாம் திருமால் காண அவனை விழித்தெரித்தார் சிவபிரான்.

**திருமாலின் திருநாமங்கள் :—** அரி, ஆழியான், அரவணையான், ஓணப்பிரான், ஓதவண்ணன்; கடல் வண்ணன், கண்ணன், கருடத்தனிப்பாகன், காணிக்கிரந்தவன், கள்ளப்பிள்ளை, கரியவன், கோவலன், குடமாடி, கேசவன்; கிடந்தவன், சிந்துரக் கண்ணன், செங்கண்மால்; திருவின் நாயகன், நாரணன், நெடியவன், பச்சையான், மணிவண்ணன், மதுசூதனன், மழையான், மாயன், மாதவன், விண்டு, விளங்கொளி.

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்


1. **வேளச்சேரி—**ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளுக்கு 104-வது வருடத்திய குருபூஜை விழா.
2. **ஸ்ரீரங்கம்—**ஸ்ரீரங்கநாத சுவாமி தொகுதி தேவஸ்தானம், சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் உள்ள கருப்பண்ண சுவாமிக்கு மகா சம்ப்ரோட்சணம்.
3. **திருவிரிஞ்சிபுரம்—**வழித்துணைநாதர் கோயிலில் கார்த்திகைக் கடைஞாயிறு விழா.
4. **வைத்தீஸ்வரன் கோயில்—**வைத்தியநாதசுவாமி கோயிலில் வடஎல்லைப் போரில் இந்தியாவிற்கு வெற்றி ஏற்பட மகாருத்ரம்.
5. **சுவாமிமலை—**சுவாமிநாத சுவாமி கோயிலில் திருக்கார்த்திகை விழா.
6. **திருக்கடவூர்—**அமிர்தகடேஸ்வரர் கோயிலில் கார்த்திகை 2-வது சோமவாரத்தில் 50-வது லட்சார்ச்சனை பூர்த்தி விழா.
7. **லால்குடி—**சப்தரிஷீஸ்வரர் கோயிலில் இரண்டாண்டுகளாக வாரந்தோறும் நடைபெற்றுவந்த ‘திருவிளையாடற் புராண விரிவுரை’ நிறைவு விழா.
8. **திருநாகேசுவரம்—**நாகநாத சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம்.
9. **திருவொற்றியூர்—**ஸ்ரீ படம்பக்கநாதருக்குப் புனுகு மெய்ப்பூச்சு ஆராதனை.
10. **குற்றாலம்—**திருக்குற்றாலநாத சுவாமி கோயிலில் பவித்ர உற்சவம்.
11. **திருவாஞ்சியம்—**வாஞ்சிநாத சுவாமி கோயிலில் கார்த்திகைப் பெருவிழா.
12. **கொல்லிமலை—**ஸ்ரீ பழனியப்பர் சுவாமி கோயிற் கிருத்திகை உற்சவப் பதினாறும் ஆண்டுவிழா நடைபெற்றது.

# திருவேற்காடு

காஞ்சிபுரத்திற்கு மூன்று யோசனை தூரம் வடகிழக்கிலும், வங்காள விரிகுடாக் கடலுக்கு ஒரு யோசனை தூரம் மேற்கிலும், திருப்பாசூர்க்குத் தென் கிழக்கிலும், திரு மயிலைக் கபாலீச்சரத்திற்கு வடகிழக்கிலும் திருவேற்காடு அமைந்து திகழ்வதாகப் புராணம் கூறுகின்றது.

"பார்புகழும் காஞ்சி ஏகரம்
பரற்குயோ சனைஓர் மூன்று
நேர்பெறும் ஈசா னத்தில்
நீடுபூ ருவத்தின்; வாரிக்கு
ஏர்கொள்யோ சனைமேற் பாலில்;
எழில்திருப் பாசூர்க்கு அங்கி
ஆர்திசை தனில்; க பாலீச்
சரத்தினுக்கு அனில திக்கில்"

—திருவேற்காட்டுப் புராணம்.




அகத்தியருக்குக் காட்டிய
திருமணக் கோலம்

மன்னிப் பெருகும் பெருந்தொண்டை
வளநா டதனில் வயல்பரப்பு
நன்னித் திலவெண் டிரைப்பாலி
நதியின் வடபால் நலங்கொள்பதி
அன்னப் பெடைகள் குடைவாவி
அலபுர்புக் காட, அரங்கினிடை
மின்னுக் கொடிகள் துகிற்கொடிகள்
விழவிற் காடு வேற்காடு


—சேக்கிழார் சுவாமிகள்

திருவேற்காடு என்னும் தலம் தொண்டை வளநாட்டில், செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னைக்கு மேற்கே பூவிருந்தவல்லியில் இருந்து ஆவடிக்குச் செல்லும் சாலையில் இரண்டுகல் தொலைவில், காடு வெட்டியாறு என வழங்கும் பழைய பாலாற்றின் வடகரையில் அமைந்து விளங்குகின்றது.

இத்தலம் ஒரு காலத்தில் வேல மரக் காடாக இருந்ததனாலும், வெள்வேல மரமே இங்குத் தல விருட்சமாக இருப்பதனாலும்,



மூலத்தான முருகன்



வில்லேந்திய வேலவர்

இதற்குத் திருவேற்காடு எனப் பெயர் வழங்குவதாயிற்று. இது மூர்க்க நாயனார் திருவவதாரம் செய்த தலம்.

இறைவன் தான் மேற் கொள்ளும் திருவுருவங்களுக்கு ஏற்ப, வேதங்களையும் வடிவம் எடுக்கும்படி கட்டளை இட்டிருந்தார். அதனால் திரிபுரதகன காலத்தில் நான்கு குதிரைகள் ஆகவும், அருச்சுனனின் தவநிலை கண்டு அருள்புரிவதற்கு வேட வடிவம் கொண்டு சென்ற சமயத்தில் நாய்கள் ஆகவும், தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடிய பொழுது காற்சிலம்புகள் ஆகவும், பிட்சாடனக் கோலம் கொண்ட பொழுது கோவணம் ஆகவும் வடிவம் கொண்டு விளங்கிய வேதங்கள், இத்தலத்தில் தல விருட்சமாகிய வெள்வேல மரமாக விளங்கிவரும் காரணம்பற்றி, இதற்கு வேதவனம் வேதாரண்யம், மறைக்காடு எனவும் பெயர்கள் உண்டு. தெற்கே அப் பெயர் பெற்று விளங்கும் சிறந்த தலம் வேறு ஒன்று இருப்பதனால், அதனோடு இதனிடை வேறுபாடு விளங்க உணர்த்துதற் பொருட்டு, இதனை வட(க்கு) வேதாரணியம் எனவும், வடமறைக்காடு எனவும் பெரியோர்கள் வழங்கி மகிழ்வர்.

இத்தலம், சிவபெருமான் திருக்கயிலையில் நிகழ்ந்த தமது திருமணக் கோலத்தின் சிறப்பினை, அகத்தியர் பொருட்டுக் காட்டியருளிய பெருமை யுடையது. திருமணக் கோலம் கொண்ட பார்வதி பரமேசுவரர் திருவுருவம் மூலத்தானத்தில் அழகுற அமைந்துள்ளது. பிரமனைப் பிரணவப் பொருள் கேட்டுச் சிறையில் அடைப்பித்த முருகப் பெருமான், பிரமனைச் சிறைவீடு செய்யுமாறு சிவபிரான் பணித்த வழியும் சிறிது மறுத்த பிழை தீரும் பொருட்டு, இங்கு வழிபட்டார். பிரமன் இந்திரன் பரசுராமன் பராசரர் திக்குப் பாலகர்கள் ஆகிய பலர் இங்கு இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இந்திரன் பூசித்த கோயில், வேற்காட்டு நாதர் கோயிலுக்குக் கீழ்த்திசையில் தனிக் கோயிலாக அமைந்துள்ளது. இத் தலத்தில்



பாலாம்பிகை

உள்ள வேத தீர்த்தத்தில் ஞாயிறு தோறும் நீராடி இறைவனை வழிபட்டு வந்தால், அங்கம் குறைந்த பெருநோயாளரும் நோய் நீங்கி நலம் பெறுவர். இது விஷம் தீண்டாத மகிமையை யுடைய தலம். திருஞானசம்பந்தர் ஒரு திருப்பதிகம் இத்தலத்திற்கு அருளிச் செய்துள்ளார்.

"ஒள்ளி துள்ளக் கதிக்காம் இவன்ஒளி
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யார்உயர்ந் தார் இவ் வுலகினில்
தெள்ளி யார்அவர் தேவரே"



மூர்க்க நாயனார், அகத்தியர்



திருவேற்காடு-மூர்க்க நாயனார்

மூரல் வெண்மதி சூடும் முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே

விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே"

இங்குள்ள இறைவனுக்கு வேற்காட்டு நாதர் என்றும், அம்பிகைக்கு வேற்கண்ணி அம்மை என்றும் பெயர். வேதபுரீசுவரர், பாலரம்பிகை என்னும் பெயர்களும் உண்டு.

சிறந்திடும் காசி தன்னில்
திகழ்தரும் காஞ்சி யன்ன
அறந்தழை தலத்தி னின்றும்
அதிகமாம் வேற்காடு; அங்கண்
பிறந்தவர் வசித்தோர் பேசும்
பெற்றியா மரித்தோர் எல்லாம்
நிறைந்தபே ரின்ப வீட்டில்
நிலவுவர் நீங்கா தென்றும்.

—திருவேற்காட்டுப் புராணம்

## நாயன்மார் திருநாட்கள்

(※)

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | ... | ஜனவரி | | |
| 25 | ... | 9 | ... | சடைய நாயனர் |
| தை | ... | 27 | ... | தாயுமானவர், திருநீலகண்டர் |
| 6 | ... | 19 | ... | அப்பூதி அடிகள் |
| 14 | ... | 30 | ... | கலிக்கம்பர் |
| 17 | ... | பிப்ரவரி | ... | |
| 22 | ... | 4 | ... | கண்ணப்பர் |

# சந்திர சூடேசுவரர்

## முன்னுரை:

சிவபெருமான் அடியார்களுக்கு அருள் செய்தற் பொருட்டுப் பற்பல சமயங்களில் பற்பல திருக்கோலங்கள் கொண்டுள்ளார். "ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ் வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்பது அப்பர் திருமொழி. இங்ஙனம் ஆன்மாக் களின் கருமேனிகளைக் கழிப்பதற்காகத் திரு மேனி கொண்டருளிய சிவபெருமானின் திருக்கோலங்களை 25 திருமூர்த்தங்களாகப் பெரியோர்கள் கூறுவர்.

## சிறப்பு அடையாளம்:

அவற்றுள் சந்திர சூடேசுவரர் என்னும் திருமூர்த்தமும் ஒன்றாகும். இதனைச் "சந்திர சேகரர்" என்றும் வழங்குவர். தமிழில் "பிறை சூடிய பெருமான்" என வழங்குதல் பொருந்தும். சிவபெருமானுக் குரிய தனிச் சிறப்பான அடையாளங்களாகிய "நெற்றிக் கண்" "நீலகண்டம்" என்பன போலச் சடை முடியில் சந்திரனைத் தரித்திருத்தலும், அவ ருக்கு ஒரு சிறப்பு அடையாளம் ஆகும்.

## சங்க நூல்கள்:

புறநானூறு என்னும் சங்க நூல், சிவ பெருமான் சந்திரனைச் சூடியிருப்பது அவர் தம் நெற்றிக்கு அணி செய்கின்றது என்றும், அங்ஙனம் சிவபெருமானால் தம் சடைமுடி மேல் ஏற்றுத் தரித்துக் கொள்ளப்பட்டமை யின், தேவ கணங்கள் பலவும் வணங்கும் சிறப்பினைச் சந்திரன் பெறுவானாயினன் என் றும் புகழ்ந்து போற்றுகின்றது.

**"பிறைநுதல் வண்ணம் ஆகின்று; அப்பிறை பதினெண் கணனும் ஏத்தவும் படுமே"**

இவ்வாறே **அகநானூறு** என்னும் சங்க நூல், சிவபெருமானின் செவ்வானன்ன மேனியையும், எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடையினையும் புகழ்ந்து கூறி, அப்பெருமான் பிறை சூடியுள்ள பெற்றிமை யினை **"முதிராத் திங்களொடு சுடரும் சென்னி"** எனக் குறிப்பிடுகின்றது. முதிராத் திங்க ளொடு சுடரும் சென்னி என்பது, பிறையைச் சடைமுடிமேல் அணிந்துள்ள சிவபெருமா னின் **சந்திர சேகர மூர்த்தம்** என்பதனையே உணர்த்துவதாகும்.

## இயற்கையும் இறைவனும்:

இறைவனை இயற்கை வடிவமாகக் கொண்டு தத்துவக் கருத்துக்களை விளக்க முற்படும் அறிஞர்கள் சிலர், அந்திச் செக்கர் வானமே இறைவனின் திருமேனியாகவும், மேகங்களே இறைவனின் சடைக் காடாகவும், மேகத்திலுள்ள நீரே இறைவன் சடையி லுள்ள கங்கையாகவும், வானத்தில் மாலைப் பொழுதில் தோன்றும் சந்திரனே இறை வன் பிறையைச் சூடியிருத்தலாகவும் கொள் வர். இறைவன் இயற்கை வடிவினன் என் பதனை இவ் விளக்கம் உணர்த்துகின்றது.

## சரணாகதி:

சிவபிரான் சந்திரனைச் சூடியிருக்கும் தன்மை, பல பேருண்மைகளை நமக்கு உணர்த்துகின்றது. தக்கன் பெற்றெடுத்த 27 உடுக்களை மனைவியராக மணந்து கொண்ட சந்திரன், அவர் அனைவரையும் சமமாக அன் புடன் நடத்தாமல், உரோகிணி கார்த்திகை என்னும் இரு மனைவியர்பால் மட்டுமே பெருங் காதல் கொண்டு, ஏனையரைப் புறக் கணித்தான். அதனால் வெகுண்ட தக்கன் சந்திரனைத் தன் கலைகளெல்லாம் குறைந்து அழிந்து வருந்தும்படி, கொடிய சாபம் விடுத் தான்.

அதனால் தன் 16 கலைகளில் 15 கலை கள் தேய்ந்து அழிய 1 கலை மட்டுமே எஞ்சி நின்ற நிலையில், சந்திரன் செய்வதறியாது திகைத்துச் சிவபிரான் திருவடிகளில் அடைக் கலம் புகுந்தான்.


**"தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்"** ஆகிய சிவபெருமான், சந்திரன்பாற் பெரிதும் இரக்கங் கொண்டு, அவனுக்கு அபயம் அளித்து, அவனைத் தம் சடைமுடியில் எடுத் தணிந்து வாழ்வித்தார். எத்தகைய பாவி களுக்கும் இரக்கம் காட்டி இனிதே அருள் புரியும் இறைவனின் பெருங் கருணைத்திறம் இதனாற் புலனாகின்றது. மேலும் இறைவனைச் சரணாகதி அடைந்தால் நாம் உய்வது திண்ணம் என்ற பேருண்மையும் இதனால் வெளிப்படு கின்றது. **"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத் தாலும் வந்தடையிற் கண்ணுதலான் பெருங் கருணை கைக் கொள்ளும்"** எனச் சேக்கிழா

BLIC LIBRARY
1965



ஓசூர்—சந்திரசேகரர்-மனோன் மணி.

மன்னார்குடி—கோட்டூர் கொழுந்தீசுவரர் கோயில்



25-2-1960ல் சோமசுந்தரர்-அம்மன் கோயிலுக்குச் சொந்தமான மைலேரிபுரம் கிராமத்தில் நிலத்தைத் தோண்டும்போது கிடைத்தது.

கூறும் மிகச் சிறந்த அரிய பெரிய உண்மைக் கருத்தினையும், சந்திர சேகர மூர்த்தம் உணர்த்துகின்றது.

**"நெற்றியிற் கண்ணுடை நிமலத் தெம்பிரான்**
**உற்றவர்க் கருள்புரி கின்ற உண்மையைத்**
**தெற்றென உணர்த்தல்போல், திங்க ளின்கலை**
**கற்றையஞ் சடைமிசைக் கவின்று பூத்ததே"**

—கந்த புராணம்.

## பெரியோர் சார்பினுற் பெருமை:

தக்கவர்களைச் சார்ந்து சரண் அடைந்து வாழ்தலால், நாம் எல்லா வகையான நன்மைகளையும் எய்துதல் இயலும் என்பதனையும், சந்திர சேகர மூர்த்தம் நமக்குத் தகவுற விளக்குகின்றது. சந்திரன் தன்னியல்பால் எளியவனேயாயினும், சிவபிரானைச் சரண் அடைந்து அவர் தம் அரிய சார்பு பெற்றதனால், பலவகை நலன்களையும் படைத்து உயர்ந்தான். அளப்பரிய பெருமையை அடைந்தான். அவனை வணங்காதவர்கள் ஒருவரும் இல்லை. பெரியோர்களின் சார்பினால் நாம் எய்தும் பெருமைகட்கும் எல்லையுண்டோ?

**"பொருந்த வானுறை நாள்களை**
**நாள்தொறும் புணர்வோன்**
**அருந்த வானவர்க்கு ஆரமுது**
**அன்புடன் அளிப்போன்**
**திருந்த வானவர்க்கு அரியவன்**
**செஞ்சடை முடிமேல்**
**இருந்த வானவன் பெருமையை**
**யார்கொலோ இசைப்பார்"**

**"அந்தி ஆரண மந்திரத்து**
**அன்புடன் அவனை**
**வந்தி யாதவர் மண்ணினும்**
**வானினும் இல்லை"**

—ஸ்ரீ வில்லிபுத்தூரார்.

## ஐந்தொழில்கள்:

உயிர்கள் மாட்டுக் கொண்டுள்ள இரக்கத்தால், அவற்றின் நலங்கருதி ஐந்தொழில் இயற்றுதல், இறைவனுக் குரிய தன்மை என்பது சைவ சித்தாந்தம்.

**"போற்றி அருளுகநின்**
**ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுகநின்**
**அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றிஎல் லாஉயிர்க்கும்**
**தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றிஎல் லாஉயிர்க்கும்**
**போகமாம் பூங்கழல்கள்**
**போற்றிஎல் லாஉயிர்க்கும்**
**ஈறும் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனும்**
**காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட்**
**கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீர்**
**ஆடேலோர் எம்பாவாய்"**

என வரும் இறுதிப் பாடல், இறைவனுக் குரிய ஐந்தொழில்களைக் குறிப்பிடுகின்றன. இத்திருவெம்பாவைப் பாடலைச் **சிவப்பிரகாசம்** என்னும் சைவ சித்தாந்த சாத்திரத்தின் 18-ஆம் பாடலில் **மதுரைச் சிவப்பிரகாசர்** தம் முடைய உரையில் மேற்கோள் காட்டி, ஐந் தொழில்களின் இயல்பினை விளக்குகின்றார்.

## காத்தற் றொழில்:

சிவபெருமான் ஐந்தொழில் செய்தலை அவனது திருவுருவமே காட்டி நிற்கின்றது. **"தோடுடைய செவியன்"** எனும் தேவாரத் திருப்பாடலில் ஐந்தொழில்கள் விளக்கப் பெறுகின்றன. 'விடை ஏறி' என்பது சிருட்டி; 'தூவெண்மதி சூடி' என்பது திதி; 'காடுடைய சுடலைப்பொடி பூசி' என்பது சம்மாரம். 'உள்ளம் கவர் கள்வன்' என்பது திரோபவம்; 'மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த' என்பது அநுக்கிரகம் ஆகிய தொழில்களைக் குறிப்பதாகப் பெரியோர்கள் கூறுவர். இவற்றில் 'தூவெண் மதி சூடுதல்' ஆகிய **'சந்திர சேகர மூர்த்தம்'** காத்தற் றொழிலை யுணர்த்தி நிற்றல் ஈண்டுக் கருதி மகிழற்பாலது.

## பிறை தொழுதல்:

இங்ஙனம் சந்திரன் சிவபிரான் திருமுடியைச் சேர்ந்ததனால், அவனைத் தொழுதல் நலம் பயக்கும் என அன்பர்கள் கருதுகின்றனர். 'மணமாகாத இளம் மகளிர் பிறைச் சந்திரனைக் கண்டு தொழுதால் விரைவில் மணம் நிகழும்' என மக்கள் நம்பினர். அதனால் 'அகப் பொருள்' இலக்கண நூல்களில் **"பிறை தொழுக என்றல்"** என்பது ஒரு துறையாகவும் மைந்துள்ளது.

**"மைவார் கருங்கண்ணி செங்கரம்**
**கூப்பு. மறந்தும் மற்றைப்**
**பொய்வா னவரிற் புகாதுதன்**
**பொற்கழற் கேஅடியேன்**

உய்வான் புகஒளிர் தில்லைநின்
றோன்சடை மேலதொத்துச்
செவ்வான் அடைந்த பசுங்கதிர்
வெள்ளைச் சிறுபிறைக்கே''

என மணிவாசகர் தம் அரும்பெறல் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலின்கண் அருளிச் செய்திருத்தல், அறிந்தின்புறற்பாலது.

## பகைதீர்த்த பண்பாடு:

சந்திர சேகர மூர்த்தம் வேறோர் உண்மையினையும் விளக்குகின்றது. பெரியாராயினார், பிரிந்து பகைவராய் இருப்பாரைச் சேர்த்துப் பொருந்த வைத்து, வாழ்விக்கும் பெருந்தகைமை யுடையராவர். பாம்பிற்கும் மதிக்கும் எப்போதும் பகைமை யுண்டு. அங்ஙனம் பகைமையுடைய அவ் விரண்டையும் சிவபிரான் தமது திருச்சடை முடியிற் சேர்த்து வைத்து வாழச் செய்துள்ளார். இவ்வருஞ் செயலினையே "பாம்பும் மதியும் பகை தீர்த்தாய் போற்றி" என வியந்து சான்றோர்கள் போற்றியுள்ளனர். மேலும், சிவபிரான் ஒரு சிறந்த தவயோகி. சிவபிரான் சிறந்த ஒரு தவயோகியாகத் திகழ்தலைத் "தட்சிணாமூர்த்தம்" உணர்த்தும். அத்தகைய தவ ஆற்றல் காரணமாகவே பாம்பும் மதியும் பகை தீர்ந்து ஒன்றிச் சிவபிரான் சடையில் வாழ்கின்றது எனவும் கொள்ளலாம். மக்கள் பகையின்றி அன்பினால் ஒன்றுபட்டு வாழ்தலின் இன்றியமையாமையினைச் சந்திர சேகர மூர்த்தம் உணர்த்துகின்றது எனலாம்.

## திருச்சிற்றம்பலக் கோவையார்:

இக் கருத்தினையே வலியுறுத்தி மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையாரில், ஒரு சிறந்த இலக்கியச் சூழ்நிலையினை உருவாக்கிக் கொண்டு, நமக்குப் பயன்பட விளக்குகின்றார். தலைவன் பரத்தை வீட்டுக்குச் சென்று வந்ததனால், தலைவி ஊடல் கொண்டு தலைவனைப் புலந்து விலக்குகின்றாள். அந்நிலையில் தலைவன் தோழியின்பாற் சென்று, தம் இருவரையும் ஒற்றுமைப்படுத்தி வைக்குமாறு வேண்டுகின்றான். அக்கருத்தை விளக்குதற்கு, ஞானச் செல்வர் ஆகிய மாணிக்க வாசகர், சிவபிரான் பாம்பும் மதியும் பகை தீர்த்தாண்ட பான்மையினைக் குறிப்பிட்டு, ஒப்புயர்வற்ற நல்ல உள்ளுறை அமைத்துப் பாடி நம்மை மகிழ வைக்கின்றார்.

"கயல்வந்த கண்ணியர் கண்ணிணை
யால்,மிகு காதரத்தால்
மயல்வந்த வாட்டம் அகற்றுவி
ரதர்என்? மாமதியின்
அயல்வந்த ஆடரவு ஆடவைத்
தோன்,அம் பலம்நிலவு
புயல்வந்த மாமதில் தில்லைநன்
னாட்டுப் பொலிபவரே''

இச் செய்யுளின்கண் "மாமதியின் அயல்வந்த ஆடரவு ஆட வைத்தோன்'' என்னும் தொடரிலேயே அரிய உள்ளுறைப் பொருள் அமைந்துள்ளது:

> "மதிக்குமை தலைமகளும் அரவிற்குவமை தலை மகனும் ஈசனுக்குவமை தோழியும் என்றாக்கி, அவ்வகைத்தாகிய பாம்பையும் மதியையும் தம்மிற் பகையறுத்துச் சிவபிரான் ஒரிடத்தே விளங்கச் செய்தாற் போல, என்னுடன் அவளுக்கு உண்டாகியுள்ள வெறுப்பைத் தீர்த்து விளங்க வைத்தல், தோழியாகிய நினக்குக் கடமையாகும்''

எனத் தலைவன் தோழியை நோக்கிக் கூறுவது போல, இச் செய்யுள் இயன்றுள்ள திறம், அறிஞர்க்குப் பெரு விருந்தாகும்.

இங்ஙனம் சிவபிரான் திருமுடியிற் சந்திரன் திகழ்தலைக் கவிஞர்களும் அடியார்களும் பல வகைகளிற் கற்பனை செய்து இன்புறப் பாடி யிருக்கின்றனர். சிவபிரானின் சடையிற் கங்கையை அடுத்துச் சந்திரன் விளங்குவது, 'கடலிற் செல்லும் கப்பலைப் போல உள்ளது' என மணிவாசகர் இனிது பாடுகின்றார். "தழிச் சிறை நீரிற் பிறைக்கலம் சேர்தரு தாரவனே'' என்னும் நீத்தல் விண்ணப்பப் பாடற் பகுதி, இக்கருத்துடன் அமைந்திருத்தல் காணலாம்.

மேலும் பாம்பைக் கண்டு முன்னைய வாசனையாற் பயந்த மதியம், செய்வதறியாது திகைத்துக் கங்கை நீரிற் குதித்து மூழ்கி, ஓடி மறைந்து ஒளிந்து கொள்கின்றது எனவும் அவர் பாடுகின்றார். நின் சடை முடியில் வாழப் பெற்றும் பாம்புக்கு அஞ்சுகின்ற மதியம் போல, எளியேன் 'நின் திருவடிகளை அடையப் பெற்றும் பிறவித் துயரிற் பட்டு அலமந்து அஞ்சி வாழ்வதோ ? என்னைக் கைவிடாமற் காப்பாற்றி அருள்க !', என மணிவாசகர் இறைவனை வேண்டுகின்றார்.

"நதியடி யேற்குன் கழல்தந்
தருளவும் ஊன்கழியா
விதியது யேனை விடுதிகண்
டாய்! வெண் தலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை
பைத்துச் சுருங்க அஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக்
கும்சடை மன்னவனே."

—நீத்தல் விண்ணப்பம் 42

**காரைக்கால் அம்மையார்:**

இங்ஙனமே, கடவுளுணர்விலும் அருட்பேற்றிலும் களித்துத் திளைத்துயர்ந்த **காரைக்காலம்மையார்**, இறைவன் பிறைசூடி யிருக்கும் பெற்றியினைக் குறித்து, **நினைத்து நினைத்து** மகிழ்ந்து சுவை முதிரப் பற்பல பாடல்கள் பாடியுள்ளார்:

நேர்ந்தரவம் கொள்ளச்
சிறுகிற்றே? நீயதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய
வைத்தாயோ?—பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர
மாட்டாதோ? என்னே
இளங்குழவித் திங்கள் இது.

வடிவுடைய செங்கதிர்க்கு
மாருய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்கும்
கொல்லோ?—கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத
சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேல் திங்கள் நிலா.

**சேரமான் பெருமாள்:**

சிவபெருமான் திங்கள் சூடி யிருத்தலைக் குறித்துச் **சேரமான் பெருமாள்**, பின்வருமாறு அழகிய கற்பனை அமைத்துப் பாடுகின்றார்:

சிவபிரானின் செஞ்சடை, எரிகின்ற நெருப்பை ஒத்துளது; அந்நெருப்பை அவிக்க இமையோர் சொரிகின்ற திருப்பாற் கடல் போன்றுள்ளது கங்கை; கங்கை யாற்றிற்கு அருகிற் சடையில் இடம்பெற்றுள்ள சந்திரன், ஆற்றில் மிதந்து செல்லும் தோணியைப் போலக் காணப்படுகின்றது; தோணியைச் செலுத்துகின்ற மூங்கிற்கோல் ஆகிய கழியினைப் போல, இறைவன் தன் சடையின் மேல் உலவ விட்டுள்ள அரவுகள் இருக்கின்றன.

"எரிகின்ற தீஒத் துளசடை
ஈசற்கு; அத்தீக்கு இமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது
சூழ்புனல்; அப்புனலிற்
சரிகின்ற திங்கள்ஓர் தோணிஒக்
கின்றது;அத் தோணிஉய்ப்பான்
தெரிகின்ற திண்கழை போன்றுள
தால்,அத் திறல் அரவே."

**முடிவுரை:**

இங்ஙனம் சிறந்த அருட் கவிஞர்கள் பற்பல கற்பனைகளையும் கருத்துக்களையும் வெளியிட் டுணர்த்தும் வகையில், சிவபெருமான் "சந்திர சூடேசுவரர்" ஆக எழுந்தருளி விளக்கும் திருக் கோயில் ஒன்று, சேலம் மாவட்டத்தில் ஒசூர் என்னும் ஊரில் உள்ளது. இது பெங்களூருக்கு 25 கல் தொலைவிலுள்ளது. அக்கோயிலின் படங்கள் சில இங்குத் தரப்பட்டுள்ளன.

---

## செய்திச் சுருக்கம்

**தஞ்சை** அரண்மனை தேவஸ்தானங்களின் சார்பில், **தஞ்சைப்** பெருவுடையார் கோயிலில், திருப்பாவை திருவெம்பாவை மாநாடு, அறநிலைய ஆணையாளர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் B.A., B.L. அவர்கள் தலைமையில், டிசம்பர் 17, 18 தேதிகளில் நடைபெற்றது. ராஜஸ்ரீ ராஜாராம் ராஜாசாஹேப் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். திரு. க. வடிவேலாயுதம், M.A., திருவாசகமணி, சிவபக்தமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் B.A., B.L., நாகர்கோயில் திரு. கே. ஆறுமுக நாவலர் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர். இராஜபாளையம் நாட்டிய கலாநிதி பேபி பிரபாவதி நடனக்கலை நிகழ்ச்சி நடைபெற்றது. திரு. S. சோமசுந்தரம் B.A., B.L., அவர்கள் நன்றியுரை நவின்றார்.

# ✺ இலக்கியங்களில் இமயம் ✺

**முன்னுரை**

இமயமலையைப் பற்றிய பல குறிப்புக்கள் மிகப் பழங்காலந் தொட்டே அமிழ்தினும் இனிய நம் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கு விரவிக் காணப்படுகின்றன. "இமயம் முதல் குமரி வரை" என வழங்கி வரும் தொடர்மொழி, இன்று மட்டுமேயல்லாமல் தொன்று தொட்டே மக்களின் பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும், இனிது பயின்று வந்திருக்கின்றது.

**புறநானூறு**

வரலாற்றுச் சிறப்பு மிக்க பழந்தமிழ் இலக்கியமாகத் திகழ்வது புறநானூறு. அதன் முதற்பாடல் முரஞ்சியூர்முடிநாகராயர் என்னும் முதுபெரும் புலவரால் பாடப்பெற்றது. பாரதப் பெரும்போரில் பஞ்சபாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெருஞ்சோறு வழங்கி உதவி செய்தான் ஒரு சேர அரசன். அதனால் அவனுக்குப் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் எனப் பெயர் வழங்குவதாயிற்று. அவ்வரசன் அங்ஙனம் பெருஞ்சோறு வழங்கியதனை,

"அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது
கொடுத்தோய்!" —புறநானூறு, 1.

என்னும் புறநானூற்று வரிகள் உணர்த்துகின்றன. எனவே அவ்வரசன் பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த பழந்தமிழ் வேந்தனுவான் என்பது பெறப்படும்.

அவ் வேந்தனை வாழ்த்த முற்படும் முரஞ்சியூர் முடிநாகராயர், "பால் புளித்தாலும் பகல் இருண்டாலும், நான்கு வேதங்களின் நெறி மாறுபட்டாலும், நீ நல்ல அமைச்சர்களோடு, இமயமும் பொதியமும் போன்று அசைவு இல்லாமல், நடுக்கின்றி நெடுங்காலம் விளங்கி நலனுற வாழ்வாயாக" எனக் குறிப்பிடுகின்றார்.

"நடுக்கின்றி நிலியரோ அத்தை! அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும்
போன்றே" —புறநானூறு, 1.


இதன்கண் இமயத்தினைப் "பொற்கோட்டு இமயம்" எனச் சிறப்பித்தும்; அதன்கண் அந்தணர்கள் (முனிவர்கள்) முத்தீ வேள்விகள் நிகழ்த்த, அவற்றை விளக்காகக் கொண்டு மானினங்கள் யாதொரு கவலையும் துன்பமுமின்றி இன்பமாகத் துயிலுதலாகிய செய்தியைக் குறித்தும், அவர் பாடியிருத்தல் உணர்ந்து இன்புறுதற்குரியதாகும்.

இமயமலையைத் தமிழ்மக்கள் பண்டைக் காலத்திலேயே நாட்டின் எல்லையாக நயந்து போற்றியுள்ளனர். இமம் என்பது பனியைக் குறிக்கும். எனவே இமயம் என்பது "பனிமலை" எனத் தமிழில் வழங்கப்படும். வடக்கெல்லை இமயம், தெற்கெல்லை குமரி (கன்னியாறு) எனவும், கிழக்கு மேற்குகளில் எல்லை கடல் எனவும், பழந்தமிழ் மக்கள் பரந்த மனப்பான்மையுடன் கருதி வந்துள்ளனர்.

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின்
குடக்கும்" —புறநானூறு, 6.

எனவரும் புறநானூற்றுப் பாடற் பகுதி இவ் வுண்மையை உணர்த்தும். இதனால் இந்தியா என்னும் பெயரால் இன்று வழங்கி வரும் நாட்டின் பரப்பு முழுவதும், ஒருபகுதியாகவே கருதப் பெற்றமையினை உணரலாம்.

இவ்வுண்மையினைப் பின்வரும் பாடற் பகுதியும் வலியுறுத்துகின்றது. "யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை" என்னும் சேர வேந்தனைக் குறுங்கோழியூர் கிழார், "தென்றிசைக்கட் குமரியும் வடதிசைக்கண் இமயமும் கீழ்மேற் றிசைகளில் கடலும் எல்லையாக, நடுவுபட்டு விளங்கும் நாட்டிலுள்ளோர் ஒரு பெற்றிப்பட்டு வழி



குபேரமூர்த்தி



சூரியன்



ஓசூர்—சந்திரசூடேசுவரர் கோயில் அக்கினிமூர்த்தி



ஓசூர்—கோயில் தட்சிணாமூர்த்தி

பாடு கூற, நிலமுழுவதையும் ஆண்ட அரசர்களின் மரபைக் காத்தவனே'' எனப் புகழ்ந்து போற்றுகின்றார்.

''தென்குமரி வடபெருங்கல்
குணகுடகடல் ஆஎல்லை
குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோல்திருத்திப்
படுவதுண்டு பகல்ஆற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதுண்டோர் வழிகாவல!''

—புறநானூறு, 17.

தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் 'ஆய் அண்டிரன்' என்பவன் ஒருவன். அவ் வள்ளலைப் புகழ்ந்து போற்றும் பாடல்கள் பல புறநானூற்றில் உள்ளன. "நரந்தையையும் நறுமணம் மிக்க புல்லையும் மேய்ந்த கவரிமான், குவளைப் பூவையுடைய இனிய சுனையின் நீரைப் பருகி, அதனை அடுத்துள்ள தகர மரத்தினது குளிர்ந்த நிழலின்கண் தனது துணையாகிய பிணைமானுடன் பொருந்தி வாழும் வளஞ்சிறந்து, வானளாவி நிற்கும் இமயமலை வடதிசைக்கண் உள்ளது. அதற்கு ஏற்பத் தென்றிசைக்கண் 'ஆய் அண்டிரன்' என்னும் வள்ளலின் பெருங்குடி நிலைபெற்று விளங்குகின்றது. இல்லையேல், இந் நிலவுலகம் நிலைபிறழ்ந்து கீழ்மேலதாகிக் கெடும்'' என உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுகின்றார்.

"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி, அயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்தோய் இமயம்!
தென்றிசை ஆஅய்குடி இன்றாயிற்
பிறழ்வது மன்னேஇம் மலர்தலை யுலகே''

—புறநானூறு, 132.

ஒருவரை மற்றொருவர் உளமுவந்து வாழ்த்தும் முறைகள் பலவகைப்படும். அம் முறைகள் அனைத்தினையும் புறநானூற்றிற் காணலாம். அவற்றுள் 'நீ இமயமலை போல நீடினிது நிலைபெற்று வாழ்க!' என்பதும் ஒன்று. இதனை,

"கழைவளர் இமயம் போல
நிலீஇயர் அத்தைநீ நிலமிசை யானே''

—புறநானூறு, 166.

எனக் கவுணியன் விண்ணந்தாயன் என்பவனை, ஆவூர் மூலங்கிழார் பாடியது கொண்டு தெளியலாம்.

இவ்வாறே, "உலகத்திற் பிறந்த ஒவ்வொருவரும் புகழ்பெறல் வேண்டும். அப் புகழ்தானும் இமயமலையின் சிகரங்கள் எவ்வனம் ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்கின்றனவோ, அங்ஙனம் மிக உயர்ந்த புகழாக அமைதல் வேண்டும். அத்தகைய சிறந்த புகழினை உலகில் நிலைநாட்டி விட்டு, அதன் பின் ஒருவன் இறந்துபோதல் தலைசிறந்தது" என்னும் கருத்தமைய,

"............ இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே''

—புறநானூறு, 214.

எனக் கோப்பெருஞ் சோழன் என்னும் பேரரசன், உலக மக்களுக்கு அறிவுரை (பொருண்மொழிக் காஞ்சி) கூறுகின்றான்.

இமயமலையின் சிகரங்கள் பொன்மயமாக ஒளிமிகுந்து பேரழகுடன் திகழும் தன்மையன. ஆதலின் பண்டைச் சங்க காலப் புலவர்கள் இமயமலையினைப் "பொற்கோட்டு இமயம்'' என்னும் அடைமொழி கொடுத்து வியந்து புகழ்ந்தோதுவர். பரணர் எனப் புகழ்பெற்ற பண்டைச் சங்ககாலப் புலவர், இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில், ஓர் அழகிய உவமையினை அமைத்துப் பாடியுள்ளார். "கடல்பிறக்கு ஓட்டிய வெல்கெழு குட்டுவன்'' என்னும் சேரவேந்தனை, "மறக்கள வழி'' என்னும் புறப்பொருளின் துறை அமைய "ஏர்க்கள உருவகம்'' செய்து பரணர் பாடுகின்றார். நல்ல பெரிய சிறந்த யானைக்குப் பொன்னால் இயன்ற அழகிய நெற்றிப் பட்டம் (ஓடை) அணியப்பட்டுள்ளது. அந்நிலையில் அவ்யானையை அவர் இமயம் ஆகவும், பொன்னோடை அணியப் பெற்ற அதன் மத்தகத்தினைப் பொன்மயமாக ஒளிவீசித் திகழும் இமயமலையின் சிகரங்கள் ஆகவும், கற்பனை செய்து காண்கின்றார். இமயமலையில் அருவிகள் விழுதல்போல, யானையினிடமிருந்தும் மதநீர்சுரந்து பாய்ந்து, அவர்தம் அரிய கற்பனைக்கு ஆக்கம் அளிக்கின்றது.

"எழிலி தோயும் இமிழ்இசை அருவிப்
பொன்னுடை நெடுங்கோட்டு இமயத் தன்ன
ஓடை நுதல ஒல்குதல் அறியா... வேழம்''

—புறநானூறு, 369

## பதிற்றுப் பத்து

புறநானூற்றைப் போலவே, வரலாற்றுத் துறைக்கு மிகவும் பயன்படுவது 'பதிற்றுப்பத்து' என்னும் சங்கநூல். அது சேர நாட்டு அரசர்களின் பழைய வரலாற்றினை அறிதற்குக் கருவியாகத் திகழும் கவிதை நூல் ஆகும். அதன்கண்ணும் இமயத்தைப் பற்றிய குறிப்புக்கள் பல அமைந்து காணப்படுகின்றன.

சேர அரசர்களில் "இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்" என்பவன் ஒருவன். 'நெடுஞ்சேரல் ஆதன்' என்பது அவனது இயற்பெயர். 'இமயவரம்பன்' என்பது அவனது சிறப்பை யுணர்த்தும் பெயர். அக்கால முறைப்படி அவ்வரசன் 'திக்கு விசயம்' செய்து, இமயம்வரை சென்று வெற்றிபெற்றுத் திரும்பியவனாகி விளங்கியிருத்தல் கூடும். பெருவீரனாகப் பிறங்கிய அவ்வரசன் யானையின்மீது அமர்ந்து போருக்குப் புறப்பட்டு, இமயம் முதல் குமரிவரை எல்லா அரசர்களையும் வென்று புறங்கண்டு போந்த தன்மை, முருகப் பெருமான் 'பிணிமுகம்' என்னும் தம் யானை யூர்தியின்மீது எழுந்தருளிச் சூரபதுமன் முதலிய அவுணர்களை யெல்லாம் அழித்தருளிய செயல்போன்று இருந்தது. இதனை,

"அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு...
கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்அம் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே...
பலர்புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே!"
—பதிற்றுப்பத்து, 11.

எனக் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் குறிப்பிட்டுப் புகழ்ந்து பாடி இருத்தல் காணலாம்.

இதனால், இமய மலையானது முனிவர்கள் (ஆரியர்) வாழும் சிறப்புடையது என்பதும்; அம்முனிவர்களின் தவவலிமை மிக்க ஆணையால், முருக்கு என்னும் முள்ளுடைய மரமும் ஏனைய பிற விலங்குகளும் மக்களும் தமக்கு யாதொரு வருத்தமும் விளைவிக்க மாட்டாத நிலையில், பகற்காலத்துத் தாம் நுகர்ந்த அருவியையும் நரந்தம் புல்லையுமே கனவினும் கண்டு, கவரிமான்கள் அங்குக் கவலையின்றி இன்பமுற்று வாழ்ந்துவரும் என்பதும்; 'இமயம் முதல் குமரிவரை' என்னும் வழக்காறு மிகமிகப் பழங்காலத்திலேயே தமிழகத்தில் நிலவிவந்தது என்பதும் பிறவும், புலனாகா நிற்கும்.

"வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ"
—பதிற்றுப்பத்து, 43.

எனவரும் பதிற்றுப்பத்து நூலின் பிறிதொரு பாடற் பகுதியும், இமயம் குமரி என்பன முறையே வடக்கெல்லை தெற்கெல்லைகளாக விளங்கிய செய்தியினை வலியுறுத்தும்.

## பரிபாடல்

இமயமலை முனிவர்கள் மட்டுமேயன்றித் திருமால் சிவபிரான் பிரமதேவர் துவாதசாதித்தர் ஏகாதச ருத்திரர், அஷ்டவசுக்கள் எட்டுத்திக்குப் பாலகர்கள் மருத்துவர்இருவர் சுரர் அசுரர் ஆகிய பலரும் கூடி யுறையும் பெருமை யுடையது. இதனைப் பரிபாடல் என்னும் சங்கநூல் 'திருப்பரங்குன்றம்' என்னும் முருகனது தலத்தைப் பற்றிய பாடலிற் குறிப்பிடுகின்றது. திருப்பரங்குன்றம் முருகப்பெருமான் தெய்வயானையை மணம் புரிந்துகொண்டு மகிழ்ந்த தலம் ஆகும். அதனால் அங்கே எல்லாத் தேவர்களும் ஒருங்கு கூடி யுறைகின்றனர். ஆதலின் "பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்" எனப் பரிபாடல் பாடுகின்றது.

## பெரும்பாணாற்றுப்படை

பத்துப்பாட்டு என்னும் தொகைநூலைச் சேர்ந்தது பெரும்பாணாற்றுப்படை. அது 'கடியலூர் உருத்திரங் கண்ணனார்' என்னும் புலவரால், தொண்டைமான் இளந்திரையன் என்னும் அரசனைக் குறித்துப் பாடப்பெற்றது. அவ்வரசனின் முற்றத்திற் சிற்றரசர்கள் பலர் ஒருவரோடு ஒருவர் இகலி முந்திக்கொண்டு, திறை செலுத்துதற் பொருட்டுச் செவ்வி நோக்கிக் காத்துக்கொண்டிருக்கின்றனராம். எதுபோல என்னில், இமயமலையினின்று இழிந்து பெருகிவரும் கங்கை யாற்றின் வெள்ளம் கண்டு அஞ்சித் தப்பியோட முயலும் மக்கள், தம்மைக் கரையிற் கொண்டுபோய் உய்த்துக் காப்பாற்றுதற்கு

உதவுகின்ற ஒரே ஒரு மரத் தெப்பத்தில் இடம் பெறுதற்பொருட்டு, எங்ஙனம் போட்டியிட்டு முந்திக் கொள்ளக் காத்துக் கிடப்பரோ, அதுபோல என்கின்றார் உருத்திரங் கண்ணனார். "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" எனத் தொல்காப்பியனார் பணித்தவாறு, வேறு எதனையும் உவமையாகக் கூறாமல், உயர்ந்ததாகிய இமயமலையையும் கங்கையாற்றையுமே உருத்திரங் கண்ணனார் நினைவுகூர்ந்து உவமை கூறியிருத்தல் உணர்ந்து மகிழ்தற் குரியது.

"நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீழ் அருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்,
இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் [நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒருமரப் பாணியில் தூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு [குழீஇச்
செவ்வி பார்க்கும் திருநகர் முற்றம்"

—பெரும்பாண், 429—439.

## கலித்தொகை

சங்ககாலப் புலவர்களில் மிகவும் தலைசிறந்தவர் கபிலர் என்பவர். இலக்கண நூல்களில் ஆங்காங்குக் 'கபிலரது பாட்டு' என்னும் தொடர், ஆறும் வேற்றுமைச் செய்யுட்கிழமைக்கு உதாரணம் ஆகக் காட்டப் பெறும். அதனால் கபிலரது பாட்டின் சிறப்பை யாவரும் இனையதென எண்ணித் தெளியலாம். கபிலர் குறிஞ்சித்திணை (மலை நிலம்) பற்றிப் பாடுதலில் வல்லவர். அவர் தம் பாடல் ஒன்றில், பின்வரும் சுவைமிக்க கருத்துக் காணப்படுகிறது.

மலைநிலப் பகுதியில் வேங்கை மரங்களும் யானைகளும் மிகுந்திருக்கும். அஃது இயல்பு என்று யாவரும் உணர்வர். வேங்கை மரம் அழகிய பூக்களைப் பூத்துப் பொலிந்து விளங்கியது. அக்காட்சி, மதநீர் பெருகும் வலிமைச் செருக்கு மிக்க யானை யொன்றிற்கு அவ்வேங்கைமரத்தினை வேங்கைப் புலி என எண்ணிக் கொள்ளும் நிலையினை விளைவித்தது. புலியும் யானையும் தம்முட் பகையுடையனவாய்ப் பொருது கொள்ளும் வலிமையும் இயல்பும் கொண்டவை யாதலின், யானையானது கறுவு கொண்டு ஓடிச் சென்று வேங்கைமரத்தின் மீது மோதிப் பாய்ந்து தந்தங்களால் முட்டியது. தந்தங்களின் கூர்மையாலும் வலிமையாலும், அவைகள் வேங்கை மரத்தினுள்ளே ஆழப் பதிந்து விட்டன. அதனால் எவ்வளவு முயன்று இழுத்துப் பார்த்தும், பசிய வேங்கைமரத்தினுட் பாய்ந்துவிட்ட தன் தந்தங்களை மீண்டும் தன்பால் ஈர்த்துக் கொள்ளமுடியவில்லை. அந்நிலையில் அவ்யானை செய்வது அறியாது பிளிறிக் கதறி வருந்துகின்றது. இங்ஙனம் அக்களிறு பிளிறும் ஓசை, மலைப் பக்கங்களிலெல்லாம் எதிரொலித்து நிற்கிறது. இம் மலைநிலக் காட்சி, இராவணன் செருக்குக் கொண்டு இமயமலையைப் பெயர்த் தெடுத் தெறிய முற்பட்டுச் சென்று, சிவபிரான் தம் திருவிரலால் மிதிப்பப் பின்னர் அதன் கீழ் அகப்பட்டுக்கொண்டு நசுக்குண்டு அலறிக் கதறி அழுத நிலையினைக் கபிலர்க்கு நினைவூட்டியது. கபிலர் தாம் கண்ட காட்சியையும், அதனாற் கொண்ட அரிய நினைவினையும் பின்வரும் பாடலால் நமக்கு விளக்கியுள்ளார்.

"இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல,
உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடர்அகம் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்"

—கலித்தொகை, 38.

யானையும் இராவணனும் பட்ட பாடு, நம் அருமை இந்தியத் தாய்நாட்டின் மீது செருக்கினுற் படை யெடுத்துப் போர் தொடுத்துள்ள சீன நாட்டுச் சிதடர்களும் பட்டு வருந்தி நிற்றல், ஈண்டு நம்மனோர் நினைவுக்கு வருகின்ற தன்றோ?

## சிலப்பதிகாரம் :

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஆகிய சிலப்பதிகாரம் பற்றியும், அதனை இயற்றியருளிய அரும்பெறல் ஆசிரியர் இளங்கோ அடிகள் பற்றியும், அறியாதார் எவரும் தமிழ் நாட்டில் இரார். கோவலனும் கண்ணகியும் மாதவியும் வாழ்ந்த பூம்புகார் நகரம் பற்றிப் பாடவரும் இளங்கோ அடிகள், அந்நகரம்

பொதியமலையும் இமயமலையும் போலப் பழமை வாய்ந்தது. வளம் மிகுந்தது. நடுக்கின்றி நிலை பெறுவது. உயர்ந்த பெருமக்கள் மிகுதியாக வாழ்வது எனப்புகழ்ந்து போற்றுகின்றார்.

"பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்
பதிஎழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"
—மங்கல வாழ்த்துப் பாடல்.

கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் செல்கின்றனர். வழியில் மறையோன் ஒருவனைச் சந்திக்கின்றனர். அவனது கூற்றில் வைத்துச் சேரர் மரபைச் சேர்ந்த இளங்கோ அடிகள், பாண்டிய வேந்தர்களின் பண்பு நலங்களைப் பாராட்டி நடுவுநிலைமையுடன் புகழ்ந்து பாடுகின்றார். வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்பவன், கடல் கோள் காரணமாகத் தன்னுடைய நாட்டின் பரப்பில் இழக்க நேர்ந்த முத்தூர்க் கூற்றம் குண்டூர்க் கூற்றம் (பஃறுளி ஆறு-குமரிமலை) ஆகியவற்றிற்கு ஈடுசெய்து கொள்ளுதற் பொருட்டு, வடதிசைக் கங்கையாற்றையும் இமய மலையையும் கைக்கொண்டு அரசாண்டான். இச்செய்தியினை,

"அடியிற் றன்னளவு அரசர்க்கு உணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி"
—காடுகாண்கதை.

என இளங்கோவடிகள் பாடியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது. இங்ஙனமே செங்குட்டுவனின் தந்தை "குமரியொடு வடஇமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்" என்பதும், பிறவும் ஆகிய செய்திகளைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. இங்ஙனமே நற்றிணை (365, 369) முதலிய நூல்கள் கூறுவனவும் ஈண்டு அறிதற் குரியன.

## பெரிய புராணம்

செந்தமிழ் நாட்டின் தலை சிறந்த "தேசீய காவியம்" (National Epic) எனத் திகழும் தெய்வீகப் பெருநூல் ஆகிய பெரிய புராணம், இமயமலை பற்றித் "திருமலைச் சிறப்பு" என்னும் பகுதியில் தொடக்கத்திலேயே விளக்குகின்றது. "பொன்னின் வெண் திருநீறு புனைந்தது போல" இமயம் ஆகிய "பனிமால் வரை" திகழ்கின்றது. மேலும் அது "புண்ணியம் திரண்டுள்ளது" போலப் பொலிகின்றது. உலகம் என்னும் மணிக்கொடியில், ஏனைய எல்லாத் தலங்களும் தளிர்கள் போல இருப்ப, இமயமலையானது அக்கொடியின்மேற் பூத்துப் பொலிகின்ற ஒப்புயர்வற்ற வெண் மலர் போல விளங்குகின்றது. இமயமலையின் ஒரு பகுதியாகவே கயிலைத் திருமாமலை காட்சி தருகின்றது. அக்கயிலையாகிய வெள்ளி வெற்பின்மேல்தான், சிவபிரான் உமாதேவியாருடன் வீற்றிருந்தருள்கின்றான். அக்கயிலைக் காட்சியைத் திருநாவுக்கரசர் கண்டு மகிழ்ந்தார்.

### மூவண்ணக் காட்சி:

அக்காட்சியில் மூவகை வண்ணங்கள் திருநாவுக்கரசர்க்குத் தெரிந்தன. கயிலை (வெண்மை). உமாதேவியார் (பசுமை). சிவபிரான் (செம்மை).

"வெள்ளி வெற்பின்மேல் மரகதக்
கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவள
வெற்பென இடப்பாகம்
கொள்ளும் மாமலை யாளுடன்
கூட வீற்றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர்
வாக்கின் மன்னவனார்"

எனச் சேக்கிழார், திருநாவுக்கரசர் திருக்கயிலையிற் கண்ட மூவண்ணக் காட்சியினை அழகுற விளக்கியருள்கின்றார். இதுபோது நாமும் நம் இந்தியத் தாய்த்திரு நாட்டிற்குரிய தேசியக் கொடியின் (National Flag) மூவண்ணக் காட்சியினையே, இமய மால்வரையில் என்றென்றும் காண விரும்புகின்றோம். சேக்கிழார் பெருமானின் திருப்பாடல், அவ்வுணர்வினையே ஒருவகையில் நம்பாற் சிறப்புறத் தூண்டி எழுப்பி வளர்க்கத் துணை புரிகின்றது.

## சுந்தரர் தேவாரம்

இமயமலை அல்லது கயிலாயம் "நொடித்தான்மலை" எனவும் பெயர்பெறும். நொடித்தல்-அழித்தல். நொடித்தான்-அழிப்பவன், சம்ஹாரமூர்த்தி, உருத்திரன், சிவபிரான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில்

"திருநொடித்தான் மலைத் திருப்பதிகம்" என ஒன்று இருத்தல் காணலாம். தீமைகளை எல்லாம் அழித்து நலம் விளைப்பவன் சிவ பெருமான். எனவே, அப்பெருமானுக்கு "நொடித்தான்" என்பதும் ஒரு பெயர். எனவே, அப் பெருமான், சீனர்களின் தீய குறும்புச் செயல்களையெல்லாம் அழித்து, நம் நாட்டிற்கு எல்லா நலங்களும் விளைத்தருள் புரிதல் திண்ணம் என்பது, சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழங்கிய செந்தமிழ்ப் பெயரால் தெளியப்படும்.

முடிவுரை

இங்ஙனம், நம் இலக்கியங்களில் இமயம் பற்றி ஆங்காங்கு வரும் செய்திகள் பலவும், நம்மனோர் நன்கினிது உணர்ந்து சுவைத்து மகிழ்ந்து பயன்பெறுதற் குரியன ஆகும்.

"மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநிலம் மீதுஇது போற்பிறிது இலையே"
—பாரதியார்.

---

## ஆணையாளர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

1. காஞ்சிபுரம் திருக்கயிலாசநாதர் கோயில், தங்கத் திருநீற்றுப்பட்டம் அணிவிழா 12—12—62.

2. இளையனூர்வேலூர்ப் பாலசுப்பிரமணியசுவாமி கோயில், குடிநீர்த் தொட்டிக்கு அடிக்கல் நாட்டுவிழா 13—12—62.

3. மாகறல் திருமாகறலீசுவரர் கோயில், இராசகோபுரத் திருப்பணிக்குச் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டுவிழா, பன்னிருதிருமுறை அமைப்பு விழா 13—12—62.

4. மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயில், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 16—12—62.

5. கண்டியூர்ப் பிரமசிரக்கண்டீசுவரர் கோயில், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 17—12—62.

6. தஞ்சாவூர் அரண்மனைக் கோயில்கள், திருவெம்பாவை—திருப்பாவை மாநாடு 17, 18—12—62.

7. பாபநாசம் ஸ்ரீ 108 சிவலிங்க ஆலயம், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 18—12—62.

8. தஞ்சாவூர்ப் பங்காரு காமாட்சியம்மன் கோயில், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 19—12—62.

9. திருவாரூர்த் தியாகராஜசுவாமி கோயில், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 20—12—62.

10. கீழ்வேளூர்க் கேடிலியப்பர் கோயில், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 20—12—62.

11. தொட்டியம் அனலாடீசுவரர் கோயில், திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு 21—12—62.

# * திருவாதிரைச் சிறப்பு *

**முன்னுரை :**

சிவநேயச் செல்வர்களுக்குத் திருவாதிரை என்பது மிகவும் சிறப்புடைய ஒரு பெருந் திருநாள் ஆகும். திருமாலுக்குத் திருவோணம் சிறந்த நாள் எனத் திகழ்வது போல, சிவபெருமானுக்குச் சிறந்தநாள் எனத் திகழ்வது திருவாதிரை ஆகும்.

**திருஞானசம்பந்தர் :**

சிவநெறித் தலைவர் ஆகிய 'திருஞான சம்பந்தர்' திருவவதாரம் செய்தருளிய நாள், திருவாதிரையே யாம். இதனை,

" அருக்கன்முதற் கோள் அனைத்தும்
அழகியஉச் சங்களிலே
பெருக்கவலி யுடன்நிற்கப்
பேணியநல் ஓரைஎழத்
திருக்கிளரும் ஆதிரைநாள்
திசைவிளங்கிப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல்
வைதிகமும் தழைத்தோங்க... "

—பெரியபுராணம்

என ஆசிரியர் சேக்கிழார் பெருமான், சிறந்தெடுத்துக் கூறுதல் கொண்டு தெளியலாம்.

**சேக்கிழார் :**

திருஞானசம்பந்தர் திருவாதிரையில் திருவவதாரம் செய்தது மட்டுமே யன்றி, அவர் சிவஞானப்பால் ஊட்டப் பெற்ற திருநாளும் திருவாதிரையே ஆகும். அன்றியும், ஆசிரியர் தாம் இயற்றியருளிய பெரிய புராணத்தினை அரங்கேற்றம் செய்யத் தொடங்கியதும், பின்னர் அதனை அரங்கேற்றம் செய்து முடித்ததும் கூடத் திருவாதிரைத் திருநாளே என்று உமாபதிசிவம் உணர்த்துகின்றார்.

"ஆளுடைய பிள்ளையார்
அவதரித்த நாளும்,
அவர் அழுது சிவஞானம்
அமுது செய்த நாளும்
தோளுடைஆ திரைநாளாம்..."

"சித்திரைஆ திரைநாள்
தொடங்கி எதிர் ஆம் ஆண்டு
சித்திரை ஆ திரையின்
நாளுடைய கதைமுடிப்பம்
எனக்குன்றை வேந்தர்
நடந்த அனை வரும் இருந்து
கேட்டனர் நாள்தோறும்''

—திருத்தொண்டர் புராண வரலாறு

**ஐந்தொழில் நிகழ்ச்சி :**

திருவாதிரை சிவபிரானுக்கு உரிய சிறந்தநாள். அந்நாளில்தான், அப் பெருமான் உயிர்களின் நலங்கருதி ஐந்தொழில்களை இயற்றத் திருவுருவம் கொண்டான். ஒரு தொழிலைச் செவ்விதிற் செய்து முடிக்க விரும்புவோர், வைகறையில் எழுந்து, நல்ல வேளையில் அதனைத் தொடங்குவர். மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறையாகத் திகழும் மாட்சிமை மிக்கது. எனவே, அம்மாதத்தின் சிறந்த நாள் ஆகிய நல்ல வேளையில், உயிர்களெல்லாம் உய்ந்து நலம் பெறற் பொருட்டு, ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியங்)களையும் இயற்றத் திருவுளங் கொண்டு தலைப்படுகின்றான். இக் கருத்திலேயே, சிவாலயங்களி லெல்லாம் திருவாதிரைத் திருநாளில் " பஞ்ச கிருத்திய உற்சவம்'' (ஆருத்ரா தரிசனம்) நடத்தப் பெறுகின்றது.

**திருவெம்பாவை :**

திருவாதிரைத் திருநாளில், இறைவன் ஐந்தொழில் இயற்றத் திருவுருவம் கொள்ளுகின்றான் என்னும் கருத்துப் பற்றியே, மாணிக்கவாசகர் தாம் இயற்றிய "மார்கழி நீராடற் பாட்டு" ஆகிய திருவெம்பாவையின் இறுதிப் பாடலில், இறைவன் நிகழ்த்தியருளும் ஐந்தொழில்களையும் குறிப்பிட்டு, அவைவிற்றை நிகழ்த்தும் இறைவனின் ஆற்றலாகிய திருவடிகளைப் போற்றி வழுத்தித் தமது பாடலை முடித்தருளியுள்ளார்.

**திருவாரூர் :**

இத்தகைய பல பெருஞ் சிறப்புக்களெல்லாம் இனிது உடையதாதல் பற்றியே, தொன்று தொட்டுத் தமிழ்நாட்டில் திருவா

திரைத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினை எல்லாம் கூறித் தெரிவிக்கும் முறையில் அமைந்துள்ள "முத்துவிதானம் மணிப்பொற்கவரி" எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரத் திருப்பதிகம், இவ்வுண்மைக்குச் சான்று பகரும். திருவாரூரில் மட்டுமே யன்றித் தமிழ்நாட்டில் எல்லா ஊர்களிலுமே திருவாதிரை விழாக் கொண்டாடப்பெற்ற செய்தியினை,

"ஒருர் ஒழியாது உலகம்
எங்கும் எடுத்தேத்தும்
ஆரூரன் ஆதிரை
நாளால் அதுவண்ணம்"

**திருமயிலை :**

திருஞானசம்பந்தர் சென்னைத் திருமயிலைக் கபாலீச்சுரத்தின்கண் மாதந்தோறும் நிகழும் விழாக்களாகக் குறிப்பிடுவனவற்றுள், திருவாதிரை விழாவும் ஒன்றாகத் திகழ்தல் காணலாம்.

"ஊர்திரை வேலை
உலாவும் உயர் மயிலைக்
கூர்தரு வேல்வல்லார்
கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக்
கபாலீச் சுரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே
போதியோ பூம்பாவாய்"

இதனால் ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்பே திருவாதிரை விழா நாடெங்கணும் நிகழ்ந்து வந்த செய்தி தெளியப்படும்.

**சேந்தனார் வரலாறு :**

இனி திருவாதிரை விழாவோடு, திருவிசைப்பா திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் வரலாறும் தொடர்பு பெற்றுள்ளது. 'சேந்தன்' என்னும் பெயரிற் பலர் பல்வேறு காலத்து வாழ்ந்துள்ளனர். அவர்களுள் இங்குக் குறிப்பிடப் பெறுபவர் பட்டினத்தடிகள் காலத்தில் வாழ்ந்தவரும், அவருக்கு மிக நெருங்கிய துணைவரும் ஆக இருந்தவர். பட்டினத்தடிகள் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட பிறகு, இவரும் உலகியல் வாழ்விற் பற்று அற்றவராய்த் தில்லையை அடைந்து, அங்கு விறகு வெட்டிப் பிழைக்கும் தொழிலைத் தாமே விரும்பி மேற்கொண்டு, அதனாற் கிடைத்த சிறு பொருள் கொண்டு, சிவனடியார்களுக்குத் திருவமுது செய்வித்துத் தாமும் உண்டு வாழ்ந்து வந்தார்,

இவர்தம் உயர்ந்த மனநிலையினையும், உண்மைப் பத்தியுணர்வினையும் உலகமக்களுக் கெல்லாம் உணர்த்த, இறைவன் திருவுளங் கொண்டான். ஒரு நாள் நள்ளிரவிற் காலங்கடந்த நிலையில், இறைவன் ஓர் அடியவரைப் போல வேடங் கொண்டு சென்று, சேந்தனாரை அடைந்து, தமது பசியை நீக்க ஏதேனும் உணவு தருமாறு வேண்டினார். அந்நள்ளிரவிற் சேந்தனார், ஒரு கந்தையில் தாம் முடித்து வைத்திருந்த களியுணவினை அவருக்குப் பரிந்து வழங்கினார். அந்நிகழ்ச்சியினை யாவரும் அறிதற் பொருட்டுத் தில்லைக் கூத்தப் பெருமான், தமது திருமேனியிலும், திருக்கோயிலிற் பல இடங்களிலும் அக் களியுணவு சிதறிக் கிடக்குமாறு செய்தருளினார். அது பற்றியே, திருவாதிரைத் திருவிழாவிற் கூத்தப்பெருமானுக்குக் களியுணவு படைக்கும் வழக்கம் ஏற்படுவதாயிற்று.

**திருக்களிற்றுப் படியார் :**

சேந்தனார் சிவபிரானுக்குக் களியமுது வழங்கிய செய்தியினைச் சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய திருக்களிற்றுப் படியார் என்னும் நூலில், அதனை இயற்றியருளிய திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் பின்வரும் பாடலிற் குறிப்பிடுகின்றார்.

"அவிழ்ந்த துணியில் அவிழ்ந்த அவிழை
அவிழ்ந்த மனத்தால் அவிழ்க்க அவிழ்ந்த [சடை
வேந்தனார்க் கின்னமுதம் ஆயிற்றே [மெய்யன்பிற்
சேந்தனார் செய்த செயல்"

**வானநூல் ஆராய்ச்சி :**

பண்டைத் தமிழ் மக்கள் வானநூல் ஆராய்ச்சியில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். அதனை விளக்கும் சான்றுகள் பல, தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றன. திருவாதிரை விழாவும் அவற்றுள் ஒரு சான்று ஆகும் எனலாம்.

இரவு நேரங்களில், வானத்தில் எண்ணில்லாத விண்மீன்கள் ஒளிர்ந்து கொண்டிருத்தலை நாம் காண்கின்றோம். பொதுவாக நம்முடைய வெறுங் கண்ணுக்குத் தெரிவன

(Visible to the naked eye) ஏறத்தாழ 3000 விண்மீன்களே யாகும். ஒவ்வொரு விண்மீனும் நாம் வாழும் இந்நிலவுலகத்தை விட, எத்துணையோ ஆயிரம் மடங்கு பெரிய தாகும். சூரியன் நம் மண்ணுலகத்தினின்று 93,000,000 மைல் தொலைவில் இருக்கின்றது. இச் சூரியனைவிட எத்துணையோ மடங்கு தொலைவில், விண்மீன்கள் வானத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நமக்கு மிக அணித்தாக இருக்கும் விண்மீனின் தொலைவே, 25,500,000,000,000 மைல்கள் ஆகும் எனின், மிகமிக நெடுஞ்சேய்மையில் உள்ள விண்மீன்களின் தொலைவு எங்ஙனம் இருக்கும் என்பதனை ஓரளவு கருதி யுணர்ந்து கொள்ளலாம். ஒளியானது ஒரு நொடி (One second) நேரத்தில் 186,000 மைல் விரைந்து செல்லும் தன்மையுடையது. அத்துணை விரைவு பெற்றிருந்தும், சில விண்மீன்களின் ஒளிக்கதிர்கள் இந்நிலவுலகத்தை அடைய, எத்துணையோ ஒளி ஆண்டுகள் (Light years) ஆகின்றன. இத்தகைய விண்மீன்கள் சுமார் நூறு ஆயிரம்மில்லியன் மில்லியன்கள் (100,000,000,000,000,000,000) இருப்பதாக அறிஞர்கள் ஆராய்ந்து கூறுகின்றனர். இத்துணை விண்மீன்களும் தம்முள் ஒன்றிற்கொன்று 1800000 ஒளியாண்டுகளின் தொலைவில் உள்ளன. இந்நில வுலகத்திற்கு 500 மில்லியன் ஒளியாண்டுகளின் தொலைவிலும், பல விண்மீன்கள் இருக்கின்றன. சூரியனைவிட 28 மடங்கு ஒளி மிகுந்தது சிரியஸ் (Sirius); 50 மடங்கு மிகுந்தது (Vega); 100 மடங்கு மிகுந்தது ஆர்க்டரஸ் (Arcturus); 10000 மடங்கு ஒளிமிகுந்தது கேனோபஸ் (Canopus); அதனினும் ஒளி மிகுந்தது ரிகல் (Rigel).

* "To our present knowledge, there exist approximately a thousand million separate star-worlds, each comprising something like one hundred thousand million (*100,000,000,000*) stars, and many more beyond our range of vision.

This means that, within our range of vision, there seem to exist about one hundred thousand millions of millions of stars; that is to say, a number represented by one with twenty zeros (*100,000,000,000,000,000,000*); and there may exist many more beyond our range of vision."

Those thousand million star-worlds are said to be *1,800,000* light years distant from one another, and the most distant is said to be *500* million light years away from us.

And yet their millions of whirling suns are all poised and regulated in their motions through space by fixed laws of attraction keeping them in their orbits through space.

—Sir Harold Spencer Jones.

## திருவாதிரை நட்சத்திரம் :

இத்தகைய விண்மீன் தொகுதிகள் (Constellations) பலவற்றையும், பண்டைத் தமிழ் மக்கள் ஓரளவு நன்கு அறிந்து வைத்திருந்தனர். சிறப்பாகத் திருவாதிரை நட்சத்திரம் பற்றி அவர்கள் நன்கறிந்திருந்தனர். அது மஞ்சள் கலந்த செம்மை நிறம் (Yellowsh-red) உடையது. எனவே சிவபிரானின் பொன்நிறம்-செந்நிறம் ஆகியவற்றைத் தமிழ் மக்கள் அதனோடு இயைபுறுத்தினர். திருவாதிரை ஒரு தனி நட்சத்திரம் அன்று, பல நட்சத்திரங்களைத் தன்னகத்தே கொண்டது (Multiple-star). அத்தன்மை, சிவபிரானின் எண்டோள் முதலியவற்றிற்கு ஏற்பப் பொருந்தியுள்ளது. இவையன்றியும், திருவாதிரையானது சில சமயங்களில் மேலும், சிலசமயங்களிற் கீழும் மாறிமாறி இயங்கிச் செல்லும் தன்மை வாய்ந்தது. அது சிவபிரான் செய்யும் திருநடனத்திற்கு ஒப்புமையுடைய தாயிற்று. இம்மட்டோ! திருவாதிரையானது பேரொளி மிக்குத் திகழும் ஒரு சில விண்மீன்களுள் தலை சிறந்தது (The brightest star in the constellation Orion). அதுவும் "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி' ஆகிய சிவபெருமானின் சிறப்பியல்பை விளக்கும் நிலையில் அமைந்துள்ளது.

## ஆதிரையான் :

எனவேதான், திருவாதிரையைச் சிவபிரானோடு தொடர்புறுத்தி, அதனைச் சிவபிரானுக்கு உரிய திருநட்சத்திரமாகத் தமிழ் மக்கள் போற்றிவரத் தலைப்படுவாராயினர். சிவபெருமானுக்கும் "ஆதிரையான்" "ஆதிரை நாள் உகந்தான்" எனப் பல பெயர்கள் வழங்குவனவாயின.

## முத்தொள்ளாயிரம் :


கவிதைச் சுவை ததும்பும் செந்தமிழ் நூல் ஆகிய முத்தொள்ளாயிரம் என்னும் நூலின் ஒருபாடல், "சிவபிரான் ஞாயிறு திங்

கள் விண்மீன்கள் எண்ணில்லாத உலகங்கள் ஆகியவற்றைப் படைத்துக் காத்து வருகின்றான். அவன் படைத்த விண்மீன்கள் எண்ணில்லாதனவாக இருக்க, அவற்றுள் ஒன்றனை மட்டும் உட்கொண்டு, அப்பெருமானை இவ்வுலகம் "ஆதிரையான்" "ஆதிரையான்" என்று புகழ்ந்து கொண்டாடுகின்றதே! இஃது என்ன வியப்பு?' என்னும் கருத்தமைய இயன்றுள்ளது. திருவாதிரையின் சிறப்பினை மிகவும் வியந்து போற்றியே, அப்பாடல் அங்ஙனம் விம்மிதம் எய்துகின்றது.

முடிவுரை:

அத்தகைய பெருஞ் சிறப்பு மிக்க திருவாதிரை நாளில், நாம் அனைவரும் இறைவனை வழிபட்டு உய்ய முயலுவோமாக!

"சிலையா மதியின் வைகறையில்
தினமும் பூசை இயற்றுவோர்
தொலையா மலமும் துமிய அருட்
டுறையிற் குளிப்பர்; அம்மதியின்
நிலைஆ திரையின் நெய்யாட்டி
நிகரில் கலவை இனிதணிவோர்
அலையா தருளிற் கலந்தின்ப
ஆழி படிவர் அக்கணமே"



ஆடவல்லான், தஞ்சைப் பெரியகோயில்

மன்னும் கனலி மதிநாண்மீன் என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனை—இன்னமும்
ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

—முத்தொள்ளாயிரம்.

---

## ஆழ்வார் திருநாட்கள்

(※)

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | ... | ஜனவரி | | |
| 29 | ... | 13 | ... | திருமழிசையாழ்வார். |
| தை | | | | |
| 3 | ... | 16 | ... | தேவர் பெருமாள், கூரத்தாழ்வார். |
| | | பிப்ரவரி | | |
| 22 | ... | 4 | ... | திருக்கச்சி நம்பிகள். |

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி]

"பெரிய பெருமாள் உயிர் நிலையை அறிந்து செல்லும் பாண் பெருமாள் திருவுருவமே தமக்குப் பற்றுக்கோடும், பற்றும் பொருளும் (உபாய உபேயம்)" என்று ஆளவந்தார் அருளக் கேட்ட திருவரங்கப் பெருமாள் அரையர், ஆளவந்தார் திருவடிகளிலே வணங்கி நாத் தழுதழுக்க "ஸ்வாமி அப்படியாயின் தேவரீர் மீள்கிலா உலகம்புக்கு அங்கே பரமபதநாதனை வைத்தகண் இமையாதே சேவித்து இருக்கத் திருவுள்ளம் பற்றினீரோ" என்று விண்ணப்பித்தார். ஆளவந்தார் அவரை நோக்கி, "நீர் பிறர் பேற்றுக்கு மகிழ்ந்து, அவ்வுறுதி பூண்டவராய் இரும்" என்று கூறி மேலும் அவரை நோக்கி "ஒருவன் ஒரு பிரபந்நன் ஆகையில் எம்பெருமான் வயமான ஆன்ம யாத்திரையிலும், கர்ம வசமான தேக யாத்திரையிலும் (வாழ்க்கையிலும்), தனக்கு ஒரு தொடர்பு (ஸம்பந்தம்) உண்டு" என்று இருந்தானாகில், அவன் பிரபந்நன் என்ற முறையில், ஆன்மாவை இறைவனுக்குக் காணிக்கையாக வைத்தநிலை குலைந்து, நாத்திகனாகி விடுவான். அதனால் ஒருவனுக்கு இரண்டு யாத்திரையிலும் தன் முயற்சி என்பது முக்கரணங்களிலும் இருத்தல் தகாது; நாராயணனுக்கு ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்வதுதான் சொரூபம்; எம்பெருமான் தன் பக்கலில் "நம:" என்று உரையாதவர்களுக்கும் கூட "வானவர் நாட்டையும் நீ கண்டுகொள்" என்று அருளுகின்ற சிறந்த வள்ளன்மை ஒன்று அவனிடம் உண்டு; நாரங்களுக்கு (ஆன்மாக்களுக்கு) "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்கிறபடி கவலையொழித்திராமல் தனக்குப் பேறு கிடைக்க வேண்டும் என்று ஆத்திரப்படுகையும் ஆன்மாவின் உண்மைத் தன்மைக்குக் கேடாகும். எம்பெருமான் ரக்ஷகன் (காப்பாற்றுபவன்) என்று இருப்பதும் ஆன்மாவின் தன்மைக்குப் பொருந்தாததாகும். இந் நிலைகளை விட்டு நம்பேற்றுக்கு அவனன்றி வேறொரு முயற்சி தேவை என்று இருந்தால், எம்பெருமானுக்கேயன்றிப் பிறனுக்குரியனில்லாத்தன்மை (அநந்யார்ஹ சேஷத்வம்) என்ற நிலையோடு மாறுபடும். எம்பெருமான் ரக்ஷகன் என்று எண்ணம் இல்லாமல் போனால், நாம் உடைமை அவன் உடையான் என்ற நிலையோடு மாறுபடும்." என்று கூறினர். முதலிகள் "எங்களுக்கு எளிதாகப் பற்றும் உபாயம் எது? என்று கேட்க, அவரும் நீங்கள் ஆசாரியனாகிய என்னையே பற்றி இருங்கள் என்று கூறுவது என்னுடைய ஆன்மத் தன்மைக்குச் சேராது. ஆகையால் "எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே" என்பதனையே உங்களுக்கு உபாயமாகவும் உபேயமாகவும் அறிந்து வாழ்வீர்களாக என்று அருளிச் செய்தார். முதலிகள் மிகவும் மனம் கலங்கினவர்களாய் அவர் அருகே நிற்க, ஆளவந்தார் நீங்கள் இவ்விதம் சோகம் மல்க விழிக்க வேண்டாம். உங்களுக்குத் திருமந்திரார்த்தம் போக மண்டபம்; சரமச் லோகார்த்தம் புஷ்ப மண்டபம்; மந்த்ரரத்நார்த்தம் (த்வயார்த்தம்) தியாக மண்டபம். இவ்வுண்மையை விளக்குபவர்கள் பாண்பெருமாள் முதலியோர் ஆவர் என்று அருளிச் செய்தார்.

அவர் கூறியவற்றை யெல்லாம் உள்ளத்திலே தேக்கிக் கொண்டு திருவரங்கப் பெருமாளரையர், ஆளவந்தாரை நோக்கி "ஸ்வாமி தேவரீர் அவதரித்த காரியம் தலைக்கட்டி விட்டது என்று மீண்டு எழுந்தருளினீரானால், பின்னால் இந்த சித்தாந்தத்தில் புழுப்பூச்சி நிலையில் உள்ள எங்களுக்கு நிலை என்ன! என்று விண்ணப்பிக்க, ஆளவந்தாரும் அதைக் கேட்டும் கேளாதது போல் பதிலுரையாமல் இருந்துவிட்டார். நம்பிகள் இருவரும் இதைக் கண்டு ஆளவந்தார் தம்மை விட்டுப் பிரிந்தால் தாங்களும் உயிர் விட்டுவிடுவது என்று உறுதி பூண்டனர்.

மறுநாள் பெரிய நம்பிகளும், திருக்கோட்டியூர் நம்பிகளும் பெரிய பெருமாள் சன்னிதிக்குச் சென்ற பொழுது பெரிய பெருமாள் அர்ச்சகர் மூலமாக அவர்கள் இருவரையும் விளித்து "நீங்கள் பிரதிக்ஞை பண்ணிக்

கொண்டதை அறிந்தோம். நம் ஆளவந்தார் பிரிவில் நீங்கள் ஏதேனும் மதிமயங்கிச் செய்தல் கூடாது என்பது நமது ஆணை" என்று கூறி, திருவரங்கப் பெருமாளரையரை விளித்து "நீர் இவர்களைக் கண்காணித்துக் கொள்ளும்" என்று கூறி நம்பிகள் இருவரையும் அவர் கையில் ஒப்படைத்தார். அரையரும் அவ்விருவரையும் கைபிடித் தழைத்துக் கொண்டு நேரே ஆளவந்தாரிடம் சென்று நடந்தவற்றை விண்ணப்பம் செய்தார். ஆளவந்தாரும் "நமக்கு ஒரு பேறு கிடைக்கப் பொருதவர்கள் ஆற்றிடைக் குறையிலே அரவணைமேல் பள்ளிகொண்டருளும் அரங்க நகரப்பன் ஆராதனம் கொள்வதைப் பொருதவர்கள்தான். நம் பிரிவில் மதிமயங்கினீர்களாகில் ஸ்ரீ உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி முதலான பெரிய பெருமாள் உகந்த முதலிகள், நம் சடகோபன் ஆகிய இவர்கள் திருவுள்ளத்தை மறுத்தவர்கள் ஆவீர்கள் என்று அறிவுறுத்த, அவர்களும் சற்றே உள்ளம் தேறி இருந்தார்கள்.

ஆளவந்தாருக்கு உடலிலே ஒரு கால் பிளவை நோய் வந்தது. அதன் காரணமாக அவர் தம்முடைய நித்திய காலக்ஷேப கோஷ்டிகளை நடத்துவதில் சிரமப்பட்டார். ஒருநாள் பெரிய பெருமாள் ஸன்னிதியிலே இந்நோயினால் பெருமாள் கைங்கர்யம் செவ்வனே நடத்த முடிகிறதில்லையே என்று உள்ளத்திலே ஆளவந்தார் எண்ணமிடப் பெருமாளும் உமது நோயை உமது கோஷ்டியிலுள்ளார் எவரேனும் வாங்கிக் கொள்வார்களா என்று பாருமே என்று அசரீரியாகக் கூறினார். மறு நாள் கோஷ்டியில் ஆளவந்தார் தமக்கும் பெருமாளுக்கும் இடையே நிகழ்ந்தவற்றைக் கூறி, உங்களில் யாரேனும் இந்த நோயைச் சிலகாலம் என்னிடமிருந்து ஏற்றுக்கொள்வாருண்டோ என்று கேட்டார். கோஷ்டியிலே எல்லா இனத்தைச் சார்ந்தவர்களும் இருந்தனர். மாறனேர் நம்பி என்ற, அக்காலத்தே தீண்டத் தகாத இனத்தைச் சார்ந்த, ஒருவர், கோஷ்டியில் வழக்கம் போல் சற்று எட்ட நின்றுகொண்டிருந்தார். ஆளவந்தார் கேள்வி கோஷ்டியில் உள்ளார் அனைவரையும் ஒரு கணம் திகைக்க வைத்துவிட்டது. அத் திகைப்பினின்று பிறர் தெளிவடையும் முன்னே மாறனேர் நம்பி "அடியேனுக்கு அப்பிரஸாதம் வேண்டும்" என்று கூறினார்.

அனைவரும் (ஆளவந்தார் உட்பட) குரல் வந்த திசையை நோக்கினர். மாறனேர் நம்பி வணங்கிய தலையும், கூப்பிய கையுமாய் நின்றுகொண்டிருந்தார். ஆளவந்தார் மனம் பூரித்தவராய் அவரை யருகே அழைத்தார்: மாறனேர் நம்பியும் அந்தக் கோஷ்டி நடுவே கூசிக் கூசிச் சென்று ஆளவந்தார் முன்பே அடிவணங்கி நின்றார். ஆளவந்தார் கனிந்த உள்ளத்தோடும் கருணை தேக்கிடும் நோக்கோடும் மாறனேர் நம்பியை நோக்கி "நம்முடைய கோஷ்டியிலே நீர் ஏன் எட்ட நின்றீர்?" என்று கேட்டார். மாறனேர் நம்பி "பிறப்பினியல்பிலே எழுந்த தாழ்மை மனப்பான்மையே மன்னிக்கவேண்டும்" என்று பதிலுரைத்தார். ஆளவந்தார் நித்யமான ஆத்ம உஜ்ஜீவனத்தை ஆராயும் இந்தக் கோஷ்டியிலே அநித்யமான தேகத்தோடு மட்டும் ஒட்டிய உயர்வு தாழ்வுகளுக்கு இடமேது? நம்பி! சரி! இப்போது நீர் வேண்டிக்கொண்டீரே, கிடைக்கும் பிரசாதம் எத்தன்மையது என்று தெரிந்து கொண்டுதான் வேண்டினீரா? என்று வினவினார். மாறனேர் நம்பி நன்றாகத் தெரிந்துதான் வேண்டினேன் சுவாமி! நான் ஒருவன் இதைப் பெற்றுக் கொள்வதனால் தேவரீருக்கு உபாதை நீங்குவது ஒன்று. உயர்ந்த பகவத் கைங்கர்யமான இந்த காலக்ஷேப கோஷ்டி தடையின்றி செவ்வனே நடைபெறும் என்பது மற்றொன்று. இவ்விரண்டு நன்மைகளும் ஏற்படும் என்று உணர்ந்துதான் பெரிய பெருமாளை உளத்தே நினைந்து அடியேன் இதை ஏற்றுக்கொள்கிறேன் என்று விடையிறுத்தார். ஆளவந்தார் இப்படியும் பிறர் நன்மைக்காகத் தன்னைத் தியாகம் செய்துகொள்ளும் ஒரு பாகவதனா! என்று உளம் பூரித்தார். கோஷ்டியிலுள்ளார் அனைவரும் அவருக்கு ஏற்பட்ட பக்குவ நிலை நமக்கு ஏற்படவில்லையே என்று ஏக்கமும் வெட்கமும் கொண்டனர். இந் நிகழ்ச்சிக்குப் பின் ஆளவந்தாரைப் பற்றிய நோய் மாறனேர் நம்பியைப் பற்றியது. ஆளவந்தார் தெளிவடைந்தார். இப்பொழுது எப்பெருமான் நம்பிகள் இருவரும் பெருமாள் சன்னிதிக்குப் போயிருந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எண்ணி ஆளவந்தார் பெருமாள் தம்மை அவர் பக்கல் அழைத்துக் கொள்ளத் திருவுள்ளம் பற்றிவிட்டார் என்ற உண்மையை மகிழ்ச்சியோடு உணர்ந்தார்.

(தொடரும்)

# மலைநாட்டுத் திருப்பதி யநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மலைநாட்டில் தலைமைபெற்ற திருவனந்தபுரத் திருப்பதிக்குத் திருவாய் மொழியில் நம்மாழ்வாருடைய பதிகமொன்றே பாடலென்று தெரிவித்து (10-2.) 'கெடுமிடராய வெல்லாம்' என்னும் பதிகத்தில் நான்கு செய்யுள்கள் முன்னிதழில் விவரிக்கப்பட்டன. ஐந்து முதலிய செய்யுட்களை விவரிப்போமிங்கு.

**புண்ணியஞ் செய்து நல்ல**
**புனலொடு மலர்கள் தூவி**
**எண்ணுமி னெந்தை நாமம்**
**இப்பிறப் பறுக்கு மப்பால்**
**திண்ணம் நாமறியச் சொன்னோம்**
**செறி பொழி லனந்தபுரத்**
**தண்ணலார் கமல பாதம்**
**அணுகுவார் அமர ராவார்.** (5)

பக்தி கொண்டு நல்ல தீர்த்தத்தையும் பூக்களையும் பணிமாறிப் பற்பநாபப் பெருமானுடைய திருநாமங்களைச் சிந்தை செய்யுங்கள். அப்படிச் செய்யு மளவில் அப்பெருமான் இக்கொடிய ஸம்ஸாரத்தைத் தொலைத்தருள்வன். மேலும் செறிந்த சோலைகளையுடைய திருவனந்தபுரத்திலே ஸ்வாமியின் திருவடித் தாமரைகளைக் கிட்டுமவர்கள் நித்ய ஸூரிகளோ டொப்பர். இதனை நாம் திடமாகத் தெரிவித்தோம் — என்பது பதப்பொருள்.

இனி விசேஷார்த்தம் கேளீர்.

"புண்ணியம் செய்து' என்று பொதுவாகச் சொல்லப்பட் டிருந்தாலும் சிறப்புப் பொருள் கொள்ள வேண்டும். பக்தியை இங்குப் புண்ணிய மென்கிறது. புண்ணியத்தின் பயனாக (அதாவது) பல்வகைப் பிறப்புக்களிலே அனுட்டித்த பலவிதமான புண்ணியங்களின் பலனாக பக்தி விளையக் கூடியதாதலால் காரியவாகு பெயர் என்க. திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் "ஒன்றி நின்று நல்தவஞ் செய்து ஊழியூழி தோறெலாம், நின்று நின்றவன் குணங்களுள்ளி யுள்ளம் தூயராய், சென்று சென்று தேவ தேவர் உம்பரும்ப ரும்பராய், அன்றி யெங்கள் செங்கண்மாலை யாவர்காண வல்லரே?" என்றருளிச் செய்த பாசுரம் இங்கு நினைக்கத் தக்கது.

பகவானிடத்திலே பக்தி செய்வதாவது 'இவன் பக்தியுள்ளவன்' என்று உலகர் தெரிந்துகொள்ளும்படியாகப் பிரதட்சிணம் நமஸ்காரம் முதலிய நற் செய்கைகளைச் செய்வதேயாம். மனமொழி மெய்கள் மூன்றையும் வேறு பணியில் செல்ல வொட்டாமல் பகவத் விஷயத்திலேயே செல்ல விடுகையைச் சொன்னபடி.

**நல்ல புனலொடு மலர்கள் தூவி** = நல்ல புனல் என்றது—மிகச் சிறந்த தீர்த்தமாகிய கங்கை நீர் காவிரி நீர் முதலியவற்றைச் சொன்னபடியன்று. 'சுத்த கங்கை' என்றால் யமுனை ஸரஸ்வதி முதலிய வேறு நதிகள் கலவாத வெறும் கங்கை என்று பொருள்படுவது போல, ஏலம் லவங்கம் முதலிய நறுமணப் பொருள்கள் கலவாத வெறும்புன லென்றபடி. எம்பெருமானுக்கு இடுவதில் அன்பு முக்கியமே யொழிய, இடும்பொருளில் ஏற்றத் தாழ்வு பார்ப்பவனல்லன் எம்பெருமான் என்பது கருத்து. **புனலொடு** என்ற விடத்து ஒடு—உம்மைப் பொருளது; புனலையும் மலர்களையும் பணிமாறி யென்றபடி. பொதுவாக 'மலர்கள் தூவி' என்றதனால் 'செண்பக மல்லிகையோடு செங்கழுநீ ரிருவாட்சி' என்று சிறப்பித்துக் கூறப்பட்ட பூக்களாக இருக்க வேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை; மலரென்று பேர் பெற்றவற்றில் ஏதேனு மாகலாம் என்பது காட்டப்பட்ட தாகும்.

**எந்தை நாமம் எண்ணுமின்** = 'என் தந்தை' என்பது எந்தை யென மருவிற்று. தந்தையின் பெயரை எண்ணுவதில் என்ன அருமை! என்று காட்டுகிறபடி. நாமம் என்பது பால்பகா அஃறிணைப் பெயராதலால் வாய் வந்த நாமங்களை யெல்லாம் சிந்திக்கலா மென்றபடி. "ஓராயிரமா யுலகேழளிக்கும்" என்றபடி எம்பெருமானது ஒரு திருநாமமே ஆயிரந் திருநாமங்களின் பலனை யளிக்குமாதலால்

ஏதேனுமொரு திருநாமத்தை யெண்ணுமின் என்றதாகவுமாம். அதற்குப் பலன் யாதெனில்,

**இப் பிறப்பறுக்கும்** = "தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறி தசையும் வேண்டா நாற்ற மிகு முடல்" என்று ஞானிகள் வெறுக்கும்படியான இவ் வுடலோடு தொடர்பு ஒழியு மென்றபடி. பகவத்கீதை— நான்கா மத்தியாயத்தில் "ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோவேத்தி தத்வத:, த்யக்த்வா தேஹம் புநர் ஜன்ம நைதி மாமேதி ஸோர்ஜுந!" என்று பகவான் தானே சொல்லி வைத்திருப்பது இங்கு நினைக்கத் தகும்.

"இப் பிறப்பறுக்கும்" என்பதனால், இப் பிறப்பு அற்று மறுபிறவி யுண்டாகுமென்றும் பொருள்படக் கூடுமாதலால், பிறவிப் பெருந் துயர் அறவே தொலையு மென்பது தோன்றப் பின்னடிகள் கூறுகின்றார். விஷயத்தைச் சொல்லுவதற்கு முன்னே "திண்ண நாமறியச் சொன்னோம்" என்றார். சபதமிட்டுச் சொல்லுகிறோ மென்பது கருத்து: அங்ஙனே சொல்லப்படும் வார்த்தை எதுவென்னில்; **செறிபொழிலனந்த புரத்தண்ணலார் கமலபாத மணுகுவார் அமர ராவார்** = செறிந்த சோலைகள் சூழ்ந்ததாம் திருவனந்தபுரம். ஊரைச் சுற்றிச் சோலைகள் சூழ்ந்திருப்பதாகச் சொல்லுவது மட்டும் இதன் கருத்தன்று; "ஆராமஞ் சூழ்ந்த வரங்கம்" என்ற திருமங்கையாழ்வார் பாடலுக்கு நம் ஆசாரியர்கள் பொருள் பணிக்குங் கட்டளையிலே மலைநாட்டுத் திருப்பதிகளை யெல்லாம் தனக்குச் சோலையாக வுடையது திருவனந்தபுரம் என்றதாகக் கொள்க. இப் பதிதன்னிலுறையும் அனந்த பத்மநாப ஸ்வாமியின் திருவடித் தாமரைகளைக் கிட்ட வல்லவர்கள் மானிட வுடலை நீத்துத் திவ்ய தேஹத்தைக் கொள்ளப் பெறுவ ரென்றதாயிற்று.

**அமரராய்த் திரிகின்றார்கட்கு ஆதிசே**
**ரனந்த புரத்து**
**அமரர்கோன் அர்ச்சிக்கின்று அங்கு**
**அகப்பணி செய்வர் விண்ணோர்**
**நமர்களோ சொல்லக் கேண்மின் நாமும்**
**போய் நணுக வேண்டும்**
**குமரனார் தாதை துன்பம் துடைத்த**
**கோவிந்த னாரே.** (6)

முருகக் கடவுளது தந்தையான சிவபெருமானது துன்பத்தைப் போக்கி யருளின பெருமானாய், அமரரென்று பேர் பெற்றுத் திரிகின்றவர்களுக்கும் தலைவனாய்த் திகழும் பெருமான் நித்திய வாஸஞ் செய்யுமிடமான திருவனந்தபுரத்திலே ஸ்ரீ ஸேனாபதியாழ்வான் திருவாராதனம் செய்ய, அதற்குப் பொருத்தமாக அந்தரங்கமான பணிவிடைகளைச் செய்யுமவர்கள் நித்யரும் முக்தருமான விண்ணோராவர்; நம்முடையவர்களே! நாம் சொல்வதைக் கேளுங்கள்; அவர்களோடு நாமுஞ் சென்று கூடிக் கைங்கரியம் செய்ய வேண்டுமென்பது பதப்பொருள். இனி விசேடப் பொருள் கேளீர்.

இப் பாசுரத்தைத் திருவுள்ளத்திற் கொண்டு ஆசார்ய ஹ்ருதயத்தில் இவ்வனந்தபுரத்தில் விளங்கும் திருக்குணத்தைத் தெரிவிக்கின்ற சூர்ணை—"ஸைந்ய புத்ர சிஷ்ய ஸாத்ய ஸித்த பூஸுரார்ச்சனத்துக்கு முக நாபி பாதங்களை த்வாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அனந்த சயனத்திலே வ்யக்தம்" என்பது. இத்தலத்தில் மற்ற திருப்பதிகளிற் போலல்லாமல் மூல மூர்த்தியை ஸேவிக்க மூன்று திருவாசல்கள் அமைந்திருக்கின்றன. ஒரு வாசலாலே திருமுக மண்டல ஸேவையும், மற்றொரு வாசலாலே திருநாபி ஸேவையும், இன்னொரு வாசலாலே திருவடி ஸேவையும் ஆகின்றது. இங்ஙனே மூன்று திருவாசல்கள் இல்லாமல் ஒரே திருவாசலாக இருந்தாலும் மூல மூர்த்தியைப் பூர்த்தியாக ஸேவிக்க முடியாமற் போகாது. அப்படி யிருக்க, இங்ஙனே மூன்று திருவாசல்கள் அமைத்ததன் காரணத்தை இந்த ஆறுவது பாட்டு தெரிவிப்பது போன்றிரா நின்றதென்று ஆசார்ய ஹ்ருதயகாரர் திருவுள்ளம் பற்றி மேலே குறித்த சூர்ணையை அருளிச் செய்திருக்கின்றார்.

இப் பாட்டை உற்று நோக்க வேணும்; இதில் மூவகைப்பட்ட அதிகாரிகள் கூறப்பட்டுள்ளார்கள்; "அமரர்கோன் அர்ச்சிக்கின்று" என்பதனால் நித்ய ஸூரிகளில் தலைவரான ஸேநாபதியாழ்வான் [ஸேனை முதலியார்] அர்ச்சிப்பது சொல்லப்படுகிறது. அவர்கள் திருமுக மண்டலத்தைக் காட்டும் திருவாசலிலே புகுவார்களாம்.

(தொடரும்)

கோயில்கள் செலுத்தியுள்ள

## தேசியப் பாதுகாப்புச் சேமநிதி (Investments)

—: ✳ :—

| | | |
|---|---|---|
| 1. | நவநீதேசுவரசுவாமி கோயில், சிக்கல், தஞ்சை மாவட்டம் | 15,000 |
| 2. | நெல்லிவனநாதசுவாமி கோயில், திருநெல்லிக்காவல், தஞ்சைமாவட்டம் | 1,000 |
| 3. | திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை | 10,000 |
| 4. | கொழுந்தீசுவரசுவாமி கோயில், கோட்டூர், தஞ்சைமாவட்டம் | 10,000 |
| 5. | சுப்பிரமணியசுவாமி கோயில், பழநி, மதுரை மாவட்டம் | 25 000 |
| 6. | மீனாட்சிசுந்தரேசுவரர் கோயில், மதுரை | 50'000 |
| 7. | அனலாடீசுவரர் கோயில், தொட்டியம், திருச்சி மாவட்டம் | 5,000 |
| 8. | காயரோகணசுவாமி, நித்தியகல்யாணி அம்மன்கோயில், நாகப்பட்டினம், தஞ்சை மாவட்டம் | 3,000 |
| 9. | சுவாமிநாதசுவாமி கோயில், சுவாமிமலை, தஞ்சை மாவட்டம் | 5,000 |
| 10. | கபாலீசுவரர் கோயில், மயிலாப்பூர், சென்னை | 2,000 |
| 11. | கலியுகவரதராஜப்பெருமாள் கோயில், கள்ளக்குறிச்சி, திருச்சிமாவட்டம் | 15,000 |
| 12. | சுப்பிரமணியசுவாமி கோயில், குமாரவயலூர், திருச்சிமாவட்டம் | 2,000 |
| 13. | அண்ணாமலைநாதர் கோயில், அந்தணப்பேட்டை, நாகை வட்டம் | 500 |
| 14. | சுவர்ணபுரீசுவரர் கோயில், தெற்குப்பொய்யூர், நாகைவட்டம் | 1,000 |
| 15. | தான்தோன்றீசுவரர் கோயில், சோளப்பேட்டை, மாயூரம்வட்டம் | 1,000 |
| 16. | மதுரைவரதீசுவரர் கோயில், திருவாசி | 2,000 |
| 17. | கோதண்டராமசாமி கோயில், ஸ்ரீரங்கம் திருச்சி மாவட்டம் | 500 |
| 18. | கைலாசநாதசுவாமி கோயில், கம்பரசம்பேட்டை | 1,000 |
| 19. | தியாகராஜசுவாமி கோயில், திருவாரூர், தஞ்சை மாவட்டம் | 15,000 |
| 20. | தியாகராஜசுவாமி கோயில், திருவாய்மூர், தஞ்சை மாவட்டம் | 15,000 |
| 21. | வேதாரண்யேசுவரர் கோயில், வேதாரண்யம், தஞ்சை மாவட்டம் | 20,000 |
| 22. | சாரநாதப்பெருமாள் கோயில், திருச்சேறை, தஞ்சை மாவட்டம் | 7,000 |
| 23. | சொக்கநாதசுவாமி கோயில், மன்னார்குடி, தஞ்சை மாவட்டம் | 1,000 |
| 24. | இராஜகோபாலசுவாமி கோயில், மன்னார்குடி, தஞ்சை மாவட்டம் | 4,000 |
| 25. | தேவபுரீசுவரர் கோயில், தேலூர், நாகை வட்டம் | 5,000 |
| 26. | பசுபதீசுவரர் கோயில், பந்தணைநல்லூர், தஞ்சை மாவட்டம் | 10,000 |
| 27. | நெல்லிவனநாதசுவாமி கோயில், திருநெல்லிக்காவல், தஞ்சை மாவட்டம் | 1,000 |
| 28. | மந்திரபுரீசுவரர் கோயில், கோவிலூர், தஞ்சை மாவட்டம் | 15,000 |
| 29. | பிரம்மபுரீசுவரர் கோயில், அம்பல், தஞ்சை மாவட்டம் | 4,000 |
| 30. | சீராப்தி சயனநாராயணப்பெருமாள்கோயில், திருலோகி, தஞ்சைமாவட்டம் | 200 |
| 31. | சுந்தரேசுவரர் கோயில், திருலோகி, தஞ்சை மாவட்டம் | 300 |
| 32. | பரிமளரங்கநாதசுவாமி கோயில், திருஇந்தளூர், மாயூரம் வட்டம் | 6,000 |
| 33. | அனந்தீசுவரர் கோயில், அடஞ்சியூர், தஞ்சை மாவட்டம் | 250 |
| 34. | வத்தலைநாச்சியம்மன் கோயில், வேங்கடசமுத்திரம், தஞ்சை | 250 |
| 35. | சாட்சிநாதசுவாமி கோயில், திருப்புறம்பயம், கும்பகோணம் வட்டம் | 2,000 |
| 36. | அரங்கநாதசுவாமி கோயில், காரமடை, கோவை மாவட்டம் | 5,000 |

(தொடரும்)

## கோயில்கள் வாங்கியுள்ள

## தேசீயப் பாதுகாப்புத் தங்கப் பத்திரங்கள் (Gold—Bonds)

| | | |
|---|---|---|
| தேவராஜசுவாமி கோயில், காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டம். | 600 | கிராம்கள் |
| கே. என். தேவஸ்தானம், நாகப்பட்டினம், தஞ்சை மாவட்டம். | 150 | ,, |
| கலியுகவரதராஜப்பெருமாள் கோவில், கல்லக்குறிச்சி, திருச்சிமாவட்டம். | 412 | ,, |
| தண்டாயுதபாணிசுவாமி கோயில், பழநி, மதுரை வட்டம். | 4607 | ,, |
| சுப்பிரமணியசுவாமி கோயில், குமாரவயலூர், திருச்சிமாவட்டம். | 104·5 | ,, |
| கபாலீசுவரர் கோவில், மயிலாப்பூர், சென்னை. | 600 | ,, |
| அரங்கநாதர் கோயில், காரமடை. | 434 | ,, |
| அரங்கநாதசுவாமி கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிமாவட்டம். | 3600 | ,, |
| ஜம்புகேசுவரர் கோயில், திருவானைக் காவல், திருச்சிமாவட்டம். | 511 | ,, |
| ஆதிகும்பேசுவரர் கோயில், கும்பகோணம், தஞ்சைமாவட்டம். | 736 | ,, |
| கல்யாணவேங்கடரமணசுவாமி கோயில், தான்தோன்றிமலை, கரூர்வட்டம். | 674 | ,, |
| வேங்கடாசலபதி கோயில், ஒப்பிலியப்பன் கோயில். | 350 | ,, |
| பஞ்சவர்ணீசுவரர் கோயில், உறையூர், திருச்சிமாவட்டம். | 196 | ,, |
| வேதநாராயணப்பெருமாள் கோவில், வேதாரண்யம், தஞ்சைமாவட்டம். | 1443 | ,, |
| வாழைத்தோட்டத்து அய்யன் கோயில், அய்யம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம். | 278 | ,, |
| வைத்தியநாதசுவாமி கோயில், வைத்தீசுவரன் கோயில், சீர்காழிவட்டம். | 466 | ,, |
| பஞ்சநதீசுவரர் கோயில், திருவையாறு, தஞ்சைமாவட்டம். | 165 | ,, |
| சட்டநாதசுவாமி கோயில், சீர்காழி, தஞ்சைமாவட்டம். | 111 | ,, |
| தாயுமானசுவாமி கோயில், திருச்சிமலைக்கோட்டை. | 220 | ,, |
| வேங்கடேசப்பெருமாள் கோயில், நொண்டிப்பாளையம், அவிநாசிவட்டம். | 152 | ,, |
| தண்டுமாரியம்மன் கோயில், ஒப்பிலிபாளையம், கோவைமாவட்டம். | 158 | ,, |
| மருதமலைச் சுப்பிரமணியசுவாமி கோயில், வடவள்ளி, கோவைமாவட்டம். | 188 | ,, |
| அவிநாசிலிங்கேசுவரர் கோயில், அவிநாசி, கோவைமாவட்டம். | 174-96 | ,, |
| திருமுருகநாதசுவாமி கோயில், திருமுருகன்பூண்டி, அவிநாசிவட்டம். | 93-31 | ;; |
| மாரியம்மன் கோயில், கரவலூர், அவிநாசிவட்டம். | 233-28 | ,, |
| நாகநாதசுவாமி கோயில், திருச்சி நகரம். | 263 | ,, |
| ஐந்து கோயில் தேவஸ்தானம், குன்றக்குடி, இராமநாதபுரம்மாவட்டம். | 2822-75 | ,, |
| சாரநாதப்பெருமாள் கோயில், திருச்சேறை, கும்பகோணம்வட்டம் | 53 | ,, |
| மதுரகாளியம்மன் கோயில், சிறுவாச்சூர், திருச்சிமாவட்டம். | 644 | ,, |
| சுப்பிரமணியசுவாமி கோயில், திருச்செந்தூர், நெல்லைமாவட்டம். | 2750 | ,, |
| சங்கரநாராயணசுவாமி கோயில், சங்கரன் கோயில். | 2091-300 | ,, |
| வில்வநாதசுவாமி கோயில், கடையம், அம்பாசமுத்திரம் வட்டம். | 351-650 | ,, |
| நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி நகர். | 396 | ,, |
| புதுக்கோட்டைத் தேவஸ்தானம், புதுக்கோட்டை, திருச்சிமாவட்டம். | 589 | ,, |
| இரத்தினகிரீசுவரர் கோயில், சிவாயம், குளித்தலைவட்டம். | 553-400 | ,, |
| சுவேதாரண்யேசுவரர் கோயில், திருவெண்காடு, சீர்காழிவட்டம். | 582-900 | ,, |
| சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை, இராமநாதபுரம்மாவட்டம். | 1800-65 | ,, |
| இராமநாதசுவாமி கோயில், இராமேசுவரம், இராமநாதபுரம்மாவட்டம். | 761-653 | ,, |
| நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீவில்லிபுத்தூர், ,, | 3941 | ,, |
| வெட்டுடையார் காளியம்மன் கோயில், அரியகுறிச்சி, ,, | 650-800 | ,, |
| வைத்தியநாதசுவாமி கோயில், மடவார்விளாகம், ,, | 678-300 | ,, |
| இராமநாதபுரம் சமஸ்தானம், இராமநாதபுரம். | 1031-400 | ,, |

(தொடரும்)

அறநிலைய ஆட்சித் துறையின்

அலுவலாளர், பணியாளர்கள் அளித்துள்ள

# தேசீயப் பாதுகாப்பு நிதியுதவி (N.D.F.)


—:☀:—

| | | | | ரூ. ந.பை. |
|---|---|---|---|---|
| சென்னை—ஆணையாளரும் பணியாளர்களும் | | | ... | 571—03 |
| சென்னை—துணையாணையாளரும் பணியாளர்களும் | | | ... | 93—41 |
| மதுரை | ,, | ,, | ... | 140—00 |
| தஞ்சாவூர் | ,, | ,, | ... | 23—00 |
| சென்னை—கோயில் நகைகள் சரிபார்க்கும் அலுவலரும் பணியாளர்களும் | | | ... | 25—00 |
| சென்னை—உதவி ஆணையாளரும் பணியாளர்களும் | | | ... | 147—39 |
| காஞ்சிபுரம் | ,, | ,, | ... | 343—00 |
| கடலூர் | ,, | ,, | ... | 79—25 |
| தஞ்சாவூர் | ,, | ,, | ... | 497—03 |
| நாகைப்பட்டினம் | ,, | ,, | ... | 380—80 |
| திருச்சிராப்பள்ளி | ,, | ,, | ... | 595—00 |
| கோயம்புத்தூர் | ,, | ,, | ... | 112—14 |
| சேலம் | ,, | ,, | ... | 119—00 |
| மதுரை | ,, | ,, | ... | 156—00 |
| இராமநாதபுரம் | ,, | ,, | ... | 103—00 |
| திருநெல்வேலி | ,, | ,, | ... | 1,832—94 |
| சுசீந்திரம் | ,, | ,, | ... | 37—00 |

---

**சிறு குறிப்பு:** இடமின்மை கருதி இம் மலரிற் சில கட்டுரைகள், செய்திச் சுருக்கங்கள், தேசீயப் பாதுகாப்புச் சேம நிதி (Investments), தங்கப் பத்திரங்கள், நன்கொடைகள் (Donations) ஆகியவைகள் முழுவதும் வெளியிட முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவைகள் அடுத்த இதழில் வெளியிடப் பெறும்.

—ஆசிரியர்.



திருநெல்வேலி மாவட்டக் கோயில்கள் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில்,
சட்டமன்றத் தலைவர் திரு. S. செல்லப்பாண்டியன் அவர்கள் உரை நிகழ்த்துதல்

## காஞ்சி காமகோடி பீடாதிபதி


# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவா

"குழந்தைகளுக்கு நல்ல குணம் உண்டாக வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உண்மையான தொண்டாற்ற முடியும். பகவானைத் துதித்து அருள்வாக்காகப் பாடிய தொன்மையான பாடல்களை அவர்கள் மனனம் செய்வது அவசியம். இந்தக் காலத்துப் பாடல்களில் மோகம் கொள்ளாமல், ஆண்டாளின் திருப்பாவையிலும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையிலும், குறைந்தது பத்துப் பாடல்களையாவது அவர்கள் பாடவேண்டும்.

தங்கள் குழந்தைகளுக்கு இம்மாதிரியான தெய்வீகப் புனிதப் பக்திப் பாடல்களைச் சொல்லித் தருவதில் பெற்றோர் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த பக்திப் பாடல்களினால் நாட்டுக்கு மட்டுமன்றி, உலக க்ஷேமத்திற்கும் பயன் உண்டாகிறது. எல்லோருடைய உள்ளமும் கோயிலாக இருக்க வேண்டும். ஈசுவரனிடம் பக்தி இருந்தால் நல்ல குணங்கள் தானாக ஏற்படும். இந்த பக்திப் பாடல்களை வாயாரப் பாடவேண்டும்.

மார்கழி மாதம் முதல் தேதிக்குள், குழந்தைகள் மனப்பாடம் செய்து மார்கழி மாதம் முப்பது நாட்களும், விடியற்காலையில் பாசுரங்களைப் பாடிக்கொண்டு சென்று, அருகில் உள்ள ஆலயங்களில் வெளிவீதியை வலம்வந்து கோபுர வாயிலில் நமஸ்கரித்துவிட்டு வரும்படி முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்."

— —



திருவேற்காடு கோயில் கஜப் பிருஷ்ட்ட விமானம்



திருவேற்காடுகோயில் பலிபீடம் சந்நிதி

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34. Printed at Paari Achakam, Madras-1.